உரிமைப் பதிப்பு

முதற் பதிப்பு : 2009

© ஆசிரியருக்கு

3433110

4625778

விலை : ரூ. 70.00

031,3NR, P P9

28633

அல்லயன்ஸ்
கம்பெனி
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி. : 24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : Srinivasan@alliancebook.com

Purchased Under RRRLF
Financial Assistance

மைய நூலகம்
641 002

மாவட்ட நூலக ஆணைக்குழு
கிளை நூலகம்
சங்கனூர்.
கோயம்புத்தூர்

Laser Typeset by - Image Digital, Chennai - 17
Printed at - Kay em Packaging Industries, Chennai - 5

28633

மாவட்ட நூலக ஆணைக்குழு
கிளை நூலகம்
சங்கனூர்.
கோயம்புத்தூர்

# ராத்திரி வரும்

## 1

### ப்ளீஸ் ஒரு கொத்துச் சாவி இருக்கிறதா?

எனக்குப் போரடித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி ஒரு நினைப்பு எழுவதுண்டு எனக்கு. மவுண்ட்ரோடு ரவுண்ட் டாணா அருகே, ஒரு கொய்யாப் பழம் கடித்துக் கொண்டிருக் கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். 'இன்று இந்த மணிக்கு இந்த ரவுண்ட்டாணாவில் இப்படிக் கொய்யாப்பழம் சாப்பிடு வோம் என்று நேற்று நினைத்திருப்போமா?' என்று எண்ணிக் கொள்வேன்.

அந்த மாதிரிதான் இப்போதும் நினைத்துக் கொண்டேன். இப்படி இன்று மாலை, இருட்டிய நேரத்தில், அடையாறில் ஒரு விஸ்தாரமான தோட்டத்தில் உட்கார்ந்து, யாரோ ஒரு பிஜு மகராஜின் பேச்சைக் கேட்போம் என்று நேற்று நினைத்திருப் போமா...

எனக்குச் சற்று முன்னால் அமர்ந்திருந்த சித்தப்பாவுக்கும் போரடித்துத்தான் இருந்தது. அவருக்குப் பக்கத்திலிருந்த முப்பது நாற்பது பேருக்கும் அப்படியே.

ஆனால் பிஜு மகராஜ் தன் பாட்டுக்குச் சொற்பொழி வைத் தொடர்ந்து கொண்டிருந்தார். சன்னமான சின்னக் குரலில்; ஆங்கிலத்தில்.

"...ஆகாயத்தில் சஞ்சரிக்கும் கிரகங்களுக்கும் பூமியின் ஆழத்தில் புதைந்து கிடக்கிற உலோகங்களுக்கும் தொடர்பு உண்டு என்று நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். சூரியனுக்கும் தங்கத்துக்கும் தொடர்பு உண்டு. சந்திரனுக்கும் வெள்ளிக்கும் தொடர்பு உண்டு. செவ்வாய்க்கும் இரும்புக்கும் சுக்கிரனுக்கும் செம்புக்கும்..."

நான் கொட்டாவியை அடக்கிக் கொண்டு, மறுபடி இப்புறமும் அப்புறமும் பார்வையை மேயவிட்டேன். சட்டென என் கவனம் கூர்மைப்பட்டது.

ஒரு வெள்ளை ஸாரிப் பெண்தான் காரணம்.

ஏதோ ஒரு ஓவியத்திலிருந்து பிய்த்துக் கொண்டு வந்தவள் போலிருந்தாள் அந்தப் பெண். அவ்வளவு பிரபோர்ஷனேட் உடம்பு. நல்ல சிவப்பு நிறம். அந்தச் சாயந்தர வெளிச்சத்தில் அவள் கழுத்தில் அணிந்திருந்த கறுப்புமணி மாலை ஒரு தினுசான பளபளப்புக் கொடுத்துக் கொண்டிருந்தது. கூந்தலைக் கழுத்துவரையோடு வெட்டி விட்டிருந்தாள். அப்படி வெட்டிக் கொண்டிருக்கும் பெண்களைக் கண்டால் எனக்கு எரிச்சல் வரும். இப்போது வரவில்லை. அழகுக்காக அந்த வெள்ளைப் புடவையே தவிர, அவள் விதவையல்ல என்று தெரிந்தது.

அவள் ஒரு வெள்ளி டம்ளரில் பாலோ காப்பியோ எடுத்து வந்து பிஜு மகராஜின் அருகில் வைத்தாள். திரும்பிச் சென்றுவிட்டாள், இவ்வளவு அழகான பெண்களை இத்தனை மட்டமான குற்றேவல்கள் செய்ய வைக்கும் அக்கிரமக்காரர்களைச் சுட்டுத் தள்ளவேண்டும் என்று எனக்குக் கோபம் வந்தது.

'ஏய் ஜனா!' என்று என்னை நானே அதட்டிக் கொண்



டேன். உனக்கே ஒரு டிரைவர் டிரைவர் வேலை போட்டுக் கொடுத்து, சோறு போட்டுக் காப்பாற்ற ஒரு சித்தப்பா வேண்டியிருக்கிறது! நீ போய் ஊரிலிருக்கிற இளம் பெண்களையெல்லாம் குற்றேவல்களிலிருந்து காப்பாற்றப் போகிறாயாக்கும்!'

மதுரையை விட்டு வந்து இன்றோடு பதினைந்து நாளாகிறது. ஒரு பெருமூச்சுடன் கணக்குப் போட்டுக் கொண்டேன். பாவம், அக்கா என்ன பண்ணுகிறாளோ? என்னவெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாளோ என்னிடமிருந்து!

பிஜு மகராஜ் பேசிக் கொண்டேயிருந்தார்...

யாரோ சொன்னார்கள் என்று என் ஒன்றுவிட்ட சித்தப்பாவிடம் ஒரு வேலை தேடிப் பதினைந்து நாள் முன்பு வந்தேன்.

"வேலையா? என்ன வேலை? எங்கே இருக்கிறது? யார் சொன்னாங்க?" என்று என்னை ஏற இறங்கப் பார்த்தார் சித்தப்பா புருஷ். (புருஷோத்தமன் என்கிற பெயரை தன் கம்பெனிக்கு மாடர்ன் டச் கொடுக்கும் என்பதற்காகப் 'புருஷ்' என்று சுருக்கி வைத்துக் கொண்டிருந்தார்.) மண்ணடியில் ஒரு குறுகலான தெருவில், ஆனால் பிரம்மாண்டமான மாடியில் அவரது கம்பெனி இருந்தது. இரும்பு பர்னிச்சர் செய்பவர்களுக்கு ஸ்டீல் ஷீட் சப்ளை செய்வது அவர் பிஸினஸ். "ஒரு பதினைந்து பைசா கார்டு போட்டிருந்தால் வராதேன்னு பதில் எழுதியிருப்பேனே? இருபத்தைந்து ரூபாய் செலவழித்துக் கொண்டு மெட்ராசுக்கு வந்திருக்கணுமா?" என்றார்.

எல்லாப் பணக்காரர்களும் மனி– கான்ஷியஸ் ஆசாமிகள் தான். ஆனால் என் சித்தப்பாவின் வாக்கியங்களில் சப்ஜெக்ட் பிரடிகேட் மாதிரி, ரூபாய் என்பது ஓர் இன்றியமையாத அம்சமாக வந்து கொண்டிருந்தது.

சித்தப்பாவுக்கு வயது ஐம்பத்தைந்து இருக்கும். தாட்டியான தேகம். தலை நரைக்காமல் கருகருவென்றிருந்தது. பாதிக் கன்னம்வரை ஸைட்பர்ன்ஸ் வைத்துக் கொண்டிருந்தார்.

"டிரைவிங் தெரியுமா?" என்றார்.

"தெரியும் சித்தப்பா," என்றேன்.

"சார்னே கூப்பிடு," என்றார். சரி என்று தலையாட்டினேன்.

"டிரைவர் ஒரு மாசம் லீவு கேட்டிருக்கிறான், ஊருக்குப் போகணுமாம். சம்பளமில்லாத லீவுதான் தருவேன்னேன். ஒப்புக் கொண்டான். அவனுக்கு இருநூற்று முப்பத்தைந்து ரூபாய் தருகிறேன். நீ புதிசு. இருநூறுதான் தருவேன். அதுவும் நீ ஜானகியோட தம்பி என்கிறதாலே. என்னோடு தங்கலாம். சாப்பிடலாம். வெளியில் தங்கினால் நீ அதுக்கே முன்னூறு ரூபாய் கீழே வைக்க வேண்டியிருக்கும். ஆனால் கரெக்டாய் ஒரே மாதம்தான் வேலை தருவேன். பிறகு..." மூட்டை கட்டுகிற மாதிரி சைகை காட்டி, கையைச் சொடுக்கி ஃபினிஷ் கொடுத்தார்.

...வீட்டை விட்டால் கம்பெனி, கம்பெனியை விட்டால் வீடு என்றிருந்த சித்தப்பா இன்று சாயந்திரம் தான் முதல் தடவையாக வேறோர் இடத்துக்குப் போக வேண்டும் என்று கட்டளை இட்டார்.

"அடையாறு போ," என்றார் சுருக்கமாக.

இதற்கு முன்னாலும் பல முறை நான் மெட்ராஸ் வந்திருப்பதால் வழிகள் தெரியும்.

கலெக்டர் ஆபீஸ் தாண்டி, முதல் லைன் பீச் வழியாகப் போய், மெரினாவை வருடிக் கொண்டே காரைச் செலுத்தினேன். குளுகுளுவென்று காற்று முகத்தில் தவழ்ந்தது. டிரைவிங் படா சுகமாயிருந்தது.



பின் சீட்டிலிருந்து சித்தப்பா, "பிஜு மகராஜாமே? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"பிஜு மகராஜா?" உரக்க யோசித்தேன். "யாரோ சாமியார்னு ஞாபகம்..."

"கரெக்ட். இந்த ஜி.பி. பண்ணின உபத்திரவம் தாங்க முடியவில்லை. அதான் போறேன். மடையனுக்கு இந்த மாதிரி பண்டாரங்கள், சாமியார்கள் கிட்டே ஒரு மோகம். மாசா மாசம் ஐந்நூறு ஆயிரம் செலவழிக்கிறான். பைத்தியக்காரன். வெறுங் கையிலே ரிஸ்ட் வாட்ச் வரவழைக்கிறது. வெறும் தாம்பாளத்திலே விக்கிரகம் கொண்டு வர்றது— இதெல்லாம் பண்ணுகிற சாமியார்களிடம் ஜி.பி.க்கு அபார நம்பிக்கை. அந்த மாதிரி சாமியாராகத்தான் இருக்கும் இந்த பிஜு மகராஜும்... எங்கே நேரே போறே? ரைட்டில் திருப்பு. 'ஒயிட் ஹார்ஸ்'னு பங்களா பேர்..."

கைமேலே ஒரு ரிஸ்ட் வாட்சோ, வெள்ளி விக்கிரகமோ கிடைத்தால் ஆதாயம்தானே என்று கணக்குப் போட்டுத் தான் வந்திருந்தார் சித்தப்பா. ஆனால் பாவம், சரியான ஏமாற்றம்.

உள்ளே நுழைந்து, ஒரே காடாய் வளர்ந்திருந்த மரங்களின் இடுக்குகளில் காரை நிறுத்திவிட்டு—பத்துப் பதினைந்து கார்கள் நின்றிருந்தன— பங்களாவின் முன்புறத்தில் மணல் தரையில் அமர்ந்திருந்த அந்தச் சிறிய கூட்டத்தையும் (முப்பது நாற்பது பேர்தான் இருக்கும்) பிஜு மகராஜ் என்று அழைக்கப் பட்ட நபரையும் பார்த்தவுடன், சித்தப்பாவின் முகம் சட்டென்று சுருங்கிவிட்டது. வெற்று வெளியிலிருந்து பொருள்

களை வரவழைக்கிற டைப் அல்ல இந்த மகராஜ். 'இன்ட்ட லெக்சுவல்' மாதிரி இருந்தார். அடர்த்தியான நரைத்த தலை. நடுவில் வகிடெடுத்து, இருபுறமும் சுருட்டை சுருட்டை யாய் அலைபரவ வாரியிருந்தார். வெள்ளை வெளேரென்று மெல்லிய ஜிப்பா. இரண்டு கை நுழையக் கூடிய தொள தொளா. முழங்கைக்குக் கீழே சுருட்டி விட்டிருந்தார். ரோஜாச் சிவப்பு மேனி. தும்பைப் பூப்போன்ற மில் வேட்டியைத் துவளத் துவளக் கட்டிக் கொண்டிருந்தார். கழுத்தில் ருத்திராட்சமோ நெற்றியில் குங்குமமோ திருநீறோ கிடை யாது. பழைய காலத்து மகாத்மா காந்தி படம் மாதிரி இரண்டு கால்களையும் வலப் பக்கமாக மடித்துக்கொண்டு உட்கார்ந் திருந்தார். இடது கையை ஐந்து விரல்களும் பரப்பின மாதிரி தரையில் ஊன்றி யிருந்தார். வலது கையை லேசாக ஆட்டி— ஆகாயத்தில் படம் வரைகிற மாதிரி — இனிமையான குரலில் பேசினார். பக்கத்தில் சாமி படம் கீமி படம், விளக்கு கிளக்கு, ஊதுவத்தி கீது வத்தி எதுவும் இல்லை. எதிரே முக்கால் வட்ட மாக நாங்கள் அமர்ந்திருந்தோம்.

அப்போதுதான் அந்த வெள்ளை சாரியைக் கவனித்தேன்.

வந்திருந்தவர்களில் பாதிப்பேருக்கு மேல் சஷ்டியப்த பூர்த்தி கேஸ்கள். ஒரு டஜன் பேர் பெண்கள். ஆகவே மிஸ் வெள்ளை சாரியிடம் நான் ஒருத்தன்தான் அக்கறை காட்டிக் கொண்டிருந்தேன்.

நன்றாய் இருட்டிவிட்டது. செங்குத்தான கம்பங்களில் செங்குத்தாகச் செருகப்பட்டிருந்த விளக்குகளிலிருந்து பால் வெள்ளையான ஒளி மெல்லப் பரவியது. பிஜு மகராஜுக்குப் பால் கொண்டு வந்து வைத்தபின் அவள் எட்டத்தில் போய் நின்று கொண்டாள். கூந்தலைக் கோதி விட்டுக் கொள்வதும், புடவையை நீவி விட்டுக் கொள்வதும், அவளுக்கு ஒரு தனியான



கவர்ச்சியாக இருந்தது. பிஜு மகராஜ் பேச்சின் நடுவே ஏதோ ஹாஸ்யம் சொன்னபோது கூட்டத்தினர் உரக்கச் சிரித்தார் கள். அவள் மெல்லிய புன்னகையொன்று மட்டுமே வெளிப் படுத்தினாள். (முன்பே பலமுறை அந்த ஜோக்குக்குச் சிரித் திருப்பாள் போலும்.)

அவள் நின்றிருந்த இடத்தில் ஒரு பெஞ்ச் போடப் பட்டிருந்தது. அதில் ஒரு பிளாஸ்க், வெள்ளிக் கூஜா, டபரா டம்ளர், சிவப்பு நிறத்தில் ஒரு சால்வை முதலியன வைக்கப் பட்டிருந்தன. ஒரு டிரங்குப் பெட்டி இருந்தது. எல்லாம் மக ராஜினுடையவை.

அவள் தன் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள். டிரங்குப் பெட்டியைத் திறந்து ஏதோ எடுக்க முயன்றாள். அதற்கு முன் கூஜாவிலிருந்து தண்ணீர் எடுத்து வைத்துக் கொண்டதிலிருந்து, மகராஜ் சாப்பிட வேண்டிய மாத்தி ரையோ மருந்தோ அந்தப் பெட்டியில் இருக்கிறது என்று ஊகித்துக் கொண்டேன்.

அவள் தன் ஹான்ட்பாக்கிலும் அதனுள்ளிருந்த பர்சிலும் குடைந்து குடைந்து எதையோ தேடினாள். வினாடிக்கு வினாடி அவள் முகத்தில் பரபரப்பு அதிகரித்தது. பங்களாவின் உள்ளே போனாள். திரும்பி வந்தாள். மறுபடியும் டிரங்குப் பெட்டியின் தாழ்ப்பாளை இழுத்துப் பார்த்தாள். கைக்குட்டை யால் நெற்றியைத் துடைத் துக் கொண்டாள்.

பிஜு மகராஜ் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டிருந் தார்.

அவள் கூட்டத்தின் பின்புறமாக வந்து, சிலருடைய முதுகின் பின்னால் குனிந்து மண்டியிட்டுக் கொண்டு கிசு கிசு வென்று ஏதோ கேட்டாள். சிலர் உதட்டைப் பிதுக்கினார்

கள். சிலர் என்னவோ எடுத்துக் காட்ட, பார்த்து விட்டு அவள் உதட்டைப் பிதுக்கினாள். திரும்பிப் போனாள்.

எனக்கு அவள் கஷ்டத்தைக் காணச் சகிக்கவில்லை.

"என்னவாம் அந்த லேடிக்கு!" என்று என் பக்கத்திலிருந்த ஒரு சதாபிஷேகக்காரரைக் கேட்டேன்.

"யார், மிஸ் ஆர்த்தியைச் சொல்கிறீர்களா?" என்றார்.

ஆர்த்தியா அவள் பெயர்! சாக்லேட்டாய்ச் சுவைத்தது. "அ... ஆமாம். ஆர்த்தி... என்னவோ தேடுகிறாரே..."

"சாவி! மகராஜோட பெட்டிச் சாவியைக் காணலியாம். மகராஜுக்குப் பில்ஸ் கொடுக்கிற டயமாம்."

நான் சட்டென்று என் சட்டைப் பையிலிருந்து என் சாவிக் கொத்தை எடுத்துப் பார்த்தேன். மூன்று சாவிகள் இருந்தன. சித்தப்பாவின் வீட்டில் நான் இருக்கும் ரூமுக்கு ஒன்று, அலமாரிக்கு ஒன்று, மற்றது எதற்கு என்று ஞாபக மில்லை.

"ப்ளீஸ்... இதைப் பாஸ் பண்ணுங்கள் மிஸ் ஆர்த்திக்கு," என்று கொடுத்தனுப்பினேன். கை கையாக மாறியது. கடைசியில் ஒருத்தர் எழுந்து போய் அவளிடம் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்து அமர்ந்தார்.

ஆர்த்தியின் முகம் ஆச்சரியத்தாலும் நன்றியாலும் மலர்ந்தது. யார் கொடுத்தார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிற மாதிரி கூட்டத்தினரை ஆராய்ந்தாள். 'ஆர்த்தி! இங்கே பாருங்கள்! இந்தப் பக்கம்! நான்தான் கொடுத்தேன்!' என்று ஆன்சர் தெரிந்த பள்ளிப் பிள்ளை மாதிரி கையைத் தூக்கிக் கூவ வேண்டும் போலிருந்தது எனக்கு.

அவள் பெட்டியுடன் மறுபடி சில நிமிடங்கள் போராடினாள். இப்போது அது திறந்து கொண்டது. புட்டிகளை எடுத்து



உள்ளங்கையில் மாத்திரைகளைக் கொட்டிக் கொண்டாள். தண்ணீரையும் மாத்திரைகளையும் கொண்டு போய், மகராஜின் விலாப்புறமாக நின்று மரியாதையுடன் நீட்டினாள்.

சொல்மாரி தடைப்படுவதை விரும்பாதவர் மாதிரி மகராஜின் முகம் சிறிது கறுத்தது. 'இரு' என்று சைகை செய்து விட்டு மேலும் சில நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்தார் ('சுத்த மானெர்லஸ்!' என்று எனக்குக் கோபம் வந்தது.) பிறகு மாத்திரைகளை வாங்கி விழுங்கினார்.

ஆர்த்தி, அந்தச் சாவிக்கொத்து யாருடையது என்பது தெரியாததால், பிஜு மகராஜின் பக்கத்திலேயே அதை வைத்து விட்டுத் திரும்பினாள். அவர் அதைக் கையில் வைத்து மெல்லச் சுழற்றியபடியே தன் பேச்சை நிகழ்த்தினார். பங்களாவுக்குள் சென்று மறையும் ஆர்த்தியையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

கொஞ்ச நேரத்தில் சொற்பொழிவு முடிந்துவிட்டது. எல்லாரும் மணலைத் தட்டிக் கொண்டு எழுந்திருக்கையில், குறுக்கும் நெடுக்குமாய் மறைப்பவர்களை மீறிக்கொண்டு அந்த வெள்ளை சாரியை என் கண்கள் தேடுகையில், சித்தப்பா என் விலாவில் இடித்து, "டேய் மட்டி! கொத்துச் சாவியைக் கொடுத்தியே, திருப்பி வாங்கிக்க வேண்டாமா?" என்றார். நடந்ததைக் கவனித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறார்.

பிஜு மகராஜின் முன்னே போய்ப் பணிவாகக் கை நீட்டிச் சாவிக் கொத்தைப் பெற்றுக் கொண்டேன்.

காரை ஸ்டார்ட் பண்ணுகையில் ஒருமுறை ஏக்கத்துடன் திரும்பிப் பார்த்தேன்— ஆர்த்தி எங்காவது கண்ணில் படுகிறாளா என்று. ஊகூம்.

மணி பத்து இருக்கும். சித்தப்பா மாடிக்குப் போய்

விட்டார். வீட்டுக்குக் காவலாக டிராயிங் ரூமில் படுக்க வேண்டியது என் ட்யூட்டி.

சட்டையைக் கழற்றினேன். கிளிங் என்று கொத்துச் சாவி மொசைக் தரையில் விழும் சத்தம் கேட்டது. அதுவரை நான் கேள்விப்பட்டிராத விசித்திரமான ஓசை.

சாவிக் கொத்தை எடுத்தபோது என்னுள் ஒரு குறு குறுப்புப் பிறந்து விரைவில் பரபரப்பாக வளர்ந்தது.

மேஜை விளக்கை ஆன் பண்ணினேன். கொத்துச் சாவி யைக் கூர்ந்து பார்த்தேன். மூன்று சாவிகளையும் தனித் தனியே பார்த்தேன்.

படபடப்பு ஏற்பட்டது.

கண்ணைக் கசக்கிக்கொண்டு மறுபடி மறுபடி பார்த் தேன்.

அந்த மூன்று பழைய இரும்புச் சாவிகளும் இப்போது பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தன தங்கம் போல.

என்னுடையவைதானா என்று அலமாரியையும் ரூம் கதவையும் பூட்டினேன். திறந்தேன். என்னுடையதுதான்.

அதற்குள் சித்தப்பா மாடியிலிருந்து இறங்கி வந்துவிட்டார். "யாரப்பா டிராயிங் ரூமில் லைட் போட்டிருக்கிறது இன்னும்? மாசம் நூற்றுமுப்பது ரூபாய் லைட் பில் ஆகிறது. இப்படி எரியவிட்டால் ஏன் ஆகாது?..."

நான் அவரிடம் சாவிக்கொத்தை நீட்டினேன். "இதைப் பாருங்க, சித்தப்பா, இந்தச் சாவியை....'

பார்த்தார், அவர் கண்கள் மின்னின. "என்னது.. தங்கமா?" வார்த்தை குழறியது.



மாடியிலிருந்த தமது அறைக்கு ஓடினார். இரும்பு அலமாரியைத் திறக்கும் ஓசை கேட்டது. மறுபடியும் மூடினார். தடதடவென்று கீழே வந்தார்.

அவர் கையில் நீளமான ஒரு உறைகல் இருந்தது. விளக்கு வெளிச்சத்தில் வைத்துக் கொண்டு, அந்த மூன்று சாவிகளை யும் பரபரப்பாக உறைத்துப் பார்த்தார். அவர் உடம்பின் ஒவ்வொரு அணுவும் துடித்தது.

"ஜனா! ஏய் ஜனா! இது... இது தங்கம்டா! அசல் தங்கம்... சொக்கத் தங்கம்!" என்றார்.

நான் விழித்தேன். "எப்படி... எப்படி சித்தப்பா... அது சாத்தியம்!"

சித்தப்பா அந்தச் சாவிகளைப் பயபக்தியுடன் பார்த்த படியே சொன்னார்: "ஜனா! இரும்புப் பொருள் தங்கமாய் மாறி யிருக்கிறது. இதற்கு பெயர் ரசவாதம். ஆல்க்கெமி. அப்படி யானால்... அப்படியானால்..."

## 2

## பிறத்தியார் சொத்து நமக்கு எதற்கு?

ரசவாதமாவது, ஒன்றாவது! சித்தப்பாவின் முகத்தையே பார்த்தபடி இருந்தேன்.

டிராயிங் ரூமின் மின்சார விசிறி கடகடவென்று ஓசைப் படுத்திக் கொண்டே சுழலுவது கேட்டது. தெருவிலே யாரோ ஒருவர் யாரோ ஒருவரிடம், "நீ என்ன பண்றே, சுக்கும் திப்பிலி யும் பொடி பண்ணி— மருந்துக் கடையிலே கேட்டால் அஷ்ட சூர்ணம்னு சொல்லுவா— அதை ஒரே வேளை.." என்று சொல்லிக் கொண்டு செல்வது கேட்டது.

சித்தப்பா இன்னும் அந்தத் தங்கச் சாவிகளை— சரியாய்ச் சொல்வதானால் தங்கமாக மாறிவிட்ட இரும்புச் சாவிகளை— பார்த்தபடி விளக்கின் கீழேயே நின்றிருந்தார்.

அவர் முகத்தில் இப்போது ஒரு மாறுதல் தெரிந்தது. "ஒரு வேளை சாவி மாறி கீறிப் போயிருக்கலாம்... எப்படி உன் சாவிகள்தான்னு நிச்சயமாய்ச் சொல்வது? இல்லையா?" என்றார்.

அவர் பேச்சு எனக்குத் திகைப்புத் தந்தது.

"சந்தேகமில்லாமல். இப்பத்தான் அலமாரியையும் பெட்டியையும் திறந்து பார்த்தேன். திறக்கிறது, கொடுங்கள். மறுபடி திறந்து காட்டுகிறேன்," என்று கை நீட்டினேன்.

சித்தப்பா கொடுக்கவில்லை, "எதற்கும் நான் வைத்திருக்கிறேன். விடிந்ததும் ஜி.பி.க்குப் போன் பண்ணிக் கேட்கலாம். வேறு யாருடையதோ என்று தெரிந்தால் திருப்பிச் சேர்ப்பித்து விடலாம். பிறத்தியார் சொத்து நமக்கெதற்கு..." என்றவர் சாவிகளைப் பனியனில் இருந்த பையில் போட்டுக் கொண்டார்.

"என்னவோ ரசவாதம்னு சொன்னீர்களே?" என்று கேட்டேன்.

சித்தப்பா சிரித்தார். "அதுவா, நான்கூட ஒரு நிமிடம் அப்படித்தான் நினைச்சிட்டேன்... அதெல்லாம் கட்டுக் கதை. இந்தக் காலத்தில் நடக்கிறதாவது... சரி, படுத்துக்கொள். நேரமாகிறது. மறந்துவிட்டேனே!... காரில் லைட் சரியாகவே எரியவில்லை. நாளைக்கு அதைக் கொஞ்சம் கவனி..." என்று சொல்லிவிட்டு மாடிக்குப் போனார்.

எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. இப்போதே ஷெட்டுக்குப் போய்க் காரைப் பார்த்துவிடலாமே என்று எழுந்து சென்றேன். காரில் விளக்கைப் போட்டுப் பார்த்தேன். சரியாய்த்தான் இருந்தது. திரும்பி வந்தேன்.



விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தேன். வெளியே வேலைக்காரன் வீராசாமியின் குறட்டை பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

என்னை அறியாமலே தூங்கிவிட்டேன் போலிருக்கிறது. நடுவில் ஒருமுறை கண் விழித்தேன். ஹாலில் மணி இரண்டு அடித்தது. எங்கோ விளக்கு வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. சித்தப்பாவின் அறையில்தான். அணைக்க மறந்து போய்த் தூங்கி விட்டாரா என்ன?

என்ன அது... நாற்றம்! புகை நாற்றம்.

எங்கேயாவது தீப்பிடித்திருக்கிறதா என்ன? அல்லது ஒயரில் ஷார்ட் சர்க்யூட்டாகி...

ஐயையோ! சித்தப்பாவின் அறையிலிருந்தல்லவா நாற்றம் வருகிறது! தண்ணீர்! தண்ணீர் எங்கே இருக்கும்? உடனே அணைக்க வேண்டுமே?

கடகடவென்று மாடிப் படியில் தாவி ஏறி, சித்தப்பாவின் அறையை அடைந்தேன். "சித்தப்பா! எங்கேயோ நெருப்பு!" என்று கூவ வாயெடுத்தேன். ஆனால்—

அவர் அமைதியாக ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறாரே!

அறையின் மற்றொரு மூலையிலிருந்து புகை வந்து கொண்டிருந்தது. அங்கே என்ன இருக்கிறது என்று என் பார்வைக்குப் புலப்படவில்லை. சித்தப்பா எழுந்து அங்கு போய்க் கவனிப்பதும் திரும்ப வந்து உட்கார்ந்து எழுதுவதுமாக இருந்தார்.

பிரம்மாண்டமான நோட்டுப் புத்தகம். லெட்ஜர் நோட்டு மாதிரி பெரும் பைண்ட்டாக இருந்தது.

சித்தப்பாவின் நடவடிக்கை எனக்குப் புரியவில்லை.

என்னவோ ரசவாதம் என்று சொல்ல வந்தவர் அந்த பேச்சையே விட்டுவிட்டார். சாவியையும் தன்னோடு எடுத்துக் கொண்டு போய் விட்டார். இங்கே என்னவோ புகைகிறது... அவர் பாட்டுக்கு எழுதுகிறார்...

கீழே இறங்கி வந்துவிட்டேன்.

ஒரே புழுக்கமாயிருந்தது. கீழுக்கு விரித்திருந்த ஜமுக் காளத்தை சுருட்டி எறிந்துவிட்டு ஜில்லென்றிருந்த மொசைக் தரையில் படுத்துக் கொண்டேன். தலையணையையும் வீசித் தள்ளிவிட்டு, தலையின் கீழே கைகளைக் கோத்துக் கொண் டேன்.

அந்தச் சாவி... அழகி ஆர்த்தி... பிஜு மகராஜின் சொற் பொழிவு.. அடையாறு பங்களா.. இவ்வளவு நினைவுக்கும் நடுவே..

மதுரையிலே நாலு வீடுகளில் சமையல் செய்து கொண்டிருக்கும் என் சீதா அக்காவை நினைத்துக் கொண் டேன்.

எங்கள் அம்மா உயிரோடு இருந்தவரையில் தினத்துக் கொரு முறையாவது புலம்பிக் கொண்டிருப்பாள்... ‘சீதேன்னு பெயர் வைக்காதேடி, துன்பத்துக்கு மேல் துன்பம் வரும்டி என்று அத்தை முட்டிக் கொண்டாள். தெரியாமல் பெயர் வைத்தேனே!' என்பாள்— ஏதோ அந்தப் பெயரினால்தான் கஷ்டமெல்லம் வந்த மாதிரி.

எங்கள் அப்பா சாதாரண வக்கீல் குமாஸ்தாதான் என்றா லும் நிறையப் பணம் காசு சேர்த்து வைத்திருந்தார். அவர்



காலமான கையோடேயே சீதா அக்காவுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தாள் அம்மா. ரயில்வேயில் வேலைக்கு இருந்தார் மாப்பிள்ளை. முப்பது பவுனுக்கு நகை போட்டாள்.

எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு போய்விட்டான் ஒரு மோசக்காரன். மாப்பிள்ளை எங்கே அந்த ஆளைப் பிடித்தாரோ தெரியாது. வீட்டிலே பூஜை, மணியோசை, ஊது வத்திப் புகை, ஓமக் குண்டம்தான் இருபத்து நாலு மணி நேரமும். அப்போது நான் எட்டாம் வகுப்புப் பையன். எல்லாம் வேடிக்கையாக இருந்தது.

முப்பது பவுனை அக்கினிக் குண்டத்தில் போட்டு அறுபது நாள் காத்திருந்தால், அறுபத்தொன்றாவது நாள் முன்னூறு சவரனாகத் தங்கம் வரும் என்று அவன் சொல்லி யிருந்தானாம்.

அறுபத்தொன்றாம் நாள் ஆளையே காணவில்லை. நெருப்பிலே போட்ட முப்பது பவுன் நகைகளையும் காண வில்லை. அன்று பூரா என் அக்காவின் கணவர் பிரமை பிடித்தவர் மாதிரி வீட்டிலேயே உட்கார்ந்திருந்தார். இடத்தை விட்டு எழுந்திருக்கவில்லை, குளிக்கவில்லை. அவரை நெருங்கு வதற்கே எங்களுக்கெல்லாம் பயமாகிவிட்டது.

அடுத்த நாள் அவரையும் காணவில்லை. ஊர் பூரா தேடினோம். ஊகூம், ஒரு நாளில் வருவார், இரண்டு நாளில் வருவார் என்று ராத்திரியெல்லாம் வாசல் கதவைத் தாளிடா மல் காத்துக் கொண்டிருந்தோம். போனவர் போனவர்தான்.

பழி தீர்ப்பதற்காகப் புறப்பட்டுப் போனவரை அந்த மோசக்காரனும் அவனுடைய ஆட்களுமாகக் கொலை செய்து விட்டார்கள் என்று பேசிக் கொண்டார்கள்.

சீதா அக்கா உரிமையுடன் தாலியைக் கட்டிக் கொண்டும்

இருக்க முடியவில்லை. உறுதியோடு அகற்றிவிட்டு வாழவும் முடியவில்லை. அவளுடைய நிர்க்கதியான நிலைமையைப் பார்த்துப் புலம்பிப் புலம்பியே எங்கள் அம்மா கண்ணை மூடினாள். சீதா அக்கா எப்படியெல்லாமோ கஷ்டப்பட்டு, என்னைப் படிக்க வைத்து, கிராஜுவேட் ஆக்கினாள். நான் ஒரு வேலையில் சேர்ந்து அவள் கண்ணீரைத் துடைக்க வேண்டும். இன்றளவும் அந்த கடமையை நிறைவேற்றவில்லை. எந்த வேலையில் சேர்ந்தாலும் பத்து நாளில் தொலைத்துத் தலைமுழுகிவிட்டு வந்து நிற்பேன் என்று பெயரெடுத்திருக்கி றேனே...

நினைத்துக்கொண்டே வெகு நேரம் வெறும் தரையில் புரண்டு கொண்டிருந்தேன். எப்போது தூங்கினேனோ தெரிய வில்லை. காலையில் கண் விழித்தபோது சுள்ளென்று வெய்யில் வீசிக் கொண்டிருந்தது. கடியாரத்தின் மணி ஏழரை காட்டியது. சமையல்காரன் குழாயடியில் காப்பிப் பாத்திரங்களைக் கழுவும் சத்தம் கேட்டது.

எனக்கு ஆச்சரியமாயிருந்தது. சித்தப்பா காலை ஐந்து மணிக்கே விழித்துக் கொண்டு விடுவார். நான் டிராயிங் ரூமில் படுப்பது வழக்கமாகையால் என்னைத் தாண்டிக் கொண்டு தான் வரப் போக வேண்டியிருக்கும். ஆகவே அவர் கீழே வரும் நேரத்துக்கு நானும் எழுந்து விடுவேன். என்றைக்காவது நான் அதிக நேரம் தூங்கிக் கொண்டிருந்தால் காலினால் என் விலாவை நிமிண்டி, 'ஏய் ஜனா!' என்று எழுப்பி விடுவார். இன்று...

"காலையில் ஆறு மணிக்கு காரை எடுத்திட்டுப் போயிட்டா ருங்க. உங்களை நேரே கடைக்கு வந்திடச் சொன்னார்," என்றான் தோட்டக்காரன்— கம்— வேலைக்காரனான வீரா சாமி.



ரொம்ப அவசியம் நேரிட்டாலொழிய அவரே காரை ஓட்டிச் செல்வது கிடையாது. இன்று அப்படி என்ன அவசரமோ?

ரோஜாவைப் பறித்து முகர்ந்தபடி யோசித்துக் கொண்டு நின்றேன்.

கேட்டைத் திறந்து கொண்டு யாரோ வருவது தெரிந்தது.

நாற்பது நாற்பத்தைந்து வயது இருக்கும். ஒரு அம்மாள் வந்து கொண்டிருந்தாள். முதலில் அவள் மட்டும்தான் என்று எண்ணினேன். பின்னாலேயே ஒரு பெண் அவள் முதுகுக்குப் பின்னே மறைந்து மறைந்து வந்து கொண்டிருந்தாள். தலை யைக் கூட நிமிரவில்லை. பதினாலு வயது இருக்கும், பாவாடை தாவணி. மாநிறம். அம்மா பெண் என்று சொல்வதற்கு ஜோசியம் தேவைப்படவில்லை.

வீராசாமியின் முகத்தைப் பார்த்தபோது அவனுக்கும் இவர்கள் யாரென்பது தெரியவில்லை என்று தோன்றியது. அந்த அம்மாள் என்னை நெருங்கி, "ஐயா இருக்கிறாரா வீட்டில்?" என்று கேட்டாள். அப்போதும் அவள் மகள் முகத்தை நிமிர வில்லை. ஓரக்கண்ணால் வீட்டையும் தோட்டத்தையும் பார்த்துக் கொண்டு மிரட்சியுடன் நின்றாள்.

"இல்லையே... வெளியே போய்விட்டார். நீங்கள் யார்..." என்றேன்.

"பார்க்கணும் என்று வந்தோம்..." அந்த அம்மாளின் குரலில் மாற்றம் நிரம்பியிருந்தது. "காலங்காத்தாலே புறப் பட்டிருக்க மாட்டார்னு நினைச்சுத்தான் இவ்வளவு சீக்கிர மாய் வந்தோம். கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கலாமா? வந்து விடுவாரா?"

"நேரே கடைக்குப் போய்விடுவார். அங்கே வேணுமானால் பத்து மணிக்கு மேல் வாருங்கள். நீங்க யார்?" என்றேன் மறுபடி.

என் கேள்விக்கு அப்போதும் பதில் வரவில்லை. "ஐயோ, கடைக்கெல்லாம் வேண்டாம். இங்கே வந்ததே கூட அவருக்குப் பிடிக்காது. மனசு கேட்கல்லே. வந்துட்டோம்," என்று அந்த அம்மாள் சொல்லிக் கொண்டிருக்கையில், அந்துப் பயந்த பெண் தாயின் புடவையை மெல்ல இழுத்து, "போய் விடலாம்" என்பது போல் சாடை காட்டினாள்.

"நாங்க சாயந்தரமா வர்றோம்," என்று சொல்லிவிட்டு அந்த அம்மாள் திரும்பினாள்.

"நீங்க யாருன்னு தெரிஞ்சால் அவர்கிட்டே சொல்றேன்," என்றான்.

"நாங்களே நேரில் வர்றோம்..." என்றாள் தாயார். மகளோ முன்னாடியே வாசலுக்குப் போய்விட்டாள்.

வீராசாமி தோட்ட வேலையில் இறங்கிவிட்டான்.

குளிக்கும்போதும் பலகாரம் சாப்பிடும்போதும் பஸ்ஸைப் பிடித்து மண்ணடிக்குப் போகும்போதும் எனக்கு இதுவே உறுத்திக் கொண்டிருந்தது. ஒண்டிக்கட்டையான சித்தப்பாவுக்கு ஏதேதோ ரகசிய ரொமான்ஸ்கள் என்று எண்ணிக் கொண்டேன்.

மண்ணடிக்குப் போனேன். சித்தப்பா அங்கு இல்லை.

மத்தியான்னம் வரை பொழுது போவதே கஷ்டமாயிருந்தது. உத்தியோக வேட்டைக்காக மவுண்ட்ரோடு போக நினைத்திருந்தேன். ஆர்வம் ஏற்படவில்லை.

ஆர்த்தியை இன்னொரு முறை பார்க்க வேண்டும்போல் மனசுக்குள் ஓர் ஆசை...

நேற்றாவது பிஜு மகராஜின் சொற்பொழிவு இருந்தது. உள்ளே போகச் சாக்கு இருந்தது. இன்று என்ன சொல்லி நுழைய



முடியும்?

இருட்டுகிற வரையில் சித்தப்பா ஆபீசுக்கு வரவில்லை. பங்களாவுக்குத் திரும்பினேன். இன்னும் அங்கேயும் வரவில்லை என்று தெரிந்தது. அதற்குப் பதில் காலையில் வந்த அம்மாளும் பெண்ணும் வெராந்தாவில் விசிட்டர்களுக்காகப் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள்.

"இப்ப வந்துடுவாரா?" என்றாள் அம்மாள்.

"தெரியலியே?" என்றேன் எரிச்சலுடன். தங்களைப்பற்றி ஒரு வார்த்தை விடமாட்டார்களாம். நான் மட்டும் இவர்கள் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லவேண்டுமாம்.

"மணி என்ன இருக்கும்?" என்று அந்த அம்மாள் கேட்டாள்.

உள்ளே போய்ப் பார்த்து, "ஏழேகால்" என்றேன்.

"ஐயையோ! எங்களுக்கு எட்டுக்கெல்லாம் ரயிலாச்சே?" என்று தாய் பதைக்க, மகள் அழுதே விடுவாள் போலக் கையைப் பிசைந்தாள்.

"நீங்க... நீங்க ஒரு உதவி செய்ய முடியுமா?" என்றாள் அம்மாள்."

"சொல்லுங்க."

"இவளுக்குத் திருச்சிக்கு வேலை ஆகியிருக்கிறது. நாங்கள் போகிறோம். அவர்கிட்டே சொல்லிக்கொண்டு போகணும்னு தான் பார்த்தோம். உள்ளே அவர் படமாவது இருக்குமே? நமஸ்காரம் பண்ணிட்டுப் போயிடறோம்."

வேடிக்கையாயும் இருந்தது, புதிராயும் இருந்தது. ஆனால் இருவர் முகத்திலும் தென்பட்ட பரிதாபம்...

சித்தப்பாவின் அறையில் அவருடைய பெரிய போட்டோ மாட்டியிருப்பது நினைவு வந்தது. "வாருங்கள்" என்று சொல்லி மாடிக்கு அழைத்துப் போனேன். கதவு வெறுமே சாத்தி இருந்தது. திறந்து விளக்கைப் போட்டேன். "அதோ படம்," என்று காட்டினேன்.

"நமஸ்காரம் பண்ணும்மா," என்று மகளிடம் தாய் சொல்ல, அவள் விழுந்து விழுந்து வணங்கி எழுந்தாள்.

"நாங்க போயிட்டு வர்றோம்," என்று அவள் புறப் பட்டாள். "வந்தது யாருன்னு சொல்லட்டும்?" என்ற என் கேள்விக்கு அப்போது பதில் கிடைக்கவில்லை.

சிறிது நேரம் சித்தப்பா அறையிலேயே நின்றிருந்தேன்.

நேற்று ராத்திரி புகைந்து கொண்டிருந்த மூலையைப் பார்த்தேன். அங்கே எதுவும் இருக்கவில்லை. தரையில் கொஞ்சம் கறுப்பாக மட்டும் இருந்தது.

எதுவோ படபடக்கும் சத்தம்...

திரும்பிப் பார்த்தேன். சித்தப்பாவின் மேஜை மீது அந்தப் பெரிய நோட்டுப் புத்தகம் திறந்தே கிடந்தது. காற்றில் அதன் பக்கங்கள் படபடத்துக் கொண்டிருந்தன. அதை மூடப் போனேன். முதல் பக்கத்தில் என் புத்திக்கு எட்டாத ஒரு படத்தை வரைந்திருந்தார்.

## 3

## நீதான் காவல்! புரிகிறதா?

வெறும் கிறுக்கலா? அல்லது இதற்கெல்லாம் ஏதேனும் அர்த்தம் உண்டா? அந்தச் சின்னச் சின்னப் படங்களையே உற்றுப் பார்த்தேன். பாதி உருவங்களை வரைந்து காட்டி, மீதி



யைப் பூர்த்தி செய்க என்று குழந்தைகளுக்கான புத்தகங்களில் புதிர்கள் போடுவார்களே, அதுபோல் இருந்தது. ஆனால் இவை அந்த மாதிரி வேடிக்கைப் புதிர் அல்ல என்பதும், எதையோ மறைமுகமாகக் குறிக்கும் அடையாங்கள் என்றும் என் அறிவு சொல்லியது.

நோட்டுப் புத்தகத்தின் மற்றப் பக்கங்களையும் புரட்டினால் ஏதாவது தெரியும் என்று எண்ணினேன். ஆனால் அதற்குள் மாடிப்படியில் யாரோ ஏறிவரும் சத்தம் கேட்டது. சித்தப்பாதான் வீடு திரும்பிவிட்டார் என்று நினைத்து அவசரமாக நோட்டை மூடினேன். அட்டை மீது அந்த நோட்டுப் புத்தகத்தின் தலைப்புப் பெயர் ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில் 'திக்'காக எழுதப்பட்டிருந்தது. ஆனால் அதன் மீது எப்போதோ தண்ணீர் சிந்தியிருக்க வேண்டும். *TRANSM-* என்பது வரை பெரிய எழுத்தில் தெரிந்தது. கீழே சின்ன எழுத்தில் *PHILOSO PHER'S ST-* என்பது மட்டும் தெரிந்தது. மற்ற எழுத்துக்கள் கசங்கிச் சிதைந்து மறைந்திருந்தன.

"என்ன சார், கதவு திறந்தா இருந்திச்சு?" என்று வீராசாமியின் குரல் கேட்டது. மாடியேறி வந்தவன் அவன்தான். சித்தப்பா அல்ல.

"ஆமாம்... அந்த அம்மாளும் பெண்ணும் எஜமானர் படத்தைக் கும்பிடணும்னு சொன்னார்களே? அதுக்காக அழைச்சிட்டு வந்தேன். ஏன் வீராசாமி, அவங்க..."

"நீங்க முதல்லே வெளியே வாங்க. ஐயா வந்தால் என் தலையைச் சீவி விடுவார்..." என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறையாக என் பின்னே வந்து நின்று நிர்ப்பந்தம் கொடுத்தான். வெளியேறினேன்.

வீராசாமி கதவை இழுத்துச் சாத்தியதோடு இல்லாமல்

எங்கிருந்தோ ஒரு பூட்டும் எடுத்து வந்து பூட்டினான். "அரை நிமிடம் கூட இந்த ரூம் கதவை ஐயா திறந்து வைச்சிட்டுப் போக மாட்டார். என்னவோ இன்னைக்கு வேறே ஞாபகம் போலேயிருக்கு," என்று முணுமுணுத்துக் கொண்டே சாவியை இடுப்பில் செருகிக் கொண்டு போய்விட்டான்.

சமையல்காரன் தந்த நாலு வரட்டுச் சப்பாத்திகளை விழுங்கிவிட்டு, தன் கணுக்காலுக்கு மேலே பூசினாற் போலுள்ள வீக்கம் எப்போது எப்படி ஏற்பட்டது என்பது பற்றி அவன் அளக்கும் பொய்க் கதைகளையெல்லாம் கேட்டு விட்டு, அவன் தந்த நீர்மோரைக் குடித்துவிட்டு, நான் டிராயிங் ரூமில் வந்து விழுந்தபோது மணி ஒன்பது. அப்போதும் சித்தப்பா வரக் காணோம்.

சோபாவின் கீழே என் பெட்டியை வைத்திருந்தேன். இரண்டு வேட்டி (கிழிசல் தைத்தது), ஒரு பனியன் (கிழிசல் தைக்க முடியாதது), ஒரு ஜிப் வைத்த பர்ஸ் (ஆனால் ஜிப் இல்லாதது) இவைகள்தான் அந்தப் பெட்டி பாதுகாக்கும் பொக்கிஷங்கள். உள் பக்கச் செருகலில் ஒரு வெங்கடாஜலபதி படம் துருத்திக் கொண்டிருக்கும். அதைப் பார்த்துக் கன்னத் தில் போட்டுக் கொண்டு விட்டுத்தான் தலை சாய்ப்பது வழக்கமாகையால், பெட்டியை வெளியே இழுத்தேன். பெட்டி யில் ஒரு தபால் கார்டு இருந்தது. அன்று வந்திருக்க வேண்டும். வீராசாமி வைத்திருக்கிறான். ஆனால் சொல்ல மறந்து விட்டான் போலும்.

மதுரையிலிருந்து சீதா அக்காதான் எழுதியிருந்தாள். குண்டு குண்டான பென்ஸில் எழுத்து. மாற்ற வேண்டிய இடங்களில், எழுதியதை அடித்து எழுதுவதில் அவளுக்கு நம்பிக்கை கிடையாது. விரலால் தேய்த்து விட்டு அதன்மீதே இன்னும் அழுத்தமாக எழுதினால் போதும் என்ற கொள்கை



உடையவள். பாவம், வீட்டில் எந்த மூலையில் எப்படி உட்கார்ந்து கொண்டு இதை எழுதியிருப்பாள் என்று மனக் கண்ணால் கற்பனை செய்து கொண்டே கார்டைப் படித்தேன்.

"என் அன்பார்ந்த தம்பி ஜனாவுக்கு அனேக ஆசீர்வாதம். நீ எழுதிய கடிதம் பார்த்து உன்னையே பார்த்த மாதிரி சந்தோஷப்பட்டேன். சித்தப்பா உனக்கு டிரைவர் வேலைதான் கொடுத்திருக்கிறார் என்று எழுதியிருந்தாய். உடம்பை வருத்திக் கொண்டு நாணய மாய் எந்த வேலை செய்தாலும் அவமானமில்லை. இங்கே உள்ள சிரமம் உனக்குத் தெரியும். ஆகவே கிடைத்த வேலையைப் பிடித்துக் கொண்டு வேறு வேலைக்கு முயற்சி செய். இருப்பதை விட்டு விடாதே. மற்றபடி உடம்பைப் பார்த்துக் கொள். வெய்யில் காலம். அதிகம் அலையாதே.

உன் அன்புள்ள
சீதா அக்கா."

கார்டைப் பெட்டிக்குள் வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டேன். சுருக்கமாய்ச் சொன்னால் வராதே என்கிறாய்! அப்படித்தானே சீதா அக்கா?

டிரைவர் வேலை என்றுதான் அவளுக்கு எழுதி யிருந் தேனே தவிர, டெம்பரரி என்பதைத் தெரிவிக்கவில்லை. இன்னும் பத்து நாளில் பர்மனென்ட் டிரைவர் வந்து விட்டானானால்...! சித்தப்பா கையைச் சொடுக்கி டாட்டா காட்டியது ஞாபகம் வந்தது.

பத்து மணி,பதினொரு மணி, பன்னிரண்டும் அடித்தது. ஜன்னி கண்டவன் மாதிரி அரை நினைப்பும் அரை நித்திரையு மாகப் புரண்டு கொண்டிருந்தேன். காலை மடித்துக் கொண்டு

பிஜு மகராஜ்... ஒயிட் ஸாரி ஆர்த்தி... தங்கச் சாவி... அக்காவின் கார்டு... புகை நாற்றம்... விசித்திரமான படங்கள்...

கார் வந்து நிற்கும் ஓசை எங்கோ கனவில் கேட்கிற மாதிரி இருந்தது. சித்தப்பாதான். ஷெட்டில் காரை விட்டு விட்டு வருகிறார். நாம் போய் உதவலாமா என்று நினைத்தேன். இத்தனை நேரம் எங்கோ சுற்றிவிட்டு வரும்போது, நான் எதிர் கொண்டழைத்தால், அதை விரும்புவாரோ மாட்டாரோ என்று தூங்குகிற மாதிரி படுத்திருந்தேன். வீராசாமி அசலாகவே தூங்கிவிட்டான். சித்தப்பா தன்னிடமிருக்கும் சாவியைக் கொண்டு வாசல் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த பிறகுதான் அவன் எழுந்து வந்தான். மாடியறையின் சாவியை நீட்டி, “ரூம் திறந்து இருந்ததுங்க. பூட்டினேன்,” என்று சொல்லி அவரிடம் தந்தான்.

“திறந்தா இருந்தது? டாமிட்!” என்று திட்டிக்கொண்டே செருப்பைக் கழற்றிப் போட்டுவிட்டு, வேறு சாதா ஸ்லிப்பரை அணிந்து கொண்டு மாடிக்குச் சென்றார்.

கண்ணை இறுக மூடிக்கொண்டு நான் படுத்திருந்தேன். மாடியில் கொஞ்ச நேரம் விளக்கு எரிந்தது. சமையற்காரன் போவதும் வருவதுமாக இருந்தான். இன்று ராத்திரியும் சித்தப்பா விழித்துக் கொண்டு வேலை செய்வாரா என்று யோசித்தபடி நான் காத்திருந்தேன்.

இல்லை. கொஞ்ச நேரத்தில் விளக்கு அணைந்து விட்டது. சித்தப்பா படுத்துவிட்டார்.

மெதுவாய்ப் புரண்டேன்.

கதவினருகே சித்தப்பா கழற்றிப் போட்டிருந்த செருப்புக் கள் கண்ணில் பட்டன. படுக்கும்போது கடைசித் தரிசனம் அதுவாகவா இருக்க வேண்டும்! காலையில் கண் விழிக்கும்



போது முதல் தரிசனமும் இதுவாக அல்லவா இருக்கும்! எரிச்சல் எழுந்தது. பார்வையில் படாத இடத்தில் கொண்டு போய் வைக்கலாம் என்று இரண்டு செருப்பையும் கையில் எடுத்தேன்.

அந்த ஸ்பரிசம் ஆச்சரியம் தந்தது.

செருப்பு ஈரமாய் இருந்ததே காரணம். விளக்கு வெளிச்சத்தில் செருப்பைக் கவனித்தேன். நுனியிலும் குதிகால் பக்கத்திலும் சேறு படிந்திருந்தது.

நல்ல வெய்யில் காலம். சிடியில் எங்கேயுமே ஈரமோ சேறோ இருந்திருக்க முடியாது... காலை ஆறு மணிக்குப் புறப் பட்ட சித்தப்பா இரவு ஒரு மணிக்கு வருகிறார். செருப்பில் ஈரம், சேறு...

அடுத்த நான்கு நாட்களும் சித்தப்பா தானுண்டு, தன் ஆபீஸ் உண்டு என்று இருந்தார். நானும் காலையில் கடைக்குக் கொண்டு போய் விடுவதையும் சாயந்தரம் வீட்டுக்கு அழைத்து வருவதையும் தவிர வேறு எதிலும் புத்தியைச் செலுத்தாமல் இருந்தேன். ஆனால் மனசுக்குள் ஒன்று மட்டும் உறுத்திக் கொண்டேயிருந்தது. அந்தத் தங்கச் சாவிகள் விஷயம்.

எனக்கு என்னதான் உலக அனுபவம் கிடையாது என்றா லும் இரண்டு பவுன் எடை இருக்கக்கூடிய அந்தப் பவுன் சாவிகள் ஆயிரம் ரூபாய்போல விலை போகும் என்று கணக்கிட்டிருந்தேன். சித்தப்பா அப்படியே அமுக்கிவிட்டாரே. மரியாதைக்குக்கூட என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வில்லையே என்று புழுங்கிக் கொண்டிருந்தேன்...

அன்றைக்கு வீடு திரும்பும் போது சித்தப்பா மெல்லச் சீட்டியடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பிசினஸில் ஒரு புரட்டுப் புரட்டி, ஒரே நாளில் இருப்பது முப்பது ஆயிரம் லாபம் பார்த்திருப்பார்...

"சார், அந்தச் சாவி.. அப்புறம் என்ன ஆச்சு?" என்று கேட்டு விட்டேன், துணிச்சலாக.

"அட, உன்கிட்டே சொல்லவில்லையா? அது எவனோ ஒரு பம்பாய்க்காரனுடையதாம். தவறுதலாய் கொடுத் திருப்பாங்கன்னு நான் சொல்லலை? அதேதான். திருப்பிக் கொடுத்துவிட்டேன்," என்றவர், "இந்தா உனக்கு வேறே பூட்டு சாவி போட்டுக் கொள்," என்று இரண்டு ரூபாய் நோட்டைப் பின் சீட்டிலிருந்து நீட்டினார்.

அவ்வளவு தாராளமாக அத்தனை சட்டென்று இரண்டு ரூபாய் கொடுத்ததிலிருந்தே, வேறே எதையோ மறைக்கிறார் என்று நான் ஊகித்துக் கொண்டேன்.

சித்தப்பாவை நினைக்கப் பரிதாபமாய் இருந்தது.

இரும்புச் சாவி தங்கமாக மாறி விட்டாற் போலவும், ரகசியமாக வைத்துள்ள வித்தை தற்செயலாக வெளிப்பட்டு விட்ட மாதிரியும் ஒரு நாடகம் நடத்தி, எந்தப் பணக்காரன் அகப்படுவான் என்று வலை விரித்திருக்கிறார்கள். அதிலே சித்தப்பா விழுந்து விடுவார் போலிருக்கிறதே... ஆனால் இவ்வளவு கெட்டிக் காரரான சித்தப்பா... பிசினஸில் கொட்டி முழக்குகிறவர்...

"சித்தப்பா... என் அக்கா ஜானகியை நினைவிருக்கா?" என்றேன் மெதுவே காரை ஓட்டிக் கொண்டே.

"ஏன், பணம் அனுப்பச் சொல்லி எழுதியிருக்கிறாளாக் கும்?"

"அதில்லை... அவள் புருஷன், பாவம், தங்கம் பண்ணு கிறேன்னு சொன்ன ஒரு ஆளை நம்பி..."

"புரிகிறதுடா, புரிகிறது. ஏய் ஜனா! ஜானகி ஹஸ்பெண்ட் நீதான் காவல்! புரிகிறதா?



மாதிரி இந்தப் புருஷ் ஒண்ணும் ஏமாளியில்லை! கவலைப் படாதே!" என்றார்.

'அப்படியானால் சரி' என்று ஆறுதலடைந்தேன்.

காலை ஒன்பது மணி இருக்கும். ஷெட்டிலிருந்து காரைக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு, ரெடி என்று சொல்வதற்காக மாடிக்குப் போனேன். ஆனால், அறையில் நுழைவதற்கு முன் சித்தப்பாவின் கோபமான குரல் கேட்டது. "என்னய்யா, விளையாடறே? இன்னைக்குள்ளே ஒரு லட்சம் கட்டணு மாவது! என்னது... பாங்குக்காரனுக்கு என்ன, இதுவும் சொல் வான், இதுக்கு மேலேயும் சொல்வான்... சரி, சரி. ஏதாவது பார்க்கிறேன்..."

படக்கென்று வெறுப்பாக போனை வைத்தவர், மறுபடி வேகமாய் டயல் செய்தார். பல முறை செய்தும் நம்பர் கிடைக்க வில்லை போலிருக்கிறது. "ஜனா!" என்று எரிச்சலுடன் கூப்பிட்டார்.

"இதோ சார்," என்றேன்.

"ஏர்போர்ட்டுக்குப் போகணும். நான் போகிறேன். நீ சைக்கிளை எடுத்துக் கொள். ஒரு லெட்டர் தருகிறேன். கணபதி நகரில் ஸ்ரீராம் என்பவரிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு ஆபீசுக்கு வா," என்றார்.

லெட்டரை வாங்கிக்கொண்டு சைக்கிளில் போகும் போது, சித்தப்பா போனில் பேசியது நினைவு வந்தது. அவருக் குக்கூடப் பண நெருக்கடி இருக்குமா என்ன? ஒரு லட்சத்துக்கு எங்கே போகட்டும் என்கிறாரே... ஆச்சரியம் தான்...

மியூசிக் அகாடமிக்குப் பின்புறத்தில் இருந்தது கணபதி நகர். கவரில் இருந்த விலாசத்தைக் கண்டுபிடித்தேன். புதிய

வீடு. சின்னதாய், அழகாயிருந்தது. ஹாலுக்கு வெளியே நின்ற படி, "சார்... சார்..." என்று கூப்பிட்டேன். ஒரு பதிலையும் காணோம். உள்ளே நுழைந்தேன். யாருமில்லை. வலப்பக்கம் ஒரு கதவு தெரிந்தது. அதைத் திறந்தேன்.

திகைப்புடன் திரும்பி என்னைப் பார்த்த உருவத்தைக் கண்டு நானும் திகைத்துப் போனேன்.

ஆர்த்தி, வெள்ளை உடை உடுத்திய, மெல்லியவளான, அழகான, கவர்ச்சியான ஆர்த்தி, என்னவோ தேடிக் கொண்டிருந்தவள் அந்த வேலை தடைப்பட்டு சட்டென்று திரும்பியவள் போல இருந்தது.

"இது... ஸ்ரீராமின் வீடு தானே... புருஷ் அனுப்பினார்... ஸ்ரீராம் இருக்கிறாரா?" என்றேன்.

"நானும் அவருக்காகத்தான் காத்திருக்கிறேன். வெளியே போயிருக்கிறாராம். வந்துவிடுவார்னு சொன்னார்கள்..." என்றாள்.

என்னை அவளுக்குத் தெரியவில்லை என்பது புரிந்தது.

"பிஜு மகராஜின் லெக்சருக்கு நான் என் சித்தப்பா புருஷுடன் வந்திருந்தேன். அன்று உங்களைப் பார்த்திருக் கிறேன்," என்றேன்.

"அட, அப்படியா!" என்று வெகு இனிமையாக ஒரு புன்னகை செய்தாள். "பிஜு மகராஜ் ஃபௌண்டேஷனுக்காக ஒரு டொனேஷன் ட்ரைவ் நடக்கிறது. அது சம்பந்தமாகத் தான் ஸ்ரீராமைப் பார்க்க வந்தேன்..."

திறந்த கதவு வழியே வந்த வெளிச்சம் அவள் முகத்தின் மீதும் மெல்லிய புடவையின் மீதும் அதைத் தாண்டிக்கொண்டு தெரிந்த அழகிய இடையின் மீதும் விளையாடிக் கொண்டிருந்தது.



"நீங்கள் சாவியைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த போது நான்தான் என் சாவிக் கொத்தைக் கொடுத்தனுப்பி னேன்," என்றேன்.

சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தேன். அதில் ஒரு பீதி தெரிந்தது. மேஜையில் எதையோ புரட்டுகிற மாதிரி தலையைக் குனிந்து கொண்டாள்.

நான் விடாமல், "அந்தக் கொத்துச் சாவி அப்படியே தங்க மாக மாறிப் போச்சு," என்றேன்.

அவள் முகத்தில் கலவரம் அதிகரித்தது. "ஸ்ரீராம் வர நேரமாகும் போலிருக்கிறது. நான் அப்புறம் வருகிறேன்..." என்று புறப்பட ஆயத்தமானாள்.

நான் வழியை மறித்தேன்.

"மிஸ் ஆர்த்தி... உங்கள் பிஜு மகராஜ் நிஜமாகவே இரும் பைப் பொன்னாக்கும் வித்தை தெரிந்தவரா... அல்லது..."

"எனக்கு ஒன்றும் தெரியாது. ஒன்றுமே தெரியாது..." என்றாள் ஆர்த்தி.

என் கைகளை விலக்கிக்கொண்டு அவள் வெளியேறிய போதே அந்தக் கண்களில் கண்ணீர் பளபளப்பதைக் கண்டேன்.

இவள் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவளா அல்லது சிக்கிக் கொண்டவளா?

## 4

## இங்கே முக்கியமான வேலை இருக்கிறது!

அன்று பூரா ஆர்த்தியின் அந்தக் கண்ணீர் மல்கிய கண்களேதான் எங்கு சென்றாலும் என்னைப் பின்தொடர்ந்து

வந்தன.

இத்தனைக்கும் அவளை மறக்கும்படியான காரியங்கள் பல நடந்தன அந்த இருபத்து நாலு மணி நேரத்துக்குள்.

ஆர்த்தி புறப்பட்டு விட்டாளே தவிர, அவள் இருந்த போது ஏற்பட்டிருந்த ஒரு நறுமணம் அந்த அறைக்குள்ளேயே உலவிக் கொண்டிருந்தது. அதை நுகர்ந்துகொண்டு நின்றிருந்த சமயம் மாடியிலிருந்து இறங்கிவந்தார்— அவர் தான் வீட்டு எஜமானரான ஸ்ரீராம் என்று ஊகித்துக் கொண்டேன்.

ஏறத்தாழ சித்தப்பா வயசுதான் இருக்கும் அவருக்கு. ஆனால் அவர் பிலுமோடி என்றால் இவர் லால்பகதூர் சாஸ்திரி. குள்ளமாய் ஒல்லியாய், சின்னக் கண்களுடன் கூடிய வழுக்கைப் பேர்வழி.

"யாரோ பெண் வந்திருப்பதாய்ச் சொன்னாயே?" என்று தனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த வேலையாளைக் கேட்டார்.

"அந்த அம்மாள் அப்புறம் வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள்," என்றேன்.

"நீ?" என்றார்.

"மிஸ்டர் புருஷ் அனுப்பினார்," என்று சொல்லி, சித்தப்பா கொடுத்த கவரைக் கையில் கொடுத்தேன்.

பிரிப்பதற்கு முன்னாலே அவர் முகத்தில் ஒரு சலிப்புப் பரவுவதைக் கண்டேன். பிரித்துப் பார்க்கும்போது, "ஊம்... புருஷ் ரொம்ப மோசமாகிவிட்டான்... இது நாலாவது தடவை... அப்படி என்னதான் நெருக்கடி வருமோ?" என்று முணுமுணுத்துக் கொண்டே கடிதத்தை மடித்துப் பையில் போட்டுக் கொண்டு, "சரி, செக் அனுப்புகிறேன் என்று சொல்லு," என்றார்



என்னிடம்.

எனக்கு ரோஷமாக இருந்தது. ஆனால் அவர்களுக்குள் ஆயிரம் இருக்கும். நான் கண்டு கொள்ளாத மாதிரிதான் நடிக்க வேண்டும். "சரி சார்," என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

அப்போதும் ஆர்த்தியின் தீனமான கண்கள் என்னைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. அவள் ஏன் என்னுடன் அந்தத் தங்கச் சாவிகளைப் பற்றிப் பேச மறுத்து விட்டாள்? ஏன் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் போக வேண்டும்?

மண்ணடியில் 'புருஷ் அண்ட்கோ' கடையில் சித்தப்பாவைக் காணோம், காரையும் காணோம். மானேஜர்தான், ஒரு காகிதத்தின்மீது விரலை வைத்துக்கொண்டு நெயில் கட்டரால் நகங்களை வெட்டிக் கொண்டிருந்தார்.

வெட்டிய நகங்களைக் காகிதத்தோடு சுருட்டி வாசலில் கொண்டு போய் எறிந்துவிட்டுத் திரும்பியவர், "ஜனா, இப்படி வா," என்று தன் மேஜையருகே அழைத்தார். போனேன்.

"நீயாவது உன் சித்தப்பாவைக் கொஞ்சம் உரிமையோடு கண்டித்துச் சொல்லக்கூடாதா?" என்று பெருமூச்சு விட்டார்.

"என்னது! சித்தப்பாவைக் கண்டிக்கணுமா? கண்டிக்கும்படியா அவர் என்ன பண்ணினார்? ஏன்..."

"உஸ்! உஸ்! சத்தம் போட்டுப் பேசாதே!" என்று மானேஜர் என்னை அடக்கினார். "நீ நேத்து வந்தவன். உனக்குத் தெரியாது. போன வருஷம் வந்திருந்தாயானால் தெரியும். இப்படியா இருக்கும் கம்பெனி! ஜேஜே என்று என்ன கூட்டம்! ஹோஹோ வென்று என்ன வியாபாரம்! இப்ப பார். ஈ ஓட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோம்."

காலையில், ஒரு லட்ச ரூபாய் பாங்குக்குக் கட்ட வேண்டுமென்று சித்தப்பா அவதிப்பட்டதும், ஸ்ரீராமின் அலட்சியப் பேச்சும் எனக்கு ஞாபகம் வந்தன. "ஏன் சார், இப்பல்லாம் சித்தப்பா வியாபாரத்தைச் சரியாய்க் கவனிக்கிறதில்லையா?" என்றேன்.

"ஆமாம்பா... வர்ற பணம் பூரா எங்கேயோ போயிடுது. யாருக்குத்தான் கொடுப்பாரோ, என்னதான் செலவழிப்பாரோ? அதே சமயத்திலே ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்குக் காட்டச் சொல்லி எங்ககிட்டே கெடுபிடி. த்சு! ஒண்ணும் சுவாரசியமில்லை." என்றவர், நான் எழுந்து கொள்ளும் போது திரும்ப என் சட்டையைப் பிடித்து இழுத்து, "மனசுக்குள்ளே வைச்சுக்க நான் சொன்னதையெல்லாம்,'' என்றார். மண்டையைக் குடைகிற மாதிரி விஷயத்தை வெளிப்படுத்துகிற எல்லாருமே கடைசியில், 'மனசுக்குள் வைத்துக் கொள்,' என்றுதான் முடிப்பது வழக்கம். ஆனால் அது ரொம்பக் கஷ்டமான வேலை.

பகல் மூன்று மணிவரையில் சித்தப்பாவைக் காணோம். ஏர்போர்ட்டிற்கு யாரைப் பார்க்கப் போயிருக்கிறார் என்றும் மானேஜருக்குத் தெரியவில்லை. "டேய் மன்னார்! வெள்ளிக் கிழமை பூஜைக்குப் பூ தேங்காயெல்லாம் வாங்கி வந்துட்டியா?" என்று அவர் விசாரித்துக் கொண்டிருந்தபோது எனக்கு ஞாபகம் வந்தது.

வெள்ளிக்கிழமை வந்து பார் என்று சொல்லியிருந்தான் ஏர் பிரான்ஸ் வேணுகோபால். சிறு வயதில் நாங்கள் இருவரும் சேர்ந்து திருட்டு மாங்காயடிப்போம். அவன் மாங்காய் கடித்துக் கொண்டு ஓடி விடுவான். நான் மாட்டிக் கொண்டு உதை வாங்குவேன். இன்றைக்கும் அவன் பெரிய நிலைமையில் இருக்கிறான். நான், எந்த நிமிடத்தில் என் கார் டிரைவர்



பதவிக்கு முற்றுப்புள்ளி விழுமோ என்று தவித்துக் கொண்டு நிற்கிறேன். போன வாரம் வேலை கேட்டு அவனிடம் போயிருந்த போது இன்று வரச் சொல்லியிருந்தான்.

"சித்தப்பா வந்தால் சொல்லுங்கள். இதோ வந்து விடுகிறேன்," என்று மானேஜரிடம் பர்மிஷன் வாங்கிக் கொண்டு கிளம்பினேன்.

ஒரு ஃபான்ட்டா வரவழைத்துக் கொடுத்த பிறகு வேணுகோபால் கேட்டான்: "பம்பாய் போகிறாயா, ஜனா?"

"அன்டார்க்டிகாவுக்குக்கூட போகத் தயார்," என்றேன்.

"அப்படியானால் ராத்திரி எட்டு மணிக்கு சாந்தோமுக்கு வா. சர்ச் தாண்டி மேற்கே அதே ரோடில் 'சாமுண்டீசு வரின்னு ஒரு பங்களா இருக்கு. அங்கே ஒரு பார்ட்டி. தைரியமாய் வா. பம்பாயிலிருந்து சுலைமான் ஷா என்கிறவர் வந்திருக்கிறார். பெரும் கோடீஸ்வரன். நாளைக்கே உன்னை அழைத்துக் கொண்டு போய் விடுவான். பர்சனல் அஸிஸ்டென்ட்டாகப் போட்டுக் கொள்ளச் சொல்கிறேன். பிறகு குளோப் ட்ராட்டிங் தான். அவன் உலகம் சுற்றும் கிழவன். நீ உலகம் சுற்றும் வாலிபன்!"

அவன் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்ளாத குறையாக நன்றி தெரிவித்துவிட்டுத் திரும்பினேன்.

சித்தப்பா வந்திருந்தார். ஸ்ரீராமைப் பார்த்த விஷயத்தைத் தெரிவித்தேன். மானேஜரிடம், "பாங்க்கைக் கூப்பிட்டு விசாரி, ஸ்ரீராம் கட்டிட்டானா என்று," என்றார்.

மானேஜர் விசாரித்து, "வந்துவிட்டதாம்," என்றார். ஏதோ முனகினாரே தவிர லால்பகதூர் சாஸ்திரி நல்லவர்தான் என்று நினைத்துக் கொண்டேன்.

சற்றே ஃபைனான்ஷியல் கவலை குறைந்ததால் சித்தப்பா சரியான மூடில் இருந்தார். காப்பி வரவழைத்தார், எனக்கும் அரை டம்ளர் ஊற்றித் தந்தார்.

வேணுகோபால் சொன்ன விஷயத்தைக் கூறினேன்.

சித்தப்பா எங்கோ ஞாபகமாக இருந்தார். இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டிருப்பார் என்று நினைத்திருந்தேன். ஆனால் கவனமாக கேட்டிருந்திருக்கிறார். "சுலைமான் ஷாவா? பெரிய ஆளாச்சே? எப்படியும் பிழைத்துக் கொள்ள லாம். விடா தேப்பா. எட்டு மணிக்கா சொன்னான்? ஏழரைக்கே போய்க் காத்திரு," என்றெல்லாம் அறிவுரை கூறி எனக்குப் பிரியாவிடை கொடுத்தார்.

ஐந்து மணிக்கு அவரை வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு, ஆறரைக்கு சாந்தோமை அடைந்துவிட்டேன்.

நாளைக்கு ஊருக்குப் புறப்பட்டு விடுவோம் என்று நினைத்தபோது, ஆரத்தியைப் பற்றிய ஏக்கம் எனக்கு இன்னும் அதிகரித்தது. கடைசியாய் ஒருமுறை அவளைப் பார்த்தால் என்ன என்று ஆசைப்பட்டேன்.

அடையாறுக்கு இதே பாதைதான். போய்விட்டுத் திரும்பி வர நிறைய நேரம் இருக்கிறது...

ஆலமரத்தின் கீழே இன்று லெக்சர் எதுவும் நடைபெற வில்லை. ஆனால் பிஜு மகராஜ் இன்னும் ஊரில்தான் இருக் கிறார் என்பதற்கு அடையாளமாக இரண்டு மூன்று பெரிய கார்கள் நின்று கொண்டிருந்தன.

பூக்கூடை, பழக் கூடைகளோடு ஒருவர், எட்டத்தில் தெரிந்த பர்ணசாலை போன்ற அவுட் ஹவுசை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். அங்கேதான் பிஜு மகராஜ் தங்கி யிருக்க வேண்டும் என்று ஊகித்தேன். சுற்றிலும், கட்டிடத்



தின் மேலும் ஏகப்பட்ட செடி கொடிகள் வளர்க்கப்பட்டு, அது என்னவோ ஒரு பெரும் மல்லிகைப் பந்தல்போல் காணப் பட்டது.

நெருங்கினேன். இரண்டு ஆட்கள் ஹோஸ் பைப் மூலம் தண்ணீரைப் பீய்ச்சியடித்துக் கொண்டிருந்தார்கள் அந்த விடுதியைச் சுற்றி நான்கு புறங்களிலும். ஒரு ஜிப்பாக்காரர் அவர்களை மேற்பார்வை பார்க்கிற மாதிரி நின்றிருந்தார். "ஊஹூம், போதாது. இன்னும் நிறையத் தண்ணீர் ஊற்றுங்கள். குளுகுளுவென்று குளத்துக்கு நடுவே இருக்கிற மாதிரி மகராஜுக்கு இருக்கவேண்டும்," என்று சொல்லிக் கொண்டிருந் தார்.

அந்த இடத்தைக் கடக்கையில் எனக்கு ஞாபகம் வந்தது— அன்று இரவு சித்தப்பாவின் செருப்பில் ஈரமும் சேறும் படிந் திருந்த விஷயம்.

ஈரத்தைத் தாண்டி நடந்தேன். என் செருப்பும் அப்படியே சேறாயிற்று.

'பர்ணசாலை'க்குள் நுழைந்தேன். இரண்டு பக்கமும் வரிசையாக மும்மூன்று அறைகள் தெரிந்தன. நடுவே நடை, நடையின் கோடியில் ஒரு பெரிய ஹாலில் கைகட்டிக் கொண்டு சிலர் நின்றிருந்ததிலிருந்து அங்கேதான் பிஜு மகராஜ் இருக் கிறார் என்று தெரிந்தது.

அங்கே செல்லுமுன்—

"ஓ... நீங்களா..." என்று ஆர்த்தியின் குரல் என்னை வர வேற்றது.

இடப்புறமிருந்த அறைக்குள்ளிருந்து அவள் வந்தாள்.

"மிஸ் ஆர்த்தி... நான் நாளைக்குப் பம்பாய் போகிறேன். அதற்குள் உங்களைப் பார்த்துவிட்டுப் போகணும்போல் தோன்றியது..."

"இப்படி உள்ளே வாருங்கள்," என்று என்னை அழைத்துச் சென்றாள். அங்கே நாற்காலி எதுவும் இல்லை. நின்றபடியே, "நீங்கள் பார்க்க வேண்டியவர் பிஜு மகராஜ்தான். நான் இல்லை," என்றாள் புன்சிரிப்புடன்.

"உங்களைப் பார்க்கத்தான் நான் வந்தேன்." என்றேன் பிடிவாதமாக. "பார்க்கக்கூட இல்லை. கேட்க."

"என்ன கேட்க?" என்று அவள் திகைத்தாள்.

"நீங்கள் ஏன், எப்படி, இங்கே வந்து சேர்ந்தீர்கள்? இதில் ஏதோ இருக்கிறது."

நான் அவளை மேலும் நெருங்கினேன். அந்த அறையின் அரையிருட்டில் அவளுடைய வெள்ளையுடையும், சோகப் பார்வையும் என்னை என்னவோ செய்தன.

அவளுடைய உதட்டிலிருந்து வரப்போகும் ஒவ்வொரு சொல்லையும் இரு கைநீட்டி வாங்கிக் கொள்ளப் போகிற மாதிரி நான் துடித்தேன்.

திடுப்பென அவள் முகத்தில் ஒரு மிரட்சி தென்பட்டது. வாசலில் யாரோ வந்து நிற்பதால் ஏற்பட்ட நிழல் அவள் முகத்தில் வெளிச்சத்தைக் குறைத்தது. திரும்பினேன்.

நீளமான தொளதொளப்பான ஜிப்பா அணிந்திருந்த ஒரு சிவப்பான மனிதன் ரொம்ப மரியாதையோடு நிற்கிற மாதிரி நின்றிருந்தான். "யாரும் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்களா, ஆர்த்தி? சரி, பேசிக்கொண்டிருங்கள். மகராஜ் கூப்பிட்டால் நான் சொல்லிக் கொள்கிறேன்," என்று மிகப் பணிவாகக் கூறிவிட்டு அவன் திரும்பியபோது—

அம்பு அடிபட்ட மானை அதுவரை நான் பார்த்ததில்லை. அப்போது பார்த்தேன். "வேண்டாம், வேண்டாம்.



இதோ நான் வருகிறேன்" என்று பதைத்துக் கொண்டு அவள் ஓடினாள், அந்த ஆளையும் தாண்டிக் கொண்டு.

எட்டு மணிக்கெல்லாம் நான் வீட்டை அடைந்தேன்— சித்தப்பா வீட்டை.

"என்ன, அந்த சுலைமான்ஷா என்ன சொன்னான்?" என்று சித்தப்பா கேட்டார்.

"நான் பம்பாய் போகவில்லை சார்," என்றேன்.

"அடே! ஏம்பா?"

"இங்கே முக்கியமான வேலை இருக்கிறது" என்றேன்.

## 5

## ஆர்த்தி, இது என்ன வடு, தெரிகிறதா?

1877'ம் ஆண்டு, தஞ்சாவூர் ஜில்லாவில் கலெக்டராகக் கொஞ்சகாலம் இருந்த ஓர் ஆங்கிலேயர், பெர்லினில் வசித்து வந்த தன் ஜெர்மன் நண்பரான வான் ஹெர்ஷ் என்பவருக்கு ஒரு கடிதம் எழுதினார்:

"...நான் ஜமாபந்திக்காகப் பல கிராமங்களுக்குப் போகிறேன். பல பேர் என்னைத் தங்கள் வீடுகளுக்கு அழைக்கிறார்கள். பெரும்பாலான வீடுகளில், அருமையான பண்டைய நூல்கள் பாழாகிக்கொண்டிருப்பதைப் பார்க்கையில் எனக்கு மிகுந்த வேதனை உண்டாகிறது. இந்திய தத்துவ சாஸ்திரம் பற்றி நீங்கள் என்னென்னவோ ஆராய்ச்சி பண்ணுகிறீர்கள் அங்கேயே இருந்த வண்ணம். கொஞ்சம் இந்தப் பக்கம் வாருங்கள். பல புதையல்கள் கிடைக்கும்."

இந்தக் கடிதத்தின் பேரில் வான் ஹெர்ஷ் ஒருநாள் சென்னை துறைமுகத்தில் வந்து இறங்கினார். ராஜதானிக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த ராமப்பா என்பவரைத் தனக்கு உதவியாக அழைத்துக் கொண்டார். கலெக்டர் குறிப்பிட்டுச் சொன்ன கிராமங்களில் பழைய நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் திரட்டலானார்.

ஆனால் அவருக்கு ஏமாற்றமே பெரும்பாலும் காத்திருந்தது. கிடைத்த சுவடிகளில் பல ஏற்கெனவே ஜெர்மனியில் அச்சு நூல்களாகப் பதிக்கப்பட்டு விட்டன. மிச்சமுள்ளவை சிரமப்பட்டுப் பதிப்பிக்கும் அளவுக்கு மதிப்புள்ளவை அல்ல.

ஒருமுறை வான் ஹெர்ஷும் ராமப்பாவும் கர்ணநல்லூர் என்ற கிராமத்தில், சாஸ்திரி என்பவன் வீட்டை —என்ன சாஸ்திரி என்று தெரியவில்லை. பொதுவாகச் சாஸ்திரி என்று தெரிகிறது— அடைந்தார்கள். பரணிலுள்ள பல சுவடிகளை எடுத்துத் தந்தார் சாஸ்திரி. 'வேணும் என்கிறதை எடுத்துக் கொண்டு போங்கள்' என்றுதான் பொதுவாகச் சொல்லுவார்கள். சாஸ்திரி அப்படிச் சொல்லாமல், அந்த நூல்களிலுள்ள விஷயங்களை விளக்கியும் சொன்னார். வான் ஹெர்ஷுக்கு ஓரளவு ஆறுதலாயிருந்தது. "அதோ அந்தச் சுவடிகள்?" என்று, பரணிலிருந்து இறக்கப்படாமலிருந்த ஒரு சிறிய கட்டைச் சுட்டிக் கேட்டார்.

"அது ஒன்றும் உபயோகமானதாய்த் தெரியவில்லை. புரியவுமில்லை. முன்னோர் சேகரித்து வைத்ததை எறியக் கூடாதே என்று வைத்திருக்கிறேன்," எனக் கூறிய சாஸ்திரி அவைகளையும் பிரித்துக் காட்டினார். "ரொம்ப சாதாரண விஷயமாக இருக்கிறது," என்று சில பாடல்களைப் படித்துக் காட்டினார்.

வான் ஹெர்ஷ் நெற்றியைத் தேய்த்துக் கொண்டு வெகு நேரம் உட்கார்ந்திருந்தார். "இல்லை சாஸ்திரி. இவ்வளவு அற்ப





மான விஷயத்தைப் போய்ச் சுவடியிலே குறித்திருக்க மாட்டார்கள். மேலோட்டமாகத் தெரிகிற அர்த்தம் தவிர வேறு ஏதோ விஷயமும் இருக்கும்," என்று சொன்னவர், ஒரு வாரம் ராப்பகலாய் அவைகளைத் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருந்தார்.

எட்டாம் நாள் காலையில் ஆற்றங்கரையில் குளித்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று அவருக்கு ஏதுவோ புரிந்தது. ஈரம் சொட்டச் சொட்ட அப்படியே ஓடினார், "சாஸ்திரி! ராமப்பா! நான் கண்டு பிடித்து விட்டேன்!" என்று கத்திய வண்ணம். பாவம், துரைக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று பார்த்தவர்கள் பரிதாபப்பட்டார்கள்.

சாஸ்திரியின் வீட்டில், கதவைச் சாத்திக்கொண்டு, கிசுகிசுத்த குரலில் தெரிவித்தார் வான் ஹெர்ஷ். 'இரும்பைப் பொன்னாக்கும் ரசவாத சாஸ்திரம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? அதைப் பற்றியது."

அவர் விளக்க விளக்க மற்ற இருவருக்கும் ஆச்சரியம் தாளவில்லை. ஆனால் நம்புகிற மாதிரியும் இல்லை.

"புராதன எகிப்தியர்களின் காலத்திலிருந்து இந்த ஆராய்ச்சி நடந்து வருகிறது. நானும் என் நண்பர்களும் ஜெர்மனியில் இதைப் பற்றி அடிக்கடி பேசுவதுண்டு. எனக்குத் தெரிந்ததை உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சுவடிகளின் உதவியைக் கொண்டு நாம் ஆராய்ச்சி பண்ணுவோம்," என்றார் வான் ஹெர்ஷ்.

அன்று தொடங்கி மூன்று வருட காலத்துக்கு ராமப்பாவும் சாஸ்திரியும் வான்ஹெர்ஷும் அதே கர்ணநல்லூர் கிராமத்தில் தங்கி, மூலிகை மூலிகையாகத் தேடி, வேர் வேராக அரைத்து, புகையிலும், நெருப்பிலும் வாடி, இடைவிடாமல்

ஆராய்ச்சி செய்தார்கள். ஆனால் மண்ணைப் பொன்னாக்கி மாபெரும் பணக்காரர்களாக ஆகவேண்டும் என்ற ஆசையினால் அல்ல. தூய்மையான அறிவுத் தாகம்தான் அவர்களைத் தூண்டியது.

மூன்றாவது ஆண்டின் முடிவில், 'ஆர்ஜென்ட்டான்னம்' என்ற புதியதொரு உலோகத்தை அவர்களால் உற்பத்தி செய்ய முடிந்தது. இது தங்கத்துக்கும் வெள்ளிக்கும் நடுப்பட்ட உலோகம். அதன்பின் ஒரு கட்டம் தாண்டினால் போதும், தங்கம் செய்யும் முறை கிடைத்துவிடும்.

அந்தச் சந்தர்ப்பத்தில்தான் திடீரென்று ஒருநாள் சாஸ்திரி பாரிச வாயுவுக்கு ஆளாகி, படுத்த படுக்கையாக ஆனார். அதற்குமேல் அவர்கள் தங்கள் ஆராய்ச்சியைத் தொடர முடியாது என்றாகிவிட்டது.

அதுவரை தாங்கள் கண்டறிந்த உண்மைகளைத் தொகுத்து வைத்தார்கள். மூன்று பாகங்களாகச் செய்து பிரித்துக் கொண்டார்கள். "இன்னும் நூறு வருஷம் கழித்து நம் குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து இந்த விந்தையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு முன் கூடாது," என்று மூவருமாகத் தீர்மானம் செய்து அதை எழுதியும் வைத்தார்கள்.

இவ்வளவையும் சொல்லி முடித்தபோது ஆர்த்தியின் நெற்றியில் பொடிப் பொடியாய் வியர்த்திருந்தது. இத்தனைக்கும், சுகமான காற்று வீசும் மாலை நேரம் அது.

அடையாறிலிருந்து திருவான்மியூர் செல்லும் பாதையில் பஸ் ரோடுக்குக் கொஞ்சம் தள்ளி ஒரு சிறிய சிவன் கோவில் இருக்கிறது. அதன் பிராகாரத்தில் இடிந்து சிதைந்த சுவரின் மீது சாய்ந்தாற்போல் நானும் அவளும் அருகருகாக உட்கார்ந்திருந்தோம். கைக்குட்டையில் முகத்தை ஒற்றிக்கொண்டு, தன்



நெர்வஸ்னஸ்ஸை மறைப்பதற்காக அவள் சோகமான ஒரு புன்னகையை வெளியிட்டாள்.

அவளை இங்கே அழைத்து வர நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். அன்று, 'மகராஜ் கூப்பிடுகிறார்,' என்று அந்த ஆள் வந்து அழைத்தவுடன் ஆர்த்தி மிரட்சியுடன் போய் விட்டது என் கண்ணெதிரிலேயே இருந்ததால், அவளை அப்படிச் சும்மா விட்டு விட எனக்கு மனம் வரவில்லை. யாரோ ஒரு முன்பின் தெரியாத பெண்ணைக் காப்பாற்ற நாம் யார் என்ற எண்ணம் எழுந்த போதிலும் அதை அடக்கிக்கொண்டு ஆர்த்தியைத் தனியே சந்தித்து இன்னொரு முறை பேச ஆசைப்பட்டேன்.

அடுத்த இரண்டு மூன்று நாளும் சித்தப்பா என்னைச் சிறிதும் அசைய விடாமல் பிடித்து வைத்துக் கொண்டிருந்தார். வண்டியைக் கொஞ்சமும் தான் ஓட்டாமல் என்னையே ஓட்டி வரச் செய்தார். அவர் நெருக்கடி தீரவில்லை போலிருக்கிறது. தினம் பல பெரும் பிசினஸ் புள்ளிகளை அவர் சந்திப்பதும் கவலையுடன் திரும்புவதுமாக இருந்தார். மனம் குழப்பமாக இருக்கும்போது கார் ஓட்டுவானேன் என்று நினைத்தோ என்னவோ என்னை விடாமல் கூப்பிட்டார்.

பண விஷயத்தில் குறியாயிருக்கிறார் என்ற ஒன்றைத் தவிர, மற்றபடி சித்தப்பாவிடம் எனக்கு ஓரளவு பிரியம் ஏற்பட்டு விட்டது. பாவம், அவர் கஷ்டங்கள் சீக்கிரமே தீர வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன். சரியாய் ஆறு நாள் இப்படி அலையாய் அலைந்த பிறகு, "நீ இன்றைக்கு லீவு எடுத்துக் கொள்வதானால் எடுத்துக் கொள்," என்று பெருந்தன்மையோடு இன்று காலை எட்டு மணிக்கு அனுமதி தந்தார்.

அப்போது முதல் பன்னிரண்டு மணி வரையில் அடையாறு மாளிகைக்குச் சற்றுத் தள்ளி, பஸ் ஸ்டாப்பினருகே

Optimized using trial version www.balesio.com

இருந்த ஒரு கடையிலேயே பழி கிடந்தேன். ஏழாவது கப் டீயை உறிஞ்சிக் கொண்டிருந்தபோது, அந்த மாளிகைக்குள்ளிருந்து வேலைக்காரன் போல ஒரு ஆள் வெளிப்பட்டான். அவனைக் கெஞ்சிக் கூத்தாடி ஆர்த்தியைப் பார்க்க வேண்டுமென்று சொன்னேன். வெகு நேரம் கழித்து நான் நின்றிருந்த பஸ் ஸ்டாப்புக்கு ஆர்த்தி தயங்கித் தயங்கி வந்து சேர்ந்தாள். "மறு படியும் நீங்களா?" என்றாள் என்னைத் தெரிந்து கொண்டு.

"மறுபடியும், மறுபடியும் நானேதான்," என்றேன். "ஆர்த்தி தயவு செய்து என்னை நம்புங்கள். நீங்கள் என்ன கஷ்டத் திலிருந்தாலும் நான் காப்பாற்றத் தயார்."

ஆர்த்தி, பஸ் வருகிறதா என்று பார்க்கிறவள் மாதிரி இரண்டு பக்கமும் எச்சரிக்கையாகப் பார்த்து விட்டு, "இப்போது வேண்டாம். சாயந்தரம், அதோ கோபுரம் தெரிகிறதே, அந்தச் சிவன் கோவில்..." என்றாள். போய்விட்டாள்.

கோவிலுக்கு வந்த பிறகு கூட அவள் என்னிடம் இவ்வளவு கிடுகிடுவென்று உடனே எல்லாவற்றையும் சொல்லி விடவில்லை. பத்து நிமிட நேரம் வரை எதுவும் பிடி கொடுக்காமல்தான் இருந்தாள்.

"ஆர்த்தி, இது என்ன வடு, தெரிகிறதா" என்று என் மணிக் கட்டைக் காட்டினேன்.

அவள் திகைப்புடன், "ஏன், ரிஸ்ட் வாட்ச் கட்டின வடு மாதிரி இருக்கிறது," என்றாள்.

"அதேதான், பி.யூ.ஸி.பாஸ் பண்ணியபோது என் ஏழை அக்கா எனக்கு வாங்கித் தந்த கடியாரம். நேற்று சாயந்தரம் ஒரு மார்வாடிக் கடைக்குப் போய்விட்டது," என்று சொல்லி, சௌகார் கடையின் சிவப்பு ரசீதை எடுத்துக் காட்டினேன்.



"எதற்கு இதெல்லாம் என்னிடம் சொல்கிறீர்கள்?" என்றாள்.

"நான் டெம்பரரி டிரைவராக வேலை பார்க்கிறேன். வெளியூரில் வேறு நல்ல வேலை கிடைத்தது. போயிருக்கலாம். உங்களுக்கு உதவி செய்யணும் என்கிறதுக்காகவே மெடராசில் தங்குவதென்று தீர்மானித்தேன். செலவுக்காக ரிஸ்ட் வாட்சை அடகு வைத்திருக்கிறேன்," என்றேன்.

இது ஒரு பிரமாதமான சாட்சியம் இல்லையென்றாலும் என் அந்தரங்க சுத்தியில் அவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அவள் என்னை நம்புகிறாள் என்பது அவள் கண்களில் தெரிந்தது.

அதன் பிறகுதான் ஆர்த்தி மெல்ல மெல்ல அந்த ரசவாத ஆராய்ச்சியின் ஆச்சரியமான வரலாற்றைச் சொல்லி முடித் தாள்.

கோவிலுக்குள்ளிருந்து டணால் டணாலென்று மணி யோசை கேட்டது. பிராகாரத்தில் வலம் வந்து கொண்டிருந்த வர்கள் வேகமாக விரைந்தார்கள்—அதே சமயம் எங்களை ஒரு தினுசாகப் பார்த்தபடியே.

ஆர்த்தி ஒரு குச்சியினால் தரையில் கோலம் வரைந்து கொண்டே பேசினாள். அவள் தலை குனிந்திருந்ததால், அந்தக் கூந்தலின் முழுப் பரப்பும் பளபளப்பும் தெரிந்தன. காற்றில் மெல்லச் சிலிர்த்துப் பறக்கும் அந்த நுனிகளைத் தொட வேண்டும் போலிருந்த ஆசையைக் கட்டுப்படுத்திக் கொண் டேன்.

ஆர்த்தி சொன்னாள்: "நான் சொன்னதெல்லாம் 1877'ம் வருடம் நடந்தது. இது 1977'ம் வருடம். மூன்று பேரின் சந்ததி யினரும் ஒன்று சேர்ந்து ரகசியத்தை வெளிப்படுத்த வேண்டிய

வருஷம் இது..."

"யார் அவர்கள்?" என்றேன். "வான் ஹெர்ஷ் ஒரு தமிழ்ப் பெண்ணை மணந்துகொண்டு இங்கேயே செட்டிலாகி இறந்து போனார். அவருடைய வம்சத்தில் வந்தவர் இந்த பிஜு மகராஜ். அதனால்தான் அரை வெள்ளைக்காரர் மாதிரி இருக் கிறார். பரம்பரையாக வந்த அறிவோடு, தானாகக் கற்றதையும் வைத்து லெக்சர்கள் நடத்துகிறார்."

"நீங்கள்?"

"நான் ராமப்பாவின் குடும்பம்," என்றவள், சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். "ராமப்பா என் கொள்பாட்டனார். எங்கள் குடும்பம் எந்தக் காலத்திலேயோ பிழைப்புத் தேடி வடக்கே போய்விட்டது. பீஹாரின் ஒரு கோடியில் என் அம்மா வும் இரண்டு அண்ணன்களும் மூன்று தம்பிகளும் சுரங்கத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். வறுமை என்றால் எப்படி இருக்குமென்பதை அங்கே வந்து நீங்கள் பார்க்க வேண்டும். நான் கொஞ்சம் படித்தேன். வேலை கிடைக்கவில்லை. இரண்டு வருஷம் முந்தி, பிஜு மகராஜ் எப்படியோ எங்களைத் தேடிக் கண்டு பிடித்தார். எங்கள் குடும்பத்தில் ஒரே செல்வம் போல என் தாத்தாவும் அப்பாவும் காப்பாற்றி வைத்திருந்த ஓலைச் சுவடிகளை அம்மா எடுத்துக் கொடுத்தாள். மூன்றாவது நபர் யாரென்று தெரியவில்லையாம். அவரை இருவருமாகக் கண்டு பிடிக்கலாம் என்கிறார் பிஜு மகராஜ். அதற்காகத் தன்னுடன் செக்ரட்டரி மாதிரி வரும்படி என்னை அழைத்தார். ஒரு வயிற்றுப்பாடு தீர்ந்தது என்று என் அண்ணன்களும் அம்மாவும் உடனே ஒப்புக்கொண்டு விட்டார்கள்."

நான் குறுக்கிட்டேன்: "உங்களுக்குத் தயக்கமாயிருக்க வில்லையா?"



"முதலில் கொஞ்சம் இருந்தது. பிறகு போய்விட்டது. பிஜு மகராஜ் வேறு எந்த விஷயத்தில் எப்படியோ, பெண்கள் விஷயத்தில் ரொம்ப சுத்தம். என்னை ஒரு தப்பான பார்வை பார்த்தது கிடையாது."

இப்படி அவள் சொன்னதும் நான் என் பார்வையைத் தாழ்த்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

"ரசவாத ரகசியம் பற்றி அவர் சொல்லித்தான் உங்களுக் குத் தெரியும். இல்லையா?" என்றேன்.

"ஆமாம். 'இரும்பைப் பொன்னாக்கும் வித்தையைப் பற்றி மூன்றில் இரண்டு பங்கு ரகசியம் நம்மிடம் இருக்கிறது. மூன்றா வது பகுதியை வைத்திருக்கும் சாஸ்திரி வம்சத்தவர் எங்கே இருக்கிறார்களென்று தெரியவில்லை. அதைக் கண்டு பிடிக்க வேண்டியது நம் வேலை,' என்று சொன்னார். கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத எத்தனையோ கஷ்டங்களை என் குடும்பத்தில் பார்த்தவள் நான். தங்கமாக்கும் ரகசியம் தெரிந்து விட்டால் அதெல்லாம் தீருமே என்ற நப்பாசையில் தான் நானும் அவருடன் சேர்ந்து தேடுகிறேன்."

நான் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். அந்தக் கறுத்த விழிகளில் சஞ்சலம் படர்ந்திருந்தது.

"ஆர்த்தி, உங்களிடம் ஒன்று கேட்கலாமா?" என்றேன்.

"ஓ, கேளுங்களேன்."

"சந்தோஷம் தரக் கூடிய ஒரு முயற்சியில் நீங்கள் ஈடு பட்டிருக்கிறீர்கள். பின்னே ஏன் உங்களிடம் ஒரு அனாவசிய பயம் இருந்து கொண்டிருக்கிறது?"

அவள் ஏதோ பேச ஆரம்பித்தாள். "என்றைக்கு அந்த மூன்றாவது நபர் அகப்படுகிறாரோ... என்றைக்கு ரசவாத

ரகசியம் பூர்த்தியாகத் தெரிகிறதோ அன்றோடு... அன்றோடு..."

அதன் பின் அவள் பேச்சு நின்றுவிட்டது.

எனக்குச் குப்பென்று அந்த எண்ணம் உதித்தது. "ஆர்த்தி, ரகசியம் மொத்தமும் தெரிந்த பிறகு உங்களுக்கும் அந்த மூன்றாவது நபருக்கும்... உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்று நினைக்கிறீர்கள். அதுதானே உங்கள் பயம்?"

ஆம் என்று அவள் சொல்லவில்லை. இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு விம்மினாள்.

## 6

## அது முடியாதுங்க, இது ஸ்பெஷல் பொத்தான்

ஆர்த்தியிடம் ஏற்கெனவே எனக்கு இருந்த அனுதாபமும் பரிதாபமும் அவள் விசித்து விசித்து அழுவதைப் பார்த்து இன்னும் அதிகமாகிவிட்டது. அவள் மனச் சுமை குறையட்டும் என்பதற்காக அந்த அழுகையை நிறுத்தாமல் சற்று நேரம் காத்திருந்தேன். ஆனால், நாங்கள் இருந்த இடம் ஒரு கோவில் என்பதும், நடமாட்டம் நிறைய உள்ள சாயந்தர வேளை என்பதும் ஞாபகம் வந்தவளாக ஆர்த்தியே கண்களைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு முகம் நிமிர்ந்தாள். அப்போதும்கூட, இமையின் ஒரு மயிர்க் காலில் பனிப் பொட்டுப் போல் ஒரு கண்ணீர்த் துளி பளபளத்துக் கொண்டிருந்தது. பிஜு மகராஜின் வரலாற்றையும் தன் கதையையும் அவள் சொன்னதே என்னிடம் அவள் முழு நம்பிக்கை வைத்திருக்கிறாள் என்பதற்கு அடையாளமாக இருந்தது. என் எதிரில் தன் அந்தரங்கத்தை மறைக்க முடியா மல் அவள் அழுதது எனக்கு இன்னும் நெருக்கமாக அவளைக் கொணர்ந்தது.



"ஆர்த்தி! என்ன அர்த்தமற்ற பயம் உனக்கு!" என்று கூறி உரிமையோடு அவள் கண்ணைத் துடைத்து விட்டேன். "உன் படிப்பு, வயது, திறமை எல்லாவற்றையும் மறந்து விட்டுக் குழந்தை மாதிரி அழுகிறாயே! அந்த பிஜு மகராஜ் இல்லை, அவனைப் போல எட்டுப் பேர் வந்தாலும் உன்னை ஒன்றும் செய்துவிட முடியாது. நான் உனக்குத் துணை இருக்கிறேன்," என்றேன்.

அவள் முகத்தில் பீதி சற்று மறைந்தது.

"அந்த ரசவாத ரகசியத்தின் மூன்றாவது பகுதி கிடைத்தால்தானே உனக்கு ஆபத்து? உன்னையும் அந்த மூன்றாவது ஆளையும் கொலை செய்துவிட்டுப் பிஜு மகராஜ் ஓடி விடுவான் என்று பயப்படுகிறாய்? நீ அந்த ரகசியத்தைத் தேடாமலே இருந்துவிட்டால்?"

"என் அம்மா இப்போது மாற்றுப் புடவை இல்லாமல், ஈரப்புடவை உலருகிற வரையில் ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு குடிசைக்குள் முடங்கிக் கிடக்கிறாள். அப்படியே கிடப்பாள். என் தம்பிகள், தின்ன ஏதாவது தர மாட்டார்களா என்று ஒவ்வொரு சினேகிதன் வீட்டு வாசலிலேயும் விளையாடுகிற மாதிரி பசியோடு நின்று கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து நிற்பார்கள். என் அண்ணன்கள், துன்பத்தை மறப்பதற்காகக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் குடித்துக் கொண்டிருப்பார்கள். என்னைப் போல ஏழைகளுக்கு இந்த மாதிரி ஏதாவது குருட்டு அதிர்ஷ்டம் அடித்தால்தானே உண்டு? அதற்காகத்தான் ரசவாத ரகசியத்தை அறிந்து கொள்ள பிஜு மகராஜுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறேன்."

நான் சொன்னேன்: "ஆனால் உன் முன்னோர்கள் கூட இன்னும் அதை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யவில்லையே?

முக்கால்வாசி ஆராய்ச்சிதானே செய்திருக்கிறதாகச் சொல்கிறாய்?"

"அந்தப் பாக்கி வேலையைச் செய்யக்கூடிய அறிவு பிஜு மகராஜ் ஒருவருக்குத்தான் இருக்கிறது. அவரைப் பிரிந்துபோக நான் இஷ்டப்படாததற்கு அதுவும் ஒரு காரணம்," என்றாள் ஆர்த்தி.

எனக்கு அவளுடைய நிலைமையைக் குறித்து இரக்கம் ஏற்பட்டது. கிடைத்தால், இரும்பைப் பொன்னாக்கும் வித்தை கிடைக்கப் போகிறது.. போனால் உயிரே போகப் போகிறது.

ஆர்த்தியின் கண்கள் சஞ்சலத்துடன் இங்குமங்கும் சஞ்சரித்தன. "பிஜு மகராஜ் இங்கேயும் வந்துவிடுவார் என்று உனக்குப் பயமாயிருக்கிறதா?" என்றேன்.

"நான் அவரைச் சந்தேகிக்கிறமாதிரி அவரும் நான் அவரை டபிள்கிராஸ் செய்துவிடுவேன் என்று சந்தேகிப்பது நியாயம்தானே?" என்றாள். "நிழல் மாதிரி யாராவது ஒரு ஆளை என் பின்னால் அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால் இன்றைக்கு யாரும் வந்ததாகத் தெரியவில்லை."

"நீ என்ன சொல்லிவிட்டுப் புறப்பட்டாய்?"

"டொனேஷனுக்காக ஒருத்தர் வரச் சொல்லியிருக்கிறார் என்றேன். போகும்போது எந்தப் பணக்காரரையாவது பார்த்து விட்டுப் போக வேண்டும். அனேகமாய்க் கொடுத்து விடுவார்கள்."

"நீ எதிரில் போய் நின்றால் போதுமே, கொட்டிவிட மாட்டார்களா!" என்றேன். இருந்தாலும், என் மனசின் ஒரு மூலையில் ஒரு ஜெலஸி எழுந்தது— எனக்கு உரிமையானவள் பிறரெதிரில் கையேந்தி நிற்பதா என்பதுபோல.

28633



கிளை நூலகம் கோயம்புத்தூர்

"ஆனால் உங்கள் சித்தப்பாவிடம் மட்டும் ஒரு பைசா கூடப் பெயர்க்க முடியவில்லை," என்றாள்.

"தங்கச் சாவியை எடுத்துக் கொண்டு உங்களிடம் ஓடி வந்தாரே? அதுதான் வழக்கமாக நீங்கள் போடுகிற தூண்டிலா?"

"ஆமாம். சாவி— பேனா— இந்த மாதிரி ஏதாவதொன்றை அதேபோல் முன்னதாகவே ஒன்று செய்து வைத்திருந்து, அது தங்கமாக மாறிவிட்ட மாதிரியும், தற்செயலாக ரகசியம் வெளிப் பட்டுவிட்ட மாதிரியும் பாசாங்கு செய்வார். பார்க்கிறவன், பிஜு மகராஜுக்கு ரசவாத வித்தை தெரிந்து இருக்கிறது என்று நினைத்து ஓடி வருவான். மகராஜ் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று மறுப்பார். தெரிந்தாலும் சொல்வதற்கில்லை என்பார். இப்படியே மறுக்க மறுக்க அவர் மீது மரியாதை அதிகமாகும். என்றாவது ஒரு நாள் ரகசியத் தைத் தனக்கு மட்டும் சொல்வா ரென்று எதிர்பார்த்து எல்லாப் பணக்காரர்களுமே ஆயிரக் கணக்கில் அவர் காலடியில் கொட்டுவார்கள். அதே சமயம், அவர்களுக்கோ அவர்கள் குடும்பத்துக்கோ ரசவாதம் பற்றி ஏதாவது தெரிந்திருக்கிறதா என்று பிஜு மகராஜும் ஆழம் பார்ப்பார். ஆனால் உங்கள் சித்தப்பா சிக்கவில்லை. கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போய்விட்டார். பாவம் பிஜு மகராஜுக்கு அந்தச் சாவிகள் நஷ்டம்!"

"ஆனால்'' நான் சொல்ல நினைத்ததைச் சொல்ல வில்லை.

ஆர்த்தி, "என்ன சொல்லவந்தீர்கள்?" என்று கேட்டாள். அப்போதும் நான் சொல்லவில்லை. அன்றொரு நாள் ராத்திரி சித்தப்பாவின் அறையிலிருந்து வந்த மெல்லிய புகையும், மேஜைமீதிருந்த தடித்த நோட்டுப் புத்தகமும், அதன் முதல் பக்கத்திலே பார்த்த அரைகுறையான எழுத்துக்களும், அந்த

விசித்திரமான படங்களும் என் நினைவில் சுழன்றன... ஒரு வேளை...

"நான் புறப்படுகிறேன்," என்றாள் அவள்.

"ஆர்த்தி, உங்களுடன் டெலிபோனில் பேசணும் என்றால் எப்படிக் கூப்பிடுவது?" என்றேன்.

"செக்ரட்டரியைக் கூப்பிடுங்கள் என்று சொல்லுங்கள்." என்றவள் ஒரு காகிதத்தில் டெலிபோன் நம்பரை குறித்துக் கொடுத்தாள். "இதுதான் நாங்கள் தற்சமயம் தங்கியிருக்கும் பங்களாவின் நம்பர். 'ஐயாயிரம் டொனேஷன் கொடுத்தோம். நாலாயிரம் என்று ரசீது தந்திருக்கிறார்களே' என்கிற மாதிரி ஏதாவது கேளுங்கள். உடனே என்னைக் கூப்பிட்டனுப்பு வார்கள்."

மாலை மங்கிக் கொண்டிருந்த நேரமானாலும், அவளு டைய வெள்ளை சாரி காரணமாக, வெகுதூரம் வரை அவள் செல்வதைக் காண முடிந்தது.

லீவில் போயிருந்த டிரைவர் வந்துவிட்டான். அவ்வளவு தான், எனக்குச் சீட்டு கிழித்துவிடப் போகிறார் சித்தப்பா என்று எண்ணியிருந்தேன். ஆனால் அதிர்ஷ்டம் என் பங்கில் இருந்தது. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அவனைக் காணோம். நான்தான் சித்தப்பாவின் காரை ஓட்டிச் சென்றேன்.

"ஜனா! இனிமேல் நீதான் பர்மனென்ட். அவன் மலேயா போகிறானாம். சொல்லிக்கொண்டு போகத்தான் வந்தான்," என்றார் சித்தப்பா.

"சந்தோஷம் சார்."

"சந்தோஷத்தோடு நிறுத்திக்கொள். சம்பளம் இன்னும் கொஞ்சம் வேண்டுமென்று கேட்டுவிடாதே. நம்மாலே



முடியாது. காரையே விற்று விடலாமான்னு இருக்கிறேன்," என்றார்.

"கேட்கமாட்டேன் சார்" என்று உறுதி கூறினேன்.

தனக்குத் தானே பேசிக் கொள்கிறவர் மாதிரி, "ஒண்ணுமே முடியல்லே. பணம் காய்ச்சி மரம் தங்கம் காய்ச்சி மரம்னு ஏதாவது கண்டுபிடித்தால்தான் நம்ம காலட்சேபம் நடக்கும் போலிருக்கிறது." என்று முணுமுணுத்தார்.

கண்ணாடியில் தெரிந்த அவர் முகத்தை ஒரு முறை பார்த்தேன். கடினமாக இறுகிப் போயிருந்த அவர் முகத் தோற்றம். தங்கம் காய்ச்சி மரத்தைக் கண்டுபிடிக்கிறவர்...

என் சந்தேகம் மேலும் மேலும் பலப்பட்டது. ஒரு வேளை..

அன்று மத்தியான்னம் கொஞ்ச நேரம் ஒழிவு கிடைத்த போது மண்ணடி போஸ்டாபீசுக்குப் போய் ஒரு இன்லண்ட் கவர் வாங்கி அக்காவுக்கு எழுதினேன். என் டிரைவர் வேலை பர்மனென்டாகி விட்டதைப் பற்றித் தெரிவித்துவிட்டு—

"...உனக்கு எனக்கெல்லாம் சொந்த ஊர் எது? அதாவது, கொள்பாட்டனார் காலத்தில் நம் குடும்பம் எங்கே இருந்தது? அதைப்பற்றி ஏதேனும் தெரியுமா? சாஸ்திரி என்று நம் குடும்பத்தில் யாருக்கேனும் பெயர் இருந்தது உண்டா? தஞ்சாவூர் ஜில்லாவில் நாம் வசித்திருக்கிறோமா? ஞாபகப் படுத்திப் பார்த்து எழுது. எதற்காக இதைக் கேட்கிறேனென்று பிற்பாடு சொல்கிறேன்..." என்று எழுதிப் போட்டேன்.

அக்காவுக்குப் பெரும் திகைப்பாய்த்தான் இருக்கும். இருக்கட்டும்... எனக்கு விஷயம் தெரிந்தாக வேண்டுமே...

இரண்டு மூன்று நாட்களுக்கு ஆவலுடன் பதில் எதிர்

பார்த்தேன் அக்காவிடமிருந்து. ஒன்றையும் காணோம். உடனுக்குடன் பதில் போடாமலிருக்க மாட்டாளே? உடம்பு கிடம்பு சரியில்லையோ என்று கவலைப்படத் தொடங்கினேன்...

அன்று பம்பாய்க்கு நாலு தடவை கால் போட்டுப் பேசிக் கொண்டிருந்தார் சித்தப்பா. "சரி, நானே புறப்பட்டு வர்றேன்," என்று கடைசியாக அவர் தெரிவித்தது காதில் விழுந்தது.

வீட்டிலிருந்து ஏர்போர்ட்டுக்குக் கிளம்பும் சமயம், ப்ரீஃப்கேசுடன் மாடியிலிருந்து இறங்கி வந்தவர், "இதோ பார். உனக்கு வந்திருக்கிற கடிதம். என் லெட்டர்சுடன் கலந்திருந்தது," என்று கூறி ஒரு கவரைக் கொடுத்தார்.

கையெழுத்தைப் பார்த்ததுமே அக்காவிடமிருந்து வந்திருக்கிறது என்று கண்டு கொண்டுவிட்டேன். என்ன பதில் எழுதியிருக்கிறாள் என்பதை வாசிக்க மனம் துடித்த போதிலும் நேரம் இருக்கவில்லை. .

"ஊம், ஊம். டயமாகிறது. வண்டியை எடு," என்று சித்தப்பா விரட்டினார்.

ஏர்போர்ட்டில் அவரை இறக்கிவிட்டுத் திரும்பக் காருக்கு வந்த பிறகுதான் கவரை உடைத்தேன். விமான நிலையத்தின் பிரகாசமான விளக்கின் கீழே நின்று, அந்தப் பென்ஸில் எழுத்தைச் சிரமப்பட்டுத் படித்தேன். டிரைவர் வேலை காயமானதைப் பற்றிச் சந்தோஷம் தெரிவித்தபின் அக்கா எழுதியிருந்தாள்:

"...என்னென்னவோ புதிசாய்க் கேட்டிருக்கிறாயே? வேடிக்கையாயிருக்கிறது. நம் குடும்பத்தார் எல்லோரும் பாலக்காட்டைச் சேர்ந்தவர்கள். நம் பாட்டி குழந்தையாயிருந்த காலத்தில் அங்கேதான் பிறந்து வளர்ந்தாள். ரொம்ப



நன்றாய் மலையாளம் பேசுவாள். பிறகு நம் குடும்பம் திருநெல்வேலி ஜில்லாவுக்குக் குடியேறி விட்டது என்று பாட்டி சொல்லிக் கேட்டிருக்கிறேன். அதன் பிறகு மதுரை வந்தோம். சித்தப்பாவின் தாத்தாவும் நம் தாத்தாவும் சகோதரர்கள். நம் குடும்பத்தில் யாரும் எந்தச் சமயத்திலும் தஞ்சாவூர் ஜில்லா பக்கம் தலை வைத்தும் படுத்ததில்லை. சாஸ்திரி என்ற பெயரில் நம் முன்னோர்கள் யாரும் இருந்தது கிடையாது..."

கடிதத்தை மடித்துப் பையில் வைத்துக் கொண்டேன். ஒரே ஏமாற்றமாக இருந்தது. ஓர் ஆதாரமுமில்லாமலே நானாக அப்படி ஒரு ஊகம் செய்து வைத்திருந்தேன்— பிஜு மகராஜ் தேடுகிற சாஸ்திரி குடும்பத்து ஆள் சித்தப்பாவாக இருக்குமோ என்று. 'ரசவாதம்! ஆல்கெமி!' என்று அவர் கூவியதும் ரகசியமாக ஆராய்ச்சிகள் செய்வதும் தங்கமாக மாறிய சாவிகள் யாரோ பம்பாய்க்காரருடையது என்று என்னிடம் பொய் சொல்லிவிட்டு பிஜு மகராஜை அவர் ரகசியமாகச் சந்தித்ததும்— எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தன. அதனால்தான் அக்காவுக்கு எழுதியிருந்தேன்.

ஒரு சம்பந்தமுமில்லை என்று அக்கா சொல்கிறாளே...

ஏமாற்றத்தினால் பசிகூட போய்விட்டது. எதுவும் சாப்பிடாமல் பேசாமல் படுத்துக் கொண்டேன்.

எதிர் அறையில் வேலைக்கார வீராசாமி, சித்தப்பாவின் உடைகளுக்குப் பெட்டி போட்டுக் கொண்டிருந்தான். பிறகு ஒரு முக்காலியில் உட்கார்ந்து, சித்தப்பாவின் முழுக் கை ஸ்லாக்கில் பிய்ந்திருந்த பொத்தான்களைத் திரும்பத் தைக்கலானான். நான் சுவாரஸ்யமாக அவனையே பார்த்துக் கொண்டு அரைக் கண்ணை மூடியவாறிருந்தேன்.

"அடடே!" என்று அவன் கையை உதறிக்கொண்டு

முக்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்திருப்பது தெரிந்தது. ஊசி கையைக் குத்திவிட்டதாக்கும் என்றுதான் முதலில் நினைத்தேன்.

பீரோவுக்குக் கீழேயும் சோபா அடியிலேயும் அவன் குனிந்து குனிந்து தேடுவதிலிருந்து—

"என்னப்பா போட்டே?" என்றேன் படுத்தவாறே.

"ஒரு பொத்தானுங்க," என்றான் வீராசாமி.

நானும் எழுந்து சென்று தேடினேன். சின்னப் பொத்தான். எங்கே ஒளிந்துகொண்டதோ தெரியவில்லை. "சரி, விடு. காலையில் எங்காவது கடையில் வாங்கிக்கொள்ளலாம்," என்றேன்.

"அது முடியாதுங்க. இது ஸ்பெஷல் பொத்தான். ஐயாவோட இரும்புப் பீரோவில் ஒரு டப்பாவில் போட்டு வச்சிருக்கிறார். அவரோட டிரஸ்ஸுங்களுக்கு இந்தப் பொத்தான்களைத்தான் எப்பவும் தைக்கணும். பொத்தானின் பின் பக்கம் முத்திரை அடிச்சிருக்கு, பாருங்க..."

நான் திருப்பிப் பார்த்தேன்.

'சாஸ்திரி' என்று அச்செழுத்து தெரிந்தது. ஒன்றில் அல்ல; எல்லாப் பொத்தான்களிலும்.

சாஸ்திரி?

## 7

## தள்ளப்பா, உவரல்ல, துருசுமல்ல

அதே சிவன் கோவில் பிராகாரத்தில் அதே மாலை நேரத்தில் இரண்டாம் முறையாக நானும் ஆர்த்தியும் சந்தித்துக் கொண்டோம். நான் தான் அவளை வரச் சொல்லியிருந்தேன்.

Optimized using trial version www.balesio.com



'சாஸ்திரி' என்று பொறிக்கப்பட்ட பொத்தான்கள்... அதைத் தவிர வேறு எதுவும் கூடாது என்று சித்தப்பா கட்டளையிட்டிருக்கும் கண்டிப்பு... அன்று ராத்திரி பூரா எனக்குத் தூக்கம் வரவில்லை. சாஸ்திரி என்று எங்கள் குடும்பத்தில் யாருக்கும் என்றைக்கும் பெயர் இருந்தது கிடையாது என்று அக்கா எழுதியிருந்தபோதிலும் அவளுக்கும் தெரியாமல் சித்தப்பாவுக்கும் அந்தப் பெயருக்கும் என்னவோ சம்பந்தம் இருக்கிறது...

மறுநாள் பொழுது விடிந்ததுமே ஆர்த்தி கொடுத்திருந்த நம்பருக்குப் போன் செய்தேன். எப்படிக் கூப்பிட வேண்டுமென்று அவள் சொல்லித் தந்திருந்தபடியே செய்தேன். போனை எடுத்த நபரிடம், "அந்த செக்ரட்டரி அம்மா கிதர் ஹை? ஐ கேவ் ஃபோர் தௌசண் செக். ஷி கிவ்ஸ் த்ரீ தௌசண் ரிஸீட்..." என்று கதம்ப மொழியில் விளாசியதும் ஆர்த்தி வந்துவிட்டாள்.

"ஆர்த்தி, நான்தான் ஜனா. உன்னை அவசரமாய்ப் பார்க்கவேண்டும். ஸேம் டைம், ஸேம் ப்ளேஸ்," என்றேன் அவசரமாக.

"எஸ் ஸார்... நோ ஸார். உங்கள் செக்கை இன்னும் பாங்க்கியில் கட்டவில்லை... நானே எடுத்து வருகிறேன் சார். நீங்களே பாருங்கள்..." என்றாள்.

அதன்படிதான் இப்போது வந்திருந்தாள். எப்போதும் போல் வெள்ளைப் புடவைதான் கட்டியிருந்தாள். கையில் ஒரு வெள்ளை வளையல், ஒரு கறுப்பு வளையல் என்று மாற்றி மாற்றி அரை டஜன் அணிந்திருந்தாள். அவளுடைய சிவந்த சருமத்துக்கு அவை எடுப்பாக இருந்தன.

பொத்தான் விஷயத்தை பரபரப்புடன் சொல்லி முடித்த போது அவள் முகத்தில் எவ்வித மாறுதலும் காணோம். "நீங்கள் கான்பூருக்குப் போயிருக்கிறீர்களா?" என்றாள்.

"அரக்கோணத்தைத் தாண்டியதில்லை," என்றேன்.

"அங்கே இந்த மாதிரி பிளாஸ்டிக் பொத்தான்கள், க்ளிப்புகள் முதலியன செய்கிற கம்பெனிகள் நிறைய இருக்கு. அடிப்புறத்தில் தங்கள் பெயரை அடித்துக் கொள்வார்கள். 'சாஸ்திரி' என்பது ஒரு கம்பெனியின் பெயராக இருக்கலாம்," என்றாள்.

என் உற்சாகம் புஸ்ஸென்று இறங்கியது. "இருந்தாலும், இந்தப் பொத்தான்தான் வேண்டுமென்று சித்தப்பா..."

"சில பேருக்குச் சில விஷயங்களில் சில ஸென்ட்டிமெண்ட்... எதற்கும் இந்த விஷயத்தை இன்னும் கொஞ்சம் விசாரியுங்கள். சரி, நான் வருகிறேன்."

அவளைப் போகச் சொல்லு முன், என் மனத்தில் குறுகுறுத்த இன்னொரு சந்தேகத்தைக் கேட்டேன். "ஆர்த்தி, ரசவாத ரகசியத்தை மூன்று பகுதியாகச் செய்தார்களென்று சொன்னாயே? பிஜு மகராஜின் பகுதி அவரிடம் இருக்கும். உன்னுடையது?"

"அதையும் அன்றைக்கே அவர் வாங்கி வைத்துக் கொண்டு விட்டார்," என்றவள், "ஆனால் இரண்டையும் சேர்த்து ஒரு நோட்டில் நகல் எடுத்து வைத்திருக்கிறார்," என்றாள்.

"மூன்றாவது பகுதியைப் பிற்பாடு தேடலாம். அந்த முதல் இரண்டில் என்ன இருக்கிறது என்று நான் பார்க்கிறேன். என் அறிவுக்கு ஏதாவது புலப்படுகிறதா என்று முயற்சி செய்கிறேனே..."



"அதாவது?" அவள் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"பெரும் பெரும் பேராசிரியர்களுக்குப் புலனாகாத விஷயங்கள் ஒரு சாதாரண மாணவனுக்குத் தெரிவதுண்டு. நாம் இரண்டு பேருமாக அந்த வித்தையைக் கண்டறிந்து விட்டோமென்றால், என் சித்தப்பாவையும் நெருங்க வேண்டாம். பிஜு மகராஜிடமும் போக வேண்டாம்..."

அவள் கண்களில் ஆர்வம் மின்னியது. "ஆல்ரைட். ராத்திரி ஒரு மணிக்கு அடையாறு பங்களாவுக்கு வந்து விடுங்கள். காம்பவுண்ட் பின்புறத்தில் ஒரு சின்னக் கதவு இருக்கிறது. அதைத் திறந்து வைக்கிறேன்," என்றாள்.

"பிஜு மகராஜின் நோட்டுப் புத்தகம் எங்கே இருக்கிறது என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியும்?" என்றாள்.

நள்ளிரவு தாண்டிய நேரம். ஆர்த்தி எனக்காகக் காத்திருந்தாள்.

அந்தப் பங்களாவின் முன்புறம்தான் மாடர்னாயும் விஸ்தாரமாயும் காற்றோட்டமாயும் வெளிச்சமாயும் இருந்ததே தவிர, பின்புறம் மொத்தமும் பெரும் இருட்டுக் கிடங்காக இருந்தது. சுவரில் தடவியபோது கையெட்டும் உயரத்தில் ஆங்காங்கே மின்சார ஒயர்கள் தென்பட்டன. அவற்றைத் தொட்டுக் கொண்டே போனதில் நடுநடுவே ஸ்விட்சுகள் கையில் தட்டுப்பட்டன. எல்லாம் பழங்காலத்து ஸ்விட்சுகள். லொடலொடவென்று ஆடின. ஒன்றிரண்டு ஷாக்கும் அடித்தது. ஒரு ஸ்விட்சாவது வேலை செய்யவில்லை.

நிலையிலும் கூட,

ஆர்த்தியின் அண்மை என்னை நிலைகுலையச் செய்து கொண்டிருந்தது.

இருவரும் ஒட்டிக்கொண்டே வெராந்தாவில் நடந்ததில் கிட்டத்தட்ட என் கரங்களுக்குள்ளேயே அவள் புதைந்து கிடந்தாள். என் முன்னே அவள் இருந்ததால் அவளுடைய கூந்தல் அடிக்கடி என் நாசியை உரசியது. அவள் மிகுந்த ஏழ்மைக் குடும்பத்தில் வளர்ந்திருந்த போதிலும், பிஜு மகரா ஜின் ஆதரவில் வந்த பின்னர் நாகரிகமாக வாழத் தெரிந்து கொண்டிருந்தாள். தலைக்கு ஷாம்பூ போடுகிறாள் என்பது அந்த இனிய மணத்திலிருந்து புலப்பட்டது. கூந்தலின் ஸ்பரிசமும் பட்டுப்போல் வழவழப்பாக...

இருட்டில் எதையோ எடுத்தாள் தன் இடுப்பிலிருந்து. என் கையைப் பிடித்து அதை ஸ்பரிசிக்குமாறு செய்தாள்.

"மெழுகுவத்தி!" என்றேன், ஆச்சரியத்துடன்.

அவள் பேசவில்லை.

மெழுகுவத்தியைக் கொளுத்திக் கையில் ஏந்திக்கொண்டு எனக்கு முன்னே நடந்தாள்.

சில வினாடிகள்தான் அந்தக் கூடத்தின் வழியே நடந் திருப்போம்... எங்கோ ஒரு தூரத்து அறையில் யாரோ இருமு வது காதில் விழுந்தது.

மெழுகுவத்தியைச் சட்டென்று ஊதி அணைத்தேன். "இருட்டில் தடுமாறினாலும் பரவாயில்லை. வெளிச்சம் வேண்டாம்."

மறுபடியும் சுவரைத் தடவிக்கொண்டே நடந்தபோது நடுநடுவே அவள் ஏதோ தனக்குள் சொல்கிற மாதிரி இருந்தது. சரியாய்ப் புரியவில்லை. உற்றுக் கேட்டபோது, "நாலு... நாலு..."



என்றும், பிறகு, "ஐந்து... ஐந்து..." என்றும் சொல்கிறாளெனத் தெரிந்தது.

"என்ன அது எண்ணிக்கை?" என்றேன்.

"ஆறு... இதுதான்," என்றாள். "இந்தக் கூடத்தோடு போனால் ஆறாவது அறை என்று காலையிலேயே கணக்கெடுத்து வைத்திருந்தேன்."

கதவு சும்மாதான் சாத்தியிருந்தது.

அறைக்குள் நுழைந்தவுடனேயே உடம்பைக் கவ்விக் கொள்கிற மாதிரி ஒட்டடைகள் படர்ந்திருப்பதை உணர்ந் தேன். காலின் கீழே மெத்தென்று புழுதி தெரிந்தது. அடிக்கடி திறக்கப்படாத அறையிலிருந்து அடிக்கக் கூடிய வெப்பமான நாற்றம்...

"மூலையில் ஒரு மர பீரோ இருக்கிறது. அதற்குள்தான் அவருடைய நோட்டு இருக்க வேண்டும்," என்றாள் ஆர்த்தி.

ஒரு ஜன்னல் கதவு தட்டுப்பட்டது. கொக்கி துருப்பிடித் துச் சிக்கியிருந்தது. சிரமப்பட்டுத் திறந்தேன். மறுபுறத்தில் தோட்டமும் திறந்த வெளியும்தான் இருந்தன வாகையால், குளிர்ச்சியும் வெளிச்சமும் உள்ளே நுழைந்தன. அந்த வெளிச்சத்தில் மர பீரோவின் பிரம்மாண்டமான உருவம்— இருட்டில் அரக்கன் நிற்பதுபோல்— நின்று கொண்டிருப்பது தெரிந்தது. உறுதியான பருமனான பலகைகள் போட்டது; தாழ்ப்பாளைத் தடவினேன். சிறிய பூட்டுப் போட்டிருந்தது. இரண்டு இழுப்பு இழுத்தால் திறந்துகொண்டுவிடக் கூடிய அளவுக்குச் சாதாரணமான பூட்டு.

"அவ்வளவு அருமையான பொக்கிஷத்தை இப்படிப்பட்ட இடத்திலா வைத்திருப்பார் பிஜு மகராஜ்!"

"உஷ்!" என்று என் உதட்டின் மீது விரலை வைத்தாள் அவள். "சின்ன வயசில் உங்கள் பாட்டி நிறைய கோரோசனை புகட்டியிருப்பாள் போலிருக்கு!"

"சாரி," என்று என் குரலைத் தணித்துக்கொண்டு மறுபடியும் என் சந்தேகத்தைச் சொன்னேன்.

"அதுதான் பிஜு மகராஜின் டெக்னிக். பத்திரமான அறையில், இரும்புப் பெட்டகத்துள் பூட்டி வைத்தால் சந்தேகம் ஏற்படும். இப்படி வைத்தால் யார் பார்க்கப் போகிறார்கள்?"

"இங்கே வைத்ததை நீ உன் கண்ணால் பார்த்தாயா?"

"வந்த அன்றைக்கே அவர் செய்த முதல் காரியம் அதுதான். சும்மா கட்டிடத்தைச் சுற்றிப் பார்க்கிற மாதிரி கிளம்பினார். கையில் அந்த நோட்டு இருக்கவே எனக்குச் சந்தேகம் வந்தது. அவருக்குப் பின்னாடியே வந்து பார்த்து வைத்துக்கொண்டேன்..."

"கில்லாடிதான்."

"முதலில் பூட்டைத் திறவுங்கள். பிறகு பாராட்டலாம்."

நான் கையில் ஆயுதம் எதுவும் கொண்டு வரவில்லை. வெறும் கையால் இழுத்துப் பார்த்தேன். திறந்துகொள்ளக் காணோம். ஒரு கல்லைத் தேடி எடுத்து வந்து, அதிகம் பிரயாசைப் படாமல் பட்பட்டென்று தட்டினேன். பயனில்லை.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது, புழுக்கத்தினாலும் பதைப்பினாலும் வியர்வை பெருகியது. எங்கோ காலடியோசை கேட்கிற மாதிரி ஒரு பிரமை அடிக்கடி ஏற்பட்டது. ஆர்த்தி இரண்டு முறை வாசலில் எட்டிப் பார்த்து விட்டு வந்தாள்.

அவ்வளவு சின்னப் பூட்டு எங்கள் இருவரையும் சரியான வேலை வாங்கியது.



"என் அம்மாவிடம் ஒரு பழக்கம்," என்றாள் ஆர்த்தி.

"குடும்பக் கதையைச் சொல்ல நல்ல நேரம் பிடித்தாய்!"

"எதைப் பூட்டினாலும் சாவியை அதற்குப் பக்கத்திலேயே எங்காவது வைத்திருப்பாள்— பிற்பாடு மண்டையை உடைத்துக்கொண்டு தேடத் தேவையிருக்காது என்பதால்."

"பீரோவைப் பூட்டினால் சாவியை எங்கே வைப்பாள்?"

"பீரோ வைத்துக்கொள்ளும் அளவுக்கு எங்களுக்கு வசதி இருக்கவில்லை. ஆனால் அம்மாவானால் எங்கே வைப்பாள் என்று நான் 'கெஸ்' பண்ண முடியும்," என்று யோசனை செய்தாள். ஒரு வினாடி கழித்து, "பீரோவின் மேலேயே பாருங்கள். என்னைவிட நீங்கள் உயரம்," என்றாள்.

நான் எம்பினேன். ஓரங்குல கனத்துக்குத் தூசி படர்ந்திருந்த பீரோவின் மேற்புறத்தைத் தடவினேன். சாவி போல ஏதோவென்று தட்டுப்படுகிற மாதிரி இருந்தது. இன்னோர் அழுத்து அழுத்தி ஜம்ப் செய்தபோது—

முட்டாள் தனமாகிவிட்டது.

பீரோவை ஒரு பக்கமாக அழுத்தி இழுத்து விட்டதால் அது அப்படியே என்மீது சாய்ந்தது. 'ஐயோ' என்ற கத்தல் என் தொண்டையில் புறப்பட்டு வாய் வரை வந்துவிட்டது. அந்த அலறலை அப்படியே அமுக்கிக் கொண்டு, தடாலென்று விழுந்துவிடாமல், பீரோவைத் தாங்கிக் கொண்டபடியே கொஞ்சம் கொஞ்சமாகச் சரிந்தேன். அதை அப்படியே தாக்குப்பிடித்து நிறுத்தக்கூடிய அளவுக்கு எனக்குப் பலமிருக்கவில்லை. ஆறடி உயரமும் அதற்கேற்ற அகலமும் பருமனும் பளுவுமுள்ள பழங்காலத்துப் பீரோ அது. தடதடவென்று பெரும் ஓசையாக விழுந்திருக்க வேண்டியதைத் தடுத்து மெல்லச் சாய்க்க

மட்டுமே என்னால் முடிந்தது. அப்படியும் என் உடம்பின் பெரும் பகுதி—முக்கியமாகக் கால்கள் இரண்டும் பீரோவின் அடியே சிக்கிக் கொண்டது.

ஆர்த்தி ஒரு கணம் பீதியினால் வாயடைத்துப் போனவள் போல அசைவற்று நின்றாள். "இருங்கள்... இருங்கள்..." என்று ரகசியமான குரலில் கூவி என்னை விடுவிக்கப் பார்த்தாள். "எப்படி... என்ன... காயம் எதுவும் பட்டுவிட்டதா?" என்று என்னையும் பீரோவையும் சுற்றிச் சுற்றி வந்து அவள் தவித்த போது, என் கையாலாகாத்தனத்தைக் கண்டு எனக்கு என்மீதே கோபம் வந்தது.

"எனக்கு ஒன்றுமில்லை. பயப்படாதே?" என்று அவளுக்குத் தைரியம் சொல்லி, தரையோடு தரையாக என்னை அழுத்திக்கொண்டிருந்த அந்தப் பெரும் பளுவை அகற்றிக் கொள்ள முயன்றேன். நல்ல வேளை, மார்பின் மீது அதைச் சாய்த்தபடி மல்லாந்து விழுந்திருக்கவில்ல்லை.அப்படி விழுந்திருந்தால் கைகளைத் தரையில் ஊன்றிக் கொண்டு என்னை நானே நெம்பிக் கொள்வது பெரும் பாடாக இருந்திருக்கும். ஆனால் வலது தோளின் மீதுதான் பீரோ சாய்ந்திருந்தது. இடது கையைத் தரையின் மீது ஊன்றி எக்கினேன். அதில் பயன் இருக்கவில்லை பீரோ பெரும் கனமாய் என்னை அழுத்திக் கொண்டிருந்தது. வினாடிக்கு வினாடி என் சக்தி என்னை விட்டு வடிந்துகொண்டிருக்கிற மாதிரி இருந்தது. ஜன்னல் வழியே வரும் வெளிச்சம் சிறிது சிறிதாக அதிகரித்துக் கொண்டிருப்பது போலும் தோன்றியது. பொழுது விடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நான் இருப்பதை எந்த நிமிடமும் யாரும் பார்த்துவிடக் கூடும்... இப்போதே எங்கெங்கோ யார் யாரோ விழித்துக் கொள்வதைப் போல் ஒரு பிரமை...



"ஆர்த்தி... நான் எப்படியாவது விடுபட்டுக் கொண்டு விடுவேன். நீ இங்கே இருப்பதுதான் தப்பு. உனக்கும் எனக்கும் தொடர்பு இருப்பது தெரிந்துவிடும். நீ போய்விடு இப்போதே," என்றேன். இதைச் சொல்வதற்குள் எனக்கு மூச்சுத் திணறி விட்டது.

"நன்றாய்த்தான் இருக்கிறது!" என்று அவள் கோபத்துடன் என்னைக் கண்டித்தாள். "பொறுங்கள். நான் தூக்கிப் பார்க்கிறேன்.

"ஆர்த்தி, இது உன்னால் ஆகக்கூடிய வேலையில்லை," என்று அவளைத் தடுக்க முயன்றேன். அவள் கேட்கவில்லை. பீரோவை இரண்டு கைகளாலும் பிடித்து, தரையை உதைத்துக் கொண்டு எம்பினாள்.

அவளுடைய முயற்சி சிறு பிள்ளைத்தனமானது என்று எண்ணிய எனக்கு, அதிர்ச்சி காத்திருந்தது. நிஜமாகவே பீரோ என் தோளிலிருந்து அகலுகிற மாதிரி... ஆம், ஆம்... பீரோவை அங்குலம் அங்குலமாக அவளால் நகர்த்த முடிகிறது! நானும் அவளுக்கு உதவியாக என் சக்தியனைத்தையும் பிரயோகிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் வலது கையில் எங்கேயோ அடிபட்டிருந்தது அல்லது சுளுக்கு ஏற்பட்டிருந்தது. கொஞ்சம் அழுத்தினாலும் பயங்கரமாய் வலித்தது. ஒரு கை அப்படி வலிக்கையில் மறு கையை மட்டும் எப்படி உபயோகிக்க முடியும்?

"ஆர்த்தி, உன்னால் முடியாது" என்று சொல்வதை நிறுத்திக் கொண்டேன். அவளால் முடியும். முடிகிறது. அவளை என்கரேஜ் பண்ண வேண்டும். "ஆர்த்தி... அப்படித்தான், ...ஆ! ...தட்ஸ் குட்... இன்னும் கொஞ்சம்! இன்னும் கொஞ்சம்..."

எப்போதோ ஒரு மனத்தத்துவப் புத்தகத்தில் படித்திருந்தேன்— இதேபோல ஒரு நிகழ்ச்சியை ஒரு தாய், தன் குழந்தை

பெரிய பாறைக்குக் கீழே சிக்கிக் கொண்டபோது ஒருத்தியாகவே அந்தப் பாறையை அகற்றினாளாம். குழந்தையை மீட்டாளாம். மறுநாள் அவளே அந்தப் பாறையை மறுபடி நகர்த்தப் பார்த்த போது துளியும் முடியவில்லை. முதல் சந்தர்ப்பத்தில் அவளுக்குச் சக்தி கொடுத்தது, குழந்தை ஆபத்தில் சிக்கியிருக்கிறதே என்ற வெறி. அப்படிப்பட்ட வெறி —என்னை எப்படியும் காப்பாற்றியாக வேண்டும் என்ற வெறி— ஆர்த்திக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறதுபோலும். இல்லா விட்டால் அந்த அசுர பீரோவை அவளால் தூக்கியிருக்கவே முடியாது.

கொஞ்சம் என்னை விடுவித்துக்கொள்ள முடிந்தவுடனே நான் வெளிப்பட்டுவிட்டேன். வலியில்லாமலிருந்த இடது தோளினால் முட்டுக் கொடுத்தேன். இருவருமாகப் பீரோவைத் திரும்ப நிமிர்த்தி நிறுத்தினோம்.

“ஆர்த்தி! பிரமாதமான காரியம் செய்துவிட்டாய்!” என்று அவள் கையைப் பலமாகக் குலுக்கினேன். உடனேயே ‘ஆ’ என்று முகம் சுளித்தேன், என் கையின் வேதனையினால்.

காலில் அடி எதுவும் இல்லை.

அவள் என் கரத்தைத் தடவிக் கொடுத்து, “இன்று இதோடு போதும். இன்னொரு நாள் சாவி உட்பட எல்லாவற்றையும் எடுத்துவைக்கிறேன். அல்லது நானே திறந்து எடுக்க முடியுமென்றாலும் செய்துவிடுகிறேன். நீங்கள் வீட்டுக்குப் போய்க் கையைக் கவனித்துக் கொள்ளுங்கள்” என்றாள்.

“வேண்டாம். இன்றைக்கே வேலையை முடித்து விடுவோம்,” என்றேன். “பிஜு மகராஜுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டு, அந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் போய் வேறு எங்காவது வைத்துவிட்டால் என்ன பண்ணமுடியும்?”



ஜன்னல் வழியே விடிகாலை வெளிச்சம் மேலும் பிரகாசமடைந்து கொண்டிருந்தது.

“பீரோ சாய்ந்தபோது சாவி மாதிரி ஏதோ விழுந்த சத்தம் கேட்டதே,” என்ற ஆர்த்தி தரையைக் காலால் தடவினாள்.

அவளுடைய ஊகம் கரெக்ட். சாவி அகப்பட்டுவிட்டது.

பரபரப்புடன் பூட்டைத் திறந்து, பீரோவின் கதவுகளைத் திறந்தோம்.

மொத்தம் நாலு தட்டுகள் இருந்தன. கீழ் இரண்டு தட்டுக்களும் காலி. மேல் இரண்டு தட்டுக்களில் என்னென்னவோ புத்தகங்கள் அடைபட்டுக் கிடந்தன. அவற்றின் நடுவேயிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை வெளியெடுத்தாள் ஆர்த்தி. பள்ளிக்கூட நோட்டுப் போல, ஆனால் சுமார் 300 பக்கம் கொண்டதாக அது இருந்தது.

ஜன்னலருகே கொண்டு சென்று பிரித்துப் பார்த்தேன். என்ன எழுதியிருக்கிறது என்பதைக் கண்டு கொள்ளும் அளவுக்கு வெளிச்சம் இருக்கவில்லை.

“ஆர்த்தி, மெழுகுவத்தியை ஏற்று,” என்றேன். அவள் தீக்குச்சியைக் கிழித்து, ஏற்றினாள். நோட்டைப் புரட்டினேன்.

நடுவே ஒரு பக்கத்தில்— *“Philosopher's stone* முப்பூ” என்று தலைப்பிட்டிருந்தது. அதன் கீழே தெரிந்த வரிகள்:

“தள்ளப்பா உவரல்ல துருசுமல்ல,
சவுக்கார மண்வேகச் சத்துமல்ல.
விள்ளப்பா ஆணல்ல, பெண்ணுமல்ல
வெடியுப்பு சுறியுப்பு விஷநீரல்ல...”

# 8

## IF YOU DO NOT UNDERSTAND THIS...

அந்த ஆங்கில வார்த்தை —*Philosopher's stone*— எங்கோ கேட்ட மாதிரி இருந்தது எனக்கு. நெற்றியில் தட்டிக்கொண்டு யோசனை செய்தேன். பதற்றத்தின் போதுதான் மூளை நிச்சயமாக வேலை செய்ய மறுக்கிறது... ஆ.. ஆமாம். சித்துப்பாவைத்திருந்த தடித்த நோட்டில்... அரைகுறையாய் அழிந்து போயிருந்த வார்த்தை அது... அப்படியானால்...

"புறப்படுங்கள்... யாரோ வருகிற மாதிரி சத்தம் கேட்கிறது..." என்று என்னை அவசரப்படுத்தினாள் ஆர்த்தி.

நான் காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கவனித்தேன். ஆம். வெகு வெகு தொலைவில் காலடியோசைகள் கேட்பது மெய்தான். பிரமையல்ல.

"பீரோவைப் பழையபடி பூட்டிவிட வேண்டும். பார்க்கிறவர்களுக்குச் சந்தேகம் ஏற்படக் கூடாது," என்று சொல்லி, பூட்டை நாதாங்கியில் மாட்டிச் சாவியைத் திருப்பினேன்.

அது பூட்டிக்கொள்ள மறுத்தது.

மீண்டும் திருகினேன். பயனில்லை.

காலடியோசைகள் சமீபித்தன.

கையில் வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தை அவளிடம் கொடுத்தேன். "நீ பின்புறக் கதவருகே போய் நின்றுகொள். இதோ ஒரு நொடியில் நான் வந்து வாங்கிக்கொள்கிறேன்."

அவளுக்குத் தயக்கமாயிருந்தது. "உங்களை மட்டும் விட்டு விட்டு—"



"பரவாயில்லை. நான் ஆண்பிள்ளை. சமாளித்துக் கொள்வேன். இரண்டு பேரும் சேர்ந்து இருப்பதுதான் தப்பு..." என்று அவளுடைய முதுகில் அழுத்தம் கொடுத்துக் கட்டாயமாக வெளியேற்றினேன். நோட்டுப் புத்தகத்துடன் அவள் இருளில் மறைந்தாள்.

அவசர அவசரமாக மறுபடி பூட்டப் பார்த்தேன். இம்முறை பலித்தது. ஆனால் க்ளிக் என்ற ஓசை கேட்ட அதே கணம், மிகச் சமீபத்தில் அனேகமாக அந்த அறைக்குப் பக்கத்தில் யாரோ வருகிற சத்தம் கேட்டது. ஒருவரல்ல இருவர் என்று தோன்றியது. சாவியைப் பழையபடி பீரோவின் மேலேயே வைத்தேன்.

வெளியே பாயவிருந்தவன் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்.... பாய்ந்தால், வருகிறவர்களின் மீதுதான் நேரே முட்டிக் கொள்ள வேண்டியிருக்கும் என்பது திண்ணமாய்ப் புலப்பட்டது. அறைக்குள்ளேயே எப்படி மறைந்து கொள்ளலாம் என்று மின்னல் வேகத்தில் ஒரு நோட்டம் விட்டேன். அந்த அரைகுறை வெளிச்சத்தில் அறை மொத்தமும் திறந்த பாலைவனம் போல் தெரிந்தது. அந்த மர பீரோ ஒன்றுதான் அங்கிருந்த ஒரே பொருள். ஒரே எட்டத்தில் அதன் பின் பகுதியை அடைந்தேன்.

பீரோவுக்கும் சுவருக்கும் இடையே சில அங்குல இடைவெளி இருந்தது. அதிக சிரமமில்லாமல் என்னை அங்கே நுழைத்துக் கொண்டேன்.

கதவின் இடுக்குகள் வழியே பளீரென்ற வெளிச்சம் கோடு கோடாகத் தாண்டவமாடியது. வந்தவர்களில் ஒருவரின் கையில் டார்ச் விளக்கு இருக்கிறது போலும். புத்தம் புதிய ஸெல் போட்டது. பளீரென்று எப்படிப்பட்ட வெளிச்சம்! வயிற்றின் அடியில் தசைகள் சுருண்டு கொள்கிற மாதிரியான

உணர்வு ஏற்பட்டது எனக்கு.

"நான் சொல்கிறேனே, யாரும் வரவில்லை மகராஜ்" என்று ஒரு குரல் கேட்டது. வந்திருப்பவர்களில் ஒருவர் பிஜு மகராஜ் என்று தெரிந்து கொண்டேன். மற்றவருடைய குரலையும் பணிவான தன்மையையும் கவனித்தபோது, இள வயதுள்ள உதவியாளாக இருக்க வேண்டும் என்று தெரிந்தது.

இருவரும் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்கள். பீரோவின் கீழாகவும் விலாப்புறமாகவும் டார்ச்சின் ஒளிக் கற்றைகள் சுவரிலே வெறிக் கூத்தாடுவதைக் கண்டேன்.

இன்னும் ஒரு நிமிடமோ இரண்டு நிமிடமோ போய் விடுவார்கள். மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு காத்திருந்தேன்.

ஆனால் அவர்கள் வெளியேறவில்லை.

அந்த இரண்டாவது நபரின் குரல் மட்டும் தான் கேட்டதே தவிர, பிஜு மகராஜ் ஏன் பதிலே சொல்லவில்லை? மௌனமாக என்னதான் செய்கிறார்?

இப்போது டார்ச் வெளிச்சம் சுவரிலிருந்து இறங்கி, தரையிலே இப்படியும் அப்படியுமாக ஓடுவதைக் கண்டேன். கீழே விழுந்த எதையோ தேடுகிற மாதிரி இருந்தது...

"இல்லை... யாரோ வந்திருக்கிறார்கள் நிச்சயமாய்..." முதல் தடவையாக பிஜு மகராஜின் குரல் கேட்டது. சித்தப்பாவுடன் வந்த அன்று, ஆலமரத்தினடியில் சொற்பொழிவில் கேட்டேனே அதே சன்னமான, மெல்லிய குரல். பிளேடினால் கையில் வெட்டுப்பட்டால், வெட்டுப் பட்டதே தெரியாமல் மயிரிழை போன்ற ரத்தக் கோடு தெரியுமே, அந்த மாதிரி ஒரு வித பயங்கரமான சன்னக் குரல் அது. மிருதுத் தன்மை இருக்



கிறதே தவிர, அரக்கத்தனமான கொடூரம் அதில் ஒளிந்திருக்கிறது என்று நான் எண்ணிக் கொண்டேன்.

"எப்படிச் சொல்கிறீர்கள். மகராஜ்?" என்றான் அந்த மற்ற ஆண்.

"நிறையக் காலடிச் சுவடுகள் தெரிகிறது."

அடுத்த வினாடி, சுவரின் இடுக்கில் ஒளிந்திருந்த என் மீது டார்ச் ஒளி பளீரெனப் படர்ந்தது.

"ஓ!" என்றார். அவருடைய குரலில் எவ்வித உணர்ச்சியும் வெளிப்படவில்லை.

அந்த ஆள் விரைந்து அங்கே வந்தான். நான் நினைத்தபடி இளைஞன்தான். ஆனால் வாட்டசாட்டமானவன். என் கையைப் பற்றி பீரோவுக்கு வெளியே இழுத்தான்.

வரமாட்டேனென்று முரண்டு பிடிப்பதோ போராட்டம் நடத்துவதோ அபத்தம். இழுத்த இழுப்புக்கு வெளியே வந்தேன்.

பிஜு மகராஜ் டார்ச் லைட்டை என் முகத்தின் மீது அடித்தார். உற்றுப் பார்த்தார். சாவியை வாங்கிக் கொள்வதற்காக ஒரே ஒரு நிமிடம் அன்று நான் அவர் முன்னிலையில் குனிந்து நிமிர்ந்ததுதான். அப்போது பார்த்த முகத்தை நினைவில் வைத்துக் கொண்டிருப்பாரா என்ன என்று நினைத்தேன்.

அந்த உதவியாளன் என் கையை ஒரு முறுக்கு முறுக்கி என் முதுகோடு சேர்த்து மடக்கிக் கொண்டான்.

"யாரப்பா நீ?" என்றார் பிஜு மகராஜ். சகல உயிர்ப் பிராணிகளிடமும் அன்பையும் கருணையையும் தவிர வேறெதையும் காட்டத் தெரியாதவர் போல மகா மதுரமா யிருந்தது

அவர் குரல். ஆனால் பிடித்த பிடியை விட்டு விடும்படி அந்த உதவியாளனிடம் சொல்லவில்லை.

"தூக்கத்தில் நடந்து வந்து விட்டேன்," என்றேன். என் உடைகள் நல்ல காலமாய்க் கண்ணியமாயிருந்தன. சுவரேறிக் குதிக்கும் ரௌடியைப் போல இருக்கவில்லை.

"எங்கேயப்பா உன் வீடு?" என்றார் பிஜூ மகராஜ்.

"ஷெனாய் நகர்."

அந்த ஆள் குறுக்கிட்டு, "பத்து மைல் தூரம் தூக்கத்தில் நடந்து வருகிறாய்!" என்று சிரித்து விட்டு, ஒரு கையைப் பிடிவிட்டு விடாமலே மறு கையால் என் சட்டைப் பை, பாண்ட் பைகளைத் தட்டிச் சோதனை போட்டான். இடுப்பையும் தடவினான்.

"போலீசுக்குச் சொல்லு," என்றார் பிஜூ மகராஜ் என்னுடைய மறு கையைப் பிடித்துக் கொண்டு.

"நான் எதுவும் திருடவில்லை," என்றேன்.

"ட்ரெஸ்பஸ்," என்றார்.

துணிந்து எதிரடி தருவது தான் ஒரே வழி. "என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களை எனக்குத் தெரியும்," என்றேன்.

அவர் புருவங்களை உயர்த்தினார்.

நான் தொடர்ந்தேன். "ஏதோ தெரியாத்தனமாய் ஒரு வாலிபன் இந்தக் காம்பவுண்டுக்குள் நுழைந்து விட்டான். சிறந்த தத்துவ ஞானியும் வேதாந்தியுமான பிஜூ மகராஜிடம் அகப்பட்டு விட்டான். அவனை அவர் மன்னித்து, அன்புடன் பேசி அறிவுரைகள் கூறி அனுப்பி வைத்தார் என்றால் கேட்பதற்கு



அழகாயிருக்கும். போலீசில் பிடித்துத் தந்தார், கேஸ் நடந்தது. தண்டனை கொடுத்தார்கள் என்றெல்லாம் பேப்பரில் செய்தி வந்தால் அது பிஜூ மகராஜுக்கோ அவருடைய ஸ்தாபனத்துக்கோ பெருமையாயில்லையே" என்றேன்.

அவர் மேலோடு புன்னகை செய்த மாதிரி இருந்ததே யொழிய என் பேச்சில் புதைந்துள்ள மறைமுகமான மிரட்டலை அவர் புரிந்து கொண்டார். "விட்டு விடு," என்றார் உதவியாளிடம்.

அவன் பிடியைக் கொஞ்சம் தளர்த்தியதுதான் தாமதம், ஒரே பாய்ச்சலாகப் பின்புறம் ஓடினேன். பிஜூ மகராஜின் டார்ச் ஒளி என் பின்னே சிறிது நேரத்துக்குத் தெரிந்தது. பிறகு அடர்ந்த மரங்களின் நெடுக்கத்தில் நான் அவர்கள் பார்வையிலிருந்து தப்பி விட்டேன்.

கதவினருகே காத்திருந்த ஆர்த்தி என்னை நோக்கி ஓடி வந்து "ஏன் இத்தனை நேரம்? என்ன ஆயிற்று?" என்றாள்.

அவள் கையிலிருந்து நோட்டுப் புத்தகத்தைப் பிரித்துக் கொண்டேன். "பிஜூ மகராஜ்தான்... ஏதோ சொல்லித் தப்பி விட்டேன். நீயும் சீக்கிரமாய் உன் ரூமுக்குத் திரும்பிவிடு. அதற்குள் ஒரு வேளை அவர்கள் வந்து பார்த்துவிட்டால், நீயும் ஏதோ சத்தம் கேட்டு எழுந்து போய்ப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிடு. ஸீ யூ லேட்டர்," என்று கிடுகிடுவெனச் சொல்லிவிட்டு, கதவைத் திறந்து கொண்டு இருட்டில் தாவினேன்...

சித்தப்பா ஊரில் இல்லாததால் எனக்கு வேலை இருக்கவில்லை. வீட்டில் தங்கியிருந்த நேரத்தை அந்த நோட்டுப் புத்தகத்தை கிறுகிறுவென்று நகல் எடுப்பதில் செலவழித்தேன். எப்படியும் பிஜூ மகராஜுக்குச் சந்தேகம் ஏற்பட்டு அதைத்

தேடத் தொடங்குவார். அதற்கு முன் இதைக் காப்பி செய்து கொண்டு திருப்பிக் கொண்டு போய் வைத்து விடவேண்டும்...

வெறுமே நகல் எடுப்பதிலேயே புத்தியைச் செலுத்தியிருந்ததால் நான் அதன் அர்த்தங்களை ஆராய முனையவில்லை. பிஜு மகராஜ் வேறே வெகு சாமர்த்தியமாய், பல இடங்களில் பாதிப் பாதி குறிப்புகளாக நிறுத்தியிருந்தார். ஏராளமான மூலிகைப் பொருள்களின் பெயர்கள் பட்டியலாக்கப்பட்டிருந்தன... முழு வாக்கியங்களாக இருந்த இடங்களில், அது என்ன சொல்கிறதென்றே தெரியவில்லை. உதாரணமாக—

"துருசை நாத நீரில் ஊட்டி, ரவியில் வைக்க, நான்கு ஜாமத்தில் களிம்பற்று, சுன்னமாகும். இந்தச் சுன்னத்தால் ரசம் சுன்னமாகும். ரசம் ஒரு பலத்தில் துருசு சுன்னம் ஒரு குன்றி யிடையிட்டு நாத நீரால் அரைத்து, சிறுபுடமிட, ரசம் சுன்னமாகும். இந்த ரச சுன்னத்தால் நவலோகமும் தங்கமாகும்..."

"துருசை என்பது என்ன? நாத நீரை எப்படித் தயாரிப்பது? எப்படி அதிலே ஊட்டுவது? ரவியில் வைக்க என்றால் என்ன அர்த்தம்? சுன்னமாகியிருக்கிறது என்பது எப்படித் தெரியும்?

கொஞ்சத்துக்குக் கொஞ்சம் எனக்குத் தமிழ் அறிவு இருந்திருக்குமானால், முன்னே பின்னே பழைய தமிழ்ப் பாடல்களையோ சித்த வைத்திய நூல்களையோ புரட்டியிருந்தால், இரண்டொரு வார்த்தைகளுக்காவது அர்த்தம் புரியும்.

இன்னொரு பக்கத்தைப் புரட்டினேன். ஆங்கிலத்திலே பக்கம் பக்கமாய் எழுதியிருந்தது. தலைப்பிலிருந்து அந்தக் குறிப்புகளின் ஆசிரியர் பேசில் வேலன்டைன் என்ற மேனாட்டுக்காரர் என்று தெரிந்து கொண்டேன். அதில்—



*Seek from the stone which has no fleshy nature, but out of which a volatile fire is extracted, where also this stone is made, being composed of white and red. It is a stone. It is a stone and no stone therein, nature alone operates. A function flows from it.*

தமிழாவது என் சொந்த மொழி. மண்டையை உடைத்துக் கொண்டு யோசித்தால், தப்பாகவாவது ஏதேனும் புரியக் கூடும். ஆங்கிலத்தில் அந்தப் பரிபாஷையின் தலையோ காலோ புரியவில்லை.

பத்து வாக்கியங்களுக்குப் பின்னர்—

*If you do not understand this you will attain nothing*

என்றிருந்ததைப் படித்த போது அழுவதா சிரிப்பதா என்று எனக்குத் தெரியவில்லை. இதைப் புரிந்து கொள்ளாத வரையில் என்னால் எதையும் அடைய முடியாதாம்!

ஒரு வழி இருக்கிறது. மூலிகைகளைப் பற்றித் தெரிந்த தமிழறிஞரிடமோ ரசாயன விஷயங்கள் அறிந்த பேராசிரியரிடமோ போய், இவ்வளவு குறிப்புக்களையும் கொடுத்து இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று கேட்கலாம். இவைகளை வைத்துக் கொண்டு என்ன செய்தால், எப்படிச் செய்தால் மண்ணைப் பொன்னாக்கலாம் என்று கேட்கலாம். ஆனால் நான் தேடிப் போகிற குரு பொன்னாசை இல்லாதவராயிருந்தால் சரி. அப்படியில்லாமல் என்னை டபிள் கிராஸ் செய்து விட்டாரானால்...

வீராசாமி உள்ளே வந்து, "யாரோ உங்களைத் தேடிட்டு வந்திருக்கிறாங்க," என்றான்.

ஆர்த்திதான் வந்திருப்பாளோ என்று பதைபதைப்புடன் வெளியே வந்து பார்த்தேன். வெராந்தாப் படிக்கட்டில் ஒரு கிழவர் உட்கார்ந்திருந்தார். ஆள் பார்க்க எலும்பும் தோலு

மாக இருந்தார். முழங்கைக்குக் கீழே சட்டை தொளதொள வென்று தொங்கிக் கொண்டிருந்தது. நூல் போட்டு மூக்குக் கண்ணாடி கட்டிக் கொண்டிருந்தார்.

"யாரைப் பார்க்கணும்?" என்று கேட்டேன்.

"என்னைத் தெரியவில்லை? மதுரையிலே உங்க வீட்டுக்குப் பக்கத்திலேதான் நான் தங்கியிருந்தேன். உன் அக்கா சீதாவுக்கு என்கிட்டே ரொம்பப் பிரியம்," என்றார்.

ஏதோ யாசகத்துக்குத்தான் வந்திருக்க வேண்டும்... நானே பிச்சைக்காரன்...

பையைத் துழாவுவதை அவர் கவனித்தார். "நான் மெட்ராஸ் போகிறேனென்று சொன்னதும் உன் அக்கா உனக்கு ஒரு சமாசாரம் சொல்லி அனுப்பினாள். அதைச் சொல்லத்தான் வந்தேன்," என்றார்.

"வீராசாமி, சமையற்காரனிடம் சொல்லிப் பெரியவருக்குக் காப்பி வாங்கிட்டு வா," என்று தோட்டக்காரனை அனுப்பி வைத்தேன். பிறகு, "என்ன சமாசாரம்?" என்று கிழவரைக் கேட்டேன்.

"லெட்டர் போட்டிருந்தாயாமே? நீ என்னென்னவோ விஷயங்களில் ஈடுபட்டிருக்கிறாய்னு உன் அக்கா பயப்படு கிறாள். உன் அக்கா புருஷன் இப்படித்தான் என்னவோ செய்து, இருக்கிற இடம் தெரியாமலே போயிட்டாராம். 'எனக்கு நீ ஒருத்தன் தான் இருக்கிறாய். நீயும் ஆபத்திலே மாட்டிக் காதேன்னு உன்கிட்டே சொல்லச் சொன்னாள்..."

அக்காவின் பயத்திலேயும் அர்த்தம் இருக்கிறதென்று என் உள் மனம் சொல்லியது.

"மெட்ராசில் எங்கே தங்கப் போறீங்க?" என்றேன்.



"நான் அனாதைப்பா. மெட்ராசிலே எனக்கு ஏது இடம்? இங்கே செங்கல்பட்டுக்குப் பக்கத்திலே ஒத்திப்பேடுன்னு ஒரு கிராமம் இருக்கிறதே— அங்கே ஒரு அனாதை விடுதி இருக்கிறது. 'சாஸ்திரி முதியோர் இல்லம்'னு...

மறுபடியும் சாஸ்திரி— என்னை அந்த வார்த்தை விடவே விடாதா?

காப்பி எடுத்து வந்த வீராசாமி, "லால்பகதூர் சாஸ்திரி யோட ஞாபகமாய்க் கட்டியிருப்பாங்க" என்றான்.

அப்படித்தானா? அல்லது...

## 9

### ஓடினேன், ஓடினேன், ஓடிக்கொண்டேயிருந்தேன்...

"ஜனா... ஜனாவா... ஜனாதானே பேசுவது?" என்று அடுக்கடுக்காகக் கேட்டாள் ஆர்த்தி.

டெலிபோன் மணியடித்து, வீராசாமி எனக்குத்தான் போன் என்று சொன்னபோது, கொஞ்சம்கூட இஷ்ட மில்லாமல்தான் ரிஸீவரை வாங்கிக் கொண்டேன். பேசுவது ஆர்த்தி என்று தெரிந்த உடனேயே ஓர் உற்சாகம் பிறந்தது. அவள் குரலில் தென்பட்ட பதற்றம் என்னைச் சுறுசுறுப் படையச் செய்தது. "என்ன ஆர்த்தி, என்ன விஷயம்? நான் ஜனாதான் பேசுகிறேன்," என்றேன்.

"இங்கே ஒருத்தர் இறந்து விட்டார்," என்றாள் அவள். உரக்கப் பேசவோ நீளமான வாக்கியங்களைச் சொல்லவோ அவள் பயப்படுகிற மாதிரி தோன்றியது.

"யார்? யார் இறந்து போனது? ஏன் நீ பயப்படுகிறாய், ஆர்த்தி?"

"ஆனந்த்— மகராஜின் உதவியாள். இறந்துவிட்டான். மரணம் சாதாரண முறையில் ஏற்பட்டிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை."

ஆர்த்தி டெலிபோனை வைத்துவிட்டாள்.

கட்டையை எப்போதடா கீழே சாய்ப்போம் என்று களைப்பின் உச்சத்தில் இருந்தேன் நான். சும்மாவா! மைல் கணக்கில் நடந்து பஸ்ஸைப் பிடித்து வீடு வந்து சேர்ந்த களைப்பு எனக்கல்லவா தெரியும்?

எல்லாம் அந்த மதுரைக் கிழவரால் வந்த வம்பு.

'சாஸ்திரி அனாதை விடுதி' என்று அவர் சொன்னபோது, ஏன் தான் அந்த வார்த்தை என்னைத் திரும்பத் திரும்ப வட்டமிடுகிறதோ என்று நான் ஆச்சரியப்பட்டது உண்மையே. ஆனால் 'லால்பகதூர் சாஸ்திரியாக இருக்கும்' என்று வேலைக்காரன் வீராசாமி சொன்ன வியாக்கியானத்தை ஏற்றுக்கொண்டு அத்தோடு அதைப்பற்றி எண்ணுவதை விட்டுவிட்டேன்.

கிழவர் எழுந்து கொண்டார். "ராத்திரி வேளையாக இருக்கிறதே சார். இருந்துவிட்டுக் காலையில் போங்களேன்," என்றேன்.

"எவனோ தர்மவான் சிபாரிசு பண்ணி என்னை அங்கே சேர்த்துக் கொள்ளச் சம்மதித்திருக்கிறார்கள். நாளைக் காலை வந்து சேரும்படி கடிதம் வந்திருக்கிறது. நான் தாமதமாகப் போய்ச் சேர்ந்து, அதுதான் சாக்கென்று இடமில்லைன்னு கையை விரித்துவிட்டால் என்னப்பா ஆவது? நீ வைத்துக் கொள்வாயா?" என்றார் பெரியவர்.

அப்படி ஏதாவது நேர்ந்து விடுமோ என்று எனக்குப் பயம்



ஏற்பட்டது. "அதுவும் வாஸ்தவம்தான். இப்போதே புறப்பட்டு விடுங்கள். பிராட்வே பஸ் ஸ்டாண்டுக்குப் போனீர்களானால் விசாரித்துக்கொண்டு ஒத்திப்பேடு பஸ்ஸைப் பிடிக்கலாம்," என்று சொல்லி, கையிலிருந்த சில்லறையைத் திரட்டிப் பத்து ரூபாய் கொடுத்தேன். "பத்திரமாய்ப் போங்கள்."

"எனக்கென்ன பயம்? கையை வீசிக்கொண்டு ஜாம் ஜாமென்று..."

அவருடைய அகங்காரத்துக்குத் தண்டனை அங்கேயே கிடைத்தது. பேப்பர் பையன் சாயந்தரப் பேப்பரைப் போடுவதற்காக சைக்கிளில் வர, அதிலே போய் நேரே முட்டிக்கொண்டு இடறித் தடுமாறி, வெராந்தா ஓரமாக இருந்த பூந்தொட்டியின் கூரான விளிம்பில் போய் மோதிக்கொண்டு விழுந்தார்.

அடுத்த பத்து நிமிடத்துக்கு அவருடைய மண்டைக் காயத்தைக் கழுவிக் கட்டுப் போட்டு ஆசுவாசப்படுத்தவே சரியாயிருந்தது.

அதற்குள் அவர் புலம்பித் தீர்த்துவிட்டார். "ஐயோ, நான் நாளைக் காலையில் அங்கே போகலேன்னா அனாதை விடுதியில் இடமில்லேன்னு சொல்லிவிடுவானே? அப்புறம் நான் எங்கே போவேன்? யார் என்னை வைத்துக்கொள்வார்கள்?..."

நடுநடுவே என்னைப் பார்த்து "உன் அக்கா சீதா இருக்கிறாளே,அவளைப்போல உபகாரியைப் பார்க்க முடியாது. நான் இந்த மாதிரி இருக்கிறேன்னு தெரிஞ்சால் போதும், முதுகிலேயே தூக்கிக்கொண்டு போய் என்னைச் சேர்த்து விடுவாள்," என்று கூறி என் குடும்பத்தின் உபகார குணத்தையும் எடுத்துக் காட்டினார்.

அவர் சொல்கிற மாதிரி அந்தச் சாஸ்திரி அனாதை

விடுதியில் இடமில்லையென்று சொல்லிவிட்டால் என்னிடம் வந்து ஒண்டிக்கொண்டு விடுவாரோ என்று கவலை ஏற்பட்டது. "சரி சார். புறப்படுங்கள்" என்றேன்.

ஒத்திப்பேடு கிராமத்தை இரவு பத்தரை மணிக்கு அடைந்தோம். 'சாஸ்திரி அனாதை இல்லம்' என்று நான் சொன்னவுடனே, 'அதோ இருக்கிறது,' என்று ஒரு மகா பெரிய மாளிகையைக் காட்டுவார்கள் என்று எதிர்பார்த்த எனக்குப் பெரும் ஏமாற்றம் காத்திருந்தது. சிலருக்கு அதைப் பற்றித் தெரியவே இல்லை. சிலர், 'அப்படியே போங்கள்... இப்படியே போங்கள்' என்று பொட்டல் வெளிப் பாதைகளைக் காட்டினார்கள்.

ஒரு வழியாய் அந்த இடிந்த கட்டிடத்தைக் கண்டு பிடித்தேன். 'அனாதை விடுதி'யே ஓர் அனாதையாக இருந்தது. சரியான விளக்கு வெளிச்சம் கூட இல்லை. ஒரு பழங்காலத்து வீடு என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். புராதனமான கதவு தெரிந்தது. வெகு நேரம் தட்டினேன். ஒரு நடு வயதுக்காரர் அலுப்புடன் கதவைத் திறந்து கொட்டாவியுடன் விவரங்களைக் கேட்டுக்கொண்டு, சலிப்புடன் பெரியவரின் காகிதங்களை அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் பார்த்து விட்டு, எரிச்சலுடன் அவரை உள்ளே அழைத்துக் கொண்டு கோபத்துடன் கதவைத் திரும்பத் தாளிட்டுக் கொண்டார்.

எனக்குக் கோபம் வந்தது. 'பாவம், ரொம்பக் கஷ்டமான நிலையில் விடுதியை விடாப்பிடியாக நடத்துகிறார்கள்' என்று சமாதானம் சொல்லிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினேன்.

சென்னை திரும்புவதற்குப் பஸ்ஸூம் இல்லை, ஒன்றுமில்லை.எட்டு மைல் நடந்து செங்கல்பட்டை அடைந்து ஒரு டீக்கடையில் பன்னும் டீயும் சாப்பிட்டுவிட்டு, பஸ் ஸ்டாண்டிலேயே இரவைக் கழித்துவிட்டு, விடிகாலையில் பஸ் பிடித்து வீடு வந்து சேர்ந்தால்—



ஆர்த்தியிடமிருந்து இப்படியொரு அவசரச் செய்தி!

அடையாறு மாளிகையை நான் அடைந்தபோது அங்கே மயான அமைதி நிலவிக் கொண்டிருந்தது. துணுக் குற்று நின்றேன். 'மயான அமைதி' என்கிற வார்த்தையே ஏன் என் மனத்தில் உதிக்க வேண்டும்? இனம் தெரியாத கலவரமொன்று என் அடிவயிற்றில் மூண்டது.

ஆர்த்தியின் பதற்றமான அழைப்பை, அப்போது அவள் சொன்ன வாக்கியங்களை, மீண்டுமொரு முறை நினைவுக்குக் கொண்டுவந்து பார்த்தேன். ஏற்படப்போகும் அனுபவம்... 'ஸம்திங் ஸினிஸ்டர்' என்று எனக்குள் ஒரு குரல் ஒலித்தது. இத்தனைக்கும் பட்டப் பகல் வேளை. பயப்படாதே, தைரியத்துக்கு நான் இருக்கிறேன் என்று எனக்கு உறுதி கூறுவது போல, ராஜகம்பீரமாகச் செக்கச் செவேலென்ற பல்லவன்கள் சாலையை அடைத்துக் கொண்டு பறந்து கொண்டிருந்தன. பஸ் ஸ்டாப்புகளில் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். காலை வெய்யிலில் பளபளத்துக் கொண்டு வானத்தில் ஒரு பிரம்மாண்டமான விமானம் தாழப் பறந்து கொண்டிருந்தது. 'இளனி, சார்!' என்று மரத்தடியிலிருந்து ஓர் ஆளும் அவன் மனைவியும் என்னைத் தாக சாந்திக்கு அழைத்தார்கள். உலகம் தைரிய மயமாக, பயமென்னும் பேய் தன்னை அடித்து ஜெயித்ததாக விளங்கியது. ஆனாலும் அச்சம் என் குடலைக் கவ்விக் கொண்டிருந்தது.

என்னைச் சந்தேகத்துடன் பார்த்த வண்ணம் பெரிய இரும்புக் கேட்டைக் கொஞ்சமாகத் திறந்தான் வேலைக் காரன். "ஆர்த்தி வரச் சொன்னாங்க,'' என்று அவனிடம் தெரிவித்தேன்.

பந்தலிட்டாற்போல் பின்னிக் கொண்டிருந்த மரங்களின் மடியில் அமைதி தவழ்ந்து கொண்டிருந்தது. காக்கைகளும்

குருவிகளும் புறாக்களும் இன்னும் எனக்குத் தெரியாத பல வகைப் பறவைகளும் மரக்கிளைகளில் தொற்றிக்கொண்டு, 'ஏன் தான் இந்த ஆள் இப்படி நடுங்குகிறானோ' என்று தங்களுக் குள் கேள்வி போட்டுச் சளசளத்தன.

ஆர்த்தி என்னை நோக்கி வேகமாக வந்தாள். திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வந்தவளின் விழியில் பயம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. "என்னைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டாம்," என்றாள்.

"பின்னே என்ன சொல்லிக் கொள்வது? யாரென்று கேட்க மாட்டார்களா?"

"மாட்டார்கள்... எப்படியோ விஷயம் பரவி, மகராஜின் சீடர்கள் பல பேர் கூடிவிட்டார்கள். அவர்களில் ஒருவர் மாதிரி நீங்களும் இருந்து கொள்ளுங்கள்."

"மகராஜ் என்னைப் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்வார். பீரோ இருந்த ரூமில் கையும் களவுமாக என்னைப் பிடித்ததை மறந்திருக்க மாட்டார்."

"மகராஜ் கண்ணில் படவேண்டாம். படும்படி இருக்காது. அவர் அந்த அறைக்குள் இருக்கிறார்" என்றாள் ஆர்த்தி. வர வர அவள் குரல் தாழ்ந்து கொண்டே போயிற்று.

"எந்த அறைக்குள்?" என்றேன்.

"ஆனந்த் இறந்து கிடக்கும் அறைக்குள்," என்று சொல்லி விட்டு அவள் வேகமாகத் திரும்பிச் சென்று விட்டாள்.

ஆனந்த் யார்? மகராஜ் உதவியாள் என்று சொன்னாளே, அவனா?

என் பதைப்பை மறைத்துக் கொண்டேன். நடையைச் சாதாரணமாக்கிக் கொண்டேன். தூரத்திலிருந்து தெரிந்தது—



பங்களாவின் வெராந்தாவில் சில பெரிய மனிதர்கள் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு கவலையுடன் கூடி நின்றிருப்பது. நானும் அதேபோல் என் முக பாவத்தை மாற்றிக் கொண்டேன். மகராஜைப் பற்றி எவ்வித அபவாதமும் எழுந்துவிடக் கூடாது என்பதில் கவலைப்பட்டவன்போல் முகத்திலே சில கோடுகளை வரவழைத்துக் கொண்டேன்.

வெராந்தாவில் ஓர் அறை இருந்தது. அதன் கதவு உள்புறம் தாளிடப்பட்டிருந்தது. அறைக்கு வெளியேதான் அந்தப் பெரிய மனிதர்கள் நின்றிருந்தார்கள். எல்லாரும் காரில் வந்திறங்கிய செல்வந்தர்கள். மொத்தம் ஒரு டஜன் இருக்கும். எப்போதாவது தங்களுக்குள் தாழ்ந்த குரலில் இரண்டொரு வார்த்தைகள் பரிமாறிக் கொள்வதைத் தவிர, வேறு எத்தகைய சலனமும் அங்கே இருக்கவில்லை.

நான் கூடுமானவரையில் கண்ணியமான உடையே அணிந் திருந்தேன். ஆனால் அது பணக்காரத்தனம் தருவதற்குப் பற்றாது. ஆகவே, செய்தி கேட்டதும் அவசர கோலத்தில் இப்படிப் புறப்பட்டுவிட்ட மாதிரி ஒரு பாவ்லா செய்து கொண்டேன். வெராந்தாப் படியேறியதும் அகப்பட்ட முதல் மனிதரை நெருங்கி, "ராம்ஜி இப்பத்தான் போன் பண்ணினான். என்ன அச்சு?" என்று ரொம்ப உரிமையோடு விசாரித்தேன்.

என் ப்ளஃப் பலனளித்தது. "நானும் இப்பத்தான் வந்தேன். கதவிடுக்கு வழியாகப் பாருங்கள்" என்றார். மற்றவர்கள் ஏற்கெனவே பார்த்துவிட்டுத்தான் நிற்கிறார்கள் போலும். பிஜூ மகராஜின் சீடகோடிகளில் என்னையும் ஒருவனென எண்ணிக் கொண்டு ஒதுங்கி வழி விட்டார்கள்.

கதவு இறுக்கமாய்ச் சாத்தியிருந்தது. சாவித் துவாரத்தின் வழியே கண்ணை இடுக்கிக்கொண்டு பார்த்தேன்.

நீட்டிக் கொண்டு கிடந்தான் ஆனந்த் என்ற அந்த ஆள். அன்றொரு நாள் நான் ஆர்த்தியைப் பார்க்க வந்தபோது மகராஜ் அவளை அழைப்பதாக வந்து சொன்னானே, அதே ஆள் என்று முகத்திலிருந்து தெரிந்து கொண்டேன். மார்பு ஏறி இறங்கவில்லை. முகம் வெளுத்திருந்தது. கழுத்து வரை வெள்ளைத் துணி போர்த்தப்பட்டிருந்தது. அந்த அசைவற்ற நிலையிலிருந்து தான் அவன் இறந்துவிட்டானென்பது தெரிந்ததே யொழிய, மற்றப்படி அவன் தேகத்தில் விகாரமான தன்மை எதுவும் தென்படவில்லை. அமைதியான, நார்மலான முறையில் தான் இறந்திருக்கிறான் என்று தோன்றியது.

கண்ணை இன்னும் கொஞ்சம் சிரமப்படுத்திக் கொண்டு பார்த்தேன்.

சவத்தின் காலடியில் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தார் பிஜு மகராஜ். அவர் கண்கள் மூடியிருந்தன. மார்பு நிமிர்ந்திருந்தது. உதடுகள் இறுகியிருந்தன. நெற்றியில் பொடிப் பொடியாய் வியர்த்துக் கொண்டிருந்தது. கைகளிரண்டையும் கோத்து மடியில் வைத்துக் கொண்டிருந்தார்.

கழுத்தை வலித்ததால் நான் நிமிர்ந்து கொண்டேன்.

பக்கத்திலிருந்த ஒருவர், "நேற்று ராத்திரியிலிருந்து மகராஜ் இப்படியே உட்கார்ந்திருக்கிறார் பிணத்தின் பக்கத்தில். அவரை டிஸ்டர்ப் செய்ய யாருக்கும் தைரியம் வரவில்லை" என்ற எனக்குத் தெரிவித்தார்.

"ஆனந்த் அவருக்கு ரொம்பப் பிரியமான அஸிஸ்டென்ட். அவன் இப்படித் திடீரென்று இறந்து போவானென்று மகராஜ் எதிர்பார்த்திருக்க மாட்டார். எவ்வளவு பெரிய ஞானியானாலும் பாசம் விடவில்லை, பாவம்" என்றார் இன்னொருவர்.



"ஆனந்த் எந்த ஊர்க்காரர்?" என்று கேட்டேன்.

"உத்தரப்பிரதேசம்— ஊருக்குத் திரும்பிப் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டேயிருந்தான் ரொம்ப நாளாய். மகராஜுக்கு அவனை அனுப்பவே இஷ்டமில்லை," என்றார் மூன்றாமவர்.

எனக்கு இதயத்துக்குள் தடக்தடக்கென்று ஏதோ ஓர் ஓசை கேட்கலாயிற்று. இந்தக் கோஷ்டியிலிருந்து பிரிந்து ஊருக்குத் திரும்பிப் போகிறேன் என்று ஒருவன் சொன்னால்...

"மகராஜ் தானாக எழுந்து வந்து சவ அடக்கத்துக்குக் கட்டளை பிறப்பிக்க வேண்டும். எத்தனை நேரமாகுமோ தெரியவில்லை" என்றார் இன்னுமொருவர்.

எனக்கு உடம்புக்குள் தண்ணீர் ஓடுகிற மாதிரி இருந்தது. மகா பயங்கரமான கொலையொன்று இங்கே நடந்திருக்கிறதோ என்று நினைக்கும் போதே என் தேகம் நடுங்கியது. அதைப் புரிந்து கொள்ளாமல் இவர்களெல்லாரும் சர்வ சாதாரணமாகப் பேசிக் கொள்வதைப் பார்க்கப் பார்க்க என் திகில் அதிகரித்தது.

தோட்டத்தில் ஆர்த்தி ஒரு வேலைக்காரனுக்கு என்னவோ இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவள் தோற்றத்தில் எந்தப் பதைப்பும் தெரியவில்லை யெனினும் என்னை உலுக்கி எடுத்துக் கொண்டிருக்கும் அதே திகில் அவளையும் வாட்டிக் கொண்டிருக்கிறது என்பதை என்னால் உணர முடிந்தது.

இரண்டு நிமிடம், மூன்று நிமிடம் அவளையே பார்த்தவாறு இருந்தேன். இன்று ஆனந்த்— ஊருக்குப் போகிறேன் என்று சொன்ன ஆனந்த் நாளைக்கு ஆர்த்தி?

மார்பின் மீது பாறையை வைத்தாற்போல இருந்தது எனக்கு. யாருக்கும் சந்தேகம் எழாதபடி மெதுவே நழுவினேன் அந்த இடத்தைவிட்டு. யோசனையுடன் தோட்டத்தில் உலாத்துகிற மாதிரி குறுக்கும் நெடுக்கும் நடந்தேன். என்னை யாரும் கவனிக்கவில்லை என்று தெரிந்த வினாடியில் மரங்களுக்கிடையே புகுந்து ஓடினேன் தலைதெறிக்க. கேட்டருகே காவலாளியைக் கண்டதும் மீண்டும் நடையைச் சீராக்கிக் கொண்டேன். ரோட்டைத் தாண்டி நெடுஞ் சாலைக்கு வந்ததும் பழையபடி ஓட்டம் பிடித்தேன்.

'போலீஸ்! போலீசுக்குச் சொல்ல வேண்டும்! உடனே உடனே' என்று உதடுகள் முணுமுணுக்க, எங்கே டெலிபோன் கூண்டு இருக்கும் என்று கண்கள் அலைபாய, பயத்தினால் பின்னிக் கொண்ட கால்களைச் சிரமத்துடன் விடுவித்துக் கொண்டு ஓடினேன். ஓடிக்கொண்டேயிருந்தேன்.

## 10

## வேண்டாம், போலீஸில் சொல்ல வேண்டாம்!

கண்மண் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்தேனாகையால் தெருவில் என்ன வருகிறது, என்ன போகிறது என்பதைக் கூட நான் பார்க்கவில்லை.

அந்தக் கார் என்னை உரசினாற்போல சென்ற போது என் வலது தொடையில் மோதியிருக்க வேண்டும். அடுத்த வினாடி எனக்குத் தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. விழுந்து விட்டேன்.

விழுந்ததுதான் தெரியும். பிறகு கண் விழித்துப் பார்த்த போது, ஏதோ ஒரு பணக்காரரின் வீட்டில், மெத்தென்ற



கட்டிலில் படுத்திருந்தேன். தலையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன். கட்டு எதுவும் இல்லை. எழுந்து உட்கார்ந்தேன். பிறகு கட்டிலிலிருந்து கீழே இறங்கி நின்றேன். நிற்க முடிந்தது.

அந்தப் பிரம்மாண்டமான அறையின் மறுகோடியில் ஒரு டிரெஸ்ஸிங் டேபிள் இருந்தது. கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். ஆள் முழுசாக, உருப்படியாகத்தான் இருந் தேன்.

கண்ணாடிக் கதவுகளுடன் ஒரு ஜன்னல் இருந்தது. திறந்தேன். கம்பி போட்டிருந்தது. எதிரில் ஒரு பழைய தோட்ட மும் கார் ஷெட்டும்தான் இருந்தன. வீட்டின் பின்புறப் பகுதி என்று ஊகித்துக் கொண்டேன்.

கடியாரத்தில் மணி பார்த்தேன். மூன்று மணி, பிற்பகல், காலையில் நான் தெருவில் ஓடிக் காரில் அடிபட்டபோது மணி பத்தோ பதினொன்றோ இருக்கும். ஆகக்கூடி, அதிர்ச்சி காரணமாக நாலைந்து மணி நேரம் மயங்கிக் கிடந்திருக் கிறேன். பொன்னான நேரம் வீணாகி விட்டது.

கதவை இழுத்துப் பார்த்தேன். வெளிப்பக்கம் பூட்டி யிருந்தது, தட்டினேன். பலமாகப் பலமுறை தட்டியும் ஒரு பதிலும் வரவில்லை. முன்பின் தெரியாத ஒரு வீட்டில் அடை படக் காரணம்? பிஜு மகராஜின் ஆட்கள் யாரேனும் நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் புகார் கொடுக்க ஓடுகிறேன் என்று ஊகித்து... என்னென்னவோ கற்பனைகள்...

கட்டிலில் நான் திரும்ப வந்து உட்கார்ந்த இரண்டு வினாடிக்கெல்லாம் கதவு மெல்லத் திறக்கிறமாதிரி இருந்தது.

ஒரு பெண் தலையை நீட்டினாள். இரட்டை ஜடை போட்டுக் கொண்டிருந்த பெண். ஆனால் வயசு இரண்டுங் கெட்டானில்லை. இருபதுக்கு மேல் இருக்கும். முகத்தில் ஒரு

அப்பாவிக் களை வழிந்தது. என்னைப் பார்த்துச் சிரித்தாள்.

"சார், உங்களுக்கு நல்லா தேவலையா சார்? அடி கிடி எதுவும் இல்லையே சார்?" என்றாள், பாதி உடம்பைக் கதவுக்கு மறுபுறம் வைத்துக் கொண்டு,

"நீ யார்?" என்றேன்.

"எக்ஸ்கியூஸ் மீ சார். எங்க டாடி ரொம்பக் கோபிச்சுக் கிட்டார் சார். என் பேர் மீனா சார். நான் டிரைவ் பண்றப்போ டாடி பின் சீட்டிலேதான் இருந்தார் சார்."

அவள் சொல்லாமலே நான் ஊகித்துக் கொண்டேன். கார் லேசாக உரசியவுடன் நான் விழுந்துவிட்டேன். தகப்பனார்க் காரருக்குப் பயம் வந்து விட்டது. என்னைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு வீட்டுக்குக் கொண்டு வந்துவிட்டார்.

"பரவாயில்லை. நான் போகிறேன்," என்று எழுந்து கொண்டேன்.

"ஐயையோ! உங்களை விடக்கூடாதுன்னு டாடி சொல்லியிருக்கிறார் சார்!" வழி மறித்தாள் அவள்.

"அவர் எங்கே இப்போ?" என்றேன் ஆத்திரத்துடன்.

"வக்கீலைக் கூட்டிட்டு வரப்போயிருக்கார், சார்."

வக்கீலா!

"நீங்க பிற்பாடு என்மேலே கேஸ் போடுவீங்களாம், சார். அதுக்காக, என் மேலே குற்றம் எதுவுமில்லைன்னு உங்கள் கிட்டே எழுதி வாங்கிக்கப் போறாராம் சார்."

எனக்குச் சிரிப்பதா, சீறுவதா என்று தெரியவில்லை.

"நான் கேஸ் கீஸ் போடமாட்டேன். கவலைப்படாதே.



வழியை விடு," என்று நான் சொல்லச் சொல்ல அந்தக் கிறுக்குப் பெண் கதவைச் சாத்திப் பழையபடி தாள் போட்டுக் கொண்டு போய்விட்டாள்.

பல்லைக் கடித்துக் கொண்டு சிறிது நின்றேன். பிஜு மகராஜைப் பற்றி, அந்த ஆனந்தின் சந்தேகாஸ்பதமான மரணத்தைப் பற்றிப் போலீசில் உடனே சொல்லியாக வேண்டுமே.. நேரம் ஓடிக் கொண்டிருக்கிறதே....

அறையை ஒட்டினாற்போல் ஒரு சிறிய பாத்ரூம் இருந்தது. உயரத்தில் ஒரு வென்டி லேட்டர்... சிறியது தான்... ஒரு ஜம்ப் பண்ணி, மேலே எவ்விப் பிடித்தேன். சரீரத்தை வளைத்துத் திருப்பி ஒரு வழியாய் வெளியே குதித்தேன். குதித்த இடத்தில் ஒரு தகரம் இருந்ததால் டமடமாவென்று பெரும் சத்தம் கிளம்பியது. ஓசை கேட்டு யாரும் வருமுன் வாசலை அடைந்து தெருவுக்குத் தாவினேன்.

வெளியே வந்தவன் தற்செயலாகச் சட்டையைப் பார்த்ததும் திடுக்கிட்டு நின்றேன். பிறகு பாண்ட்டைப் பார்த்தேன். மறுபடியும் திடுக்கிட்டேன்.

காரில் இடிபட்டபோது ரத்தம் என் உடைகளில் கொஞ்சம் சிந்தியிருந்தது! நான் வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்த தால் யாரும் என்னைக் கவனிக்கவில்லை. ஒரு நிமிடம் நின்றிருந்தால் பார்த்திருப்பார்கள்— சந்தேகத்தோடு பார்த் திருப்பார்கள்.

இந்தக் கோலத்துடன் எப்படிப் போவது? அதுவும் போலீஸ் ஸ்டேஷனுக்கா! 'நீ எங்கேய்யா இந்த ரத்தக் கறையைச் சம்பாதிச்சே? முதல்லே அதைச் சொல்லப்பா' என்று கேட்பார்கள்.

வேறு உடை மாற்றிக் கொள்வதற்காக ஷெனாய் நகருக்கு ஓடினேன்.

பெட்டியில் பாண்ட் மட்டுமே சுத்தமாயிருந்தது. ஸ்லாக் சட்டை கசங்கி, கொஞ்சம் ஈரத்துடன் சுருட்டிக் கிடந்தது ஒரு மூலையில் எடுத்துச் சென்று தோட்டத்தில் செடிகளின் மீது பரத்திக் காயப் போட்டேன். இங்கு மங்குமாக உலாத்திக் கொண்டிருந்தபோது, "வந்துட்டீங்களா? ஓர் ஆள் உங்களைத் தேடிக்கிட்டு வந்ததே?" என்று கேட்டவண்ணம் தோட்டக்கார வீராசாமி வந்தான்.

யாராக இருக்கும்?

"அவன் பெயர் என்ன?"

"சொல்லலீங்க."

"வயசானவனா, சின்னவனா?"

"நாற்பது வயசு இருக்கும். இதுதானே புருஷ் வீடுன்னு கேட்டான். ஆமாம்னேன். ஜனார்த்தனன் இருக்காரான்னு கேட்டான். இல்லேன்னேன். போயிட்டான்."

"வேறே ஒண்ணும் சொல்லலே?"

"ஒரு லெட்டர் மட்டும் கொடுத்துட்டுப் போனானுங்க."

"முதல்லே அதைச் சொல்வதுதானே!" என்று எரிந்து விழுந்தேன். "கொடு அதை."

"அங்கே உங்க ரூமிலே, பெட்டி மேலே வச்சிருந்தேனே, பார்க்கலீங்களா?"

"உன் தலையிலே இடி விழ!" என்று திட்டிவிட்டு உள்ளே போய்ப் பார்த்தேன். லெட்டராவது, மண்ணாங்கட்டியாவது. எதையும் காணோம்.

"வீராசாமி! இங்கே ஒண்ணும் இல்லையே?" என்று குரல் கொடுத்தேன்.



அவன் வந்து, "இங்கே தானே வைத்தேன்," என்று பெஞ்ச் மீதும் பெட்டி மேலும் தேடினான். பறந்து போய்விட்டதோ என்று வாசல் பக்கமும் ஆராய்ந்தான்.

"வந்த ஆளையும் தெரியாது. அவன் கொடுத்த லெட்டரையும் தாரை வார்த்திட்டே!" எனக்கு ஆத்திரமாக வந்தது.

"நான் எங்கேங்க தாரை வார்த்தேன்? அதான் பத்திரமாய் உங்க பெட்டி மேலேயே வச்சேனே?"

'ஊரிலிருந்து அக்கா யாரிடமோ ஏதோ கடிதம் எழுதி அனுப்பி யிருப்பாளோ? கொஞ்ச நாள் முன்பு தானே அந்தக் கிழவனாரிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்பினாள்?'

மாடிப்படியருகே என்னவோ பளபளத்தது. கிட்டச் சென்று எடுத்தேன். ஏதோவொரு வேஃபர் பாக்கெட்டின் மேல் காகிதம். பம்பாய்க் கடையின் விலாசம் இருந்தது.

சித்தப்பா!

"வீராசாமி, ஐயா பம்பாயிலிருந்து வந்துவிட்டாரா என்ன!" என்றேன்.

"ஓ! வந்தாச்சே? உங்களுக்குத் தெரியாதா?" என்று அமைதி யாகச் சொன்னான். புத்திசாலி.

"மேலே இருக்கிறாரா?"

"வந்ததுமே வெளியிலே கிளம்பிட்டாருங்க. நீங்க கடை யிலே பார்க்கலீங்களா?"

இன்று பூரா நான் கடைக்கே போகவில்லை. வெளியே சுற்றிக் கொண்டிருக்கிறேன். தெரிந்தால் திட்டப் போகிறார்...

சட்டை உலர்ந்துவிட்டது. ஓர் உதறல் உதறி மாட்டிக் கொண்டேன்.

ஒரே ஒருமுறை மதுரையில் சைக்கிளில் லைட் இல்லாமல் போனபோது ஒரு போலீஸ்காரரிடம் மாட்டிக் கொண்டிருக் கிறேனே தவிர, மற்றப்படி போலீஸ் ஸ்டேஷனுக் கும் எனக்கும் இதுவரை சம்பந்தம் ஏற்பட்டதில்லை. ஆனால் குற்றம் நடந்த இடத்துக்குப் பக்கத்திலே எந்தப் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறதோ அங்கேதான் புகார் செய்ய வேண்டும் என்பது வரையில் தெரிந்து வைத்திருந்தேன். அப்படியானால் அடையாறு போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் மறுபடியும் போக வேண்டும். இரண்டு பஸ் மாறி, ஒரு வழியாக அடையாறிலே இறங்கினேன்.

"ஜனா!"

தூரத்தில் ஆர்த்தி வந்து கொண்டிருந்தாள். அவளை அப்போதுதான் ஒரு கார் இறக்கிவிட்டுச் சென்ற மாதிரி இருந்தது. இத்தனை நாளில் அவள் எந்தக் காரிலும் வந்ததோ போனதோ கிடையாது. யாருடைய காராயிருக்கும் என்று கவனிப்பதற்குள் அது பார்வையிலிருந்து மறைந்துவிட்டது.

அவள் பரபரப்புடன் என்னை நெருங்கினாள். ஆனால் அது கவலையான பரபரப்பு அல்ல. முகத்தில் ஒரு சந்தோஷம் தெரிந்தது. கையை உயர்த்தி ஆட்டியபடி அவள் வந்ததைக் கவனித்த போது, அவள் மனத்தில் உற்சாகம் கொப்புளித்துக் கொண்டிருக்கிறது என்று ஊகித்தேன். என்ன இத்தனை மகிழ்ச்சி அவளுக்கு? இப்படி நான் பார்த்ததேயில்லையே.

"எங்கே அவசரமாய்ப் போய்க்கொண்டிருக்கிறீர்கள்!' என்றாள்.

"போலீஸ் ஸ்டேஷனில் சொல்லிவிட வேண்டும் என்று



புறப்பட்டேன் காலையில். அதற்குள் என்னென்னவோ குறுக்கிட்டுவிட்டது. இப்பத்தான் மறுபடி போய்க் கொண்டிருக் கிறேன்."

"போலீஸ் ஸ்டேஷனுக்கா? என்ன சொல்லப் போகிறீர் கள்?" அவள் குரலில் பதைப்பு தென்பட்டது.

"ஆனந்த் விஷயம்தான். அந்த ஆளின் மரணத்தில் என்னவோ சந்தேகமாயிருக்கிறது என்று சொல்லிவிடப் போகிறேன்."

"வேண்டாம், வேண்டாம். அதை அப்படியே விட்டு விடுங்கள்!'' என்று என் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னாள். நடுச் சாலையில் நாங்கள் நிற்கிறோம் என்பது கூட மறந்து விட்டாள்.

எனக்குப் புரியவில்லை.

"ஏன்... எதற்காக விட்டு விடுவது?" என்றேன் திகைப் போடு. அவள் தயங்கித் தயங்கி, "இல்லை... போலீசுக்குப்... போனால் மேலும் மேலும் வம்பு. என்ன சந்தேகம், ஏன் சந்தேகம் என்று கேட்பார்கள். நம்மிடம் ஓர் ஆதாரமும் கிடையாது. காலையில் அவனை நல்லபடி தகனமும் செய்தாகி விட்டது. போலீஸ் கீலிசெல்லாம் வேண்டாம். தயவு பண்ணிப் பேசாமல் திரும்பிப் போங்கள்..."

காலையில் விஷயத்தை எனக்குத் தெரிவித்தவளே அவள்தான். இப்போது...

அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

"ஆர்த்தி... உன்னிடம் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. என்ன நடந்தது?" என்றேன்.

"மாறுதலா.. ஒன்றுமில்லை..." என்றாள்.

மீண்டும் மீண்டும் என்னிடம் எதையோ மறைக்கிறாள் என்று தோன்றியது.

அவள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான ஏதோ ஒரு சம்பவம் நடந்திருக்கிறது என்று ஊகித்தேன். அது என்ன என்று தெரியவில்லை. எவ்வளவோ பெரிய ரகசியங்களை எனக்குச் சொல்லத் தயங்காதவள், இதை மட்டும் மறைக்கிறாள். பிஜு மகராஜ் மீது புகார் செய்ய வேண்டாம் என்று தடுக்க வேறு செய்கிறாள். என்னையறியாமலே அவள்மீது அதிருப்தி ஏற்பட்டது. எங்களுக்குள் நெருக்கம் உண்டான பின், முதல் தடவையாக எரிச்சலுற்றேன்.

“உன் இஷ்டம்,” என்றேன். அவள் என் கோபத்தை எதிர் பார்க்கவில்லைபோலும். முகம் வாடிவிட்டது.

“ஜனா...” என்று சமாதானமாக ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

அதற்குள் நான் பஸ் ஏறிவிட்டேன். நான் ஏறவில்லை. விதி என்னை ஏற்றிவிட்டது.

## 11

## சீதா! யார் வந்திருக்கிறார்கள், வந்து பார்!

என்னவாயிருக்கும், என்ன வாயிருக்கும் என்று மனத்துக்குள் பதைத்துக்கொண்டே மதுரை அரசரடி பஸ் ஸ்டாப்பில் இறங்கி, திருப்பரங்குன்றம் போகும் பாதையில் கொஞ்ச தூரம் நடந்து இடப்பக்கம் திரும்பினேன்.

‘ஜனா, எனக்கு உடனே உன்னைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது’ என்று அக்கா எழுதியிருந்த இரண்டே



வரி! அந்தக் கார்டு ஒன்றுதான் என் கண் முன்னே நின்று கொண்டிருந்தது. கார்டைப் பார்த்தது தெரியும். அக்காவுக்கு என்னவோ ஏதோ என்று பதறியது தெரியும். இருந்த காசையெல்லாம் திரட்டி எடுத்துக் கொண்டதும், பையில் ஒரு சட்டை வேட்டியைத் திணித்துக் கொண்டதும், பிறகு திடீரென ஞாபகம் வந்து அந்த ரசவாத நோட்டையும் எடுத்து வைத்துக் கொண்டதும், எழும்பூரில் க்யூவைப் பார்த்து மலைத்து நின்றதும், கெஞ்சிக் கூத்தாடி, தப்புத் தண்டா செய்து, ஏமாற்றி க்யூவில் முன்னேறியதும், ரிசர்வ் பெட்டியில் ஏறி தாம்பரத்தில் இறக்கப்பட்டு பிறகு வேறு வண்டியில் தொற்றிக் கொண்டதும் தெரியும். இப்போது அக்காவின் வீட்டை நோக்கிப் பறந்து கொண்டிருக்கிறேன் என்பது தெரிகிறதே தவிர வேறு பிரக்ஞை இல்லை. வழி பூரா மழை. என்னை ஜன்னலோரத்துக்குத் தள்ளிவிட்டார்கள். அதிலே கதவைப் பாதிக்கு மேல் மூட முடியாதபடியால் நான் பாதிக்குமேல் நனைந்து போனேன். பையிலிருக்கும் நோட்டுப் புத்தகம் நனைந்துவிடக் கூடாது என்று அதை மறைத்து அணைத்து வைத்துக் கொள்ளப் படாதபாடு பட்டுவிட்டேன்.

அக்காவின் அவசர அழைப்பு மட்டும் வந்திருக்கவில்லை என்றால், இன்னேரம் நான் அடையாறின் ஏதாவதொரு மூலையில், எலியட்ஸ் கடற்கரையின் ஆளில்லாத கோடியில், ஆர்த்தியின் முகத்தை என் இரு கைகளாலும் ஏந்திக்கொண்டு, அந்தப் பிஞ்சு விரல்களை ஒவ்வொன்றாகச் செல்லமாய்ச் சொடுக்கு எடுத்துக் கொண்டே, அவள் ‘ஸ் ஸ்...’ என்று சிணுங்கச் சிணுங்க, அவளிடம் ஏற்பட்டிருந்த பொய்யான கோபத்தை, அவளுடன் கொண்டிருந்த போலியான பூசலை, எல்லாவற்றையும் மறந்துவிட்டு, குழந்தைபோல் துறுதுறுவென்று ஓடுகின்ற அந்தக் கருவிழிகளையே பார்த்துக் கொண்டு என்னையும் உலகத்தையும் பற்றிய நினைவே யில்லாமல் நின்றிருப்பேன்...

Optimized using trial version

நேற்றுப் பகல் மூன்று மணி இருக்கும். சித்தப்பாவின் பியட் வண்டியை, அதைக் கழுவுவதற்காகக் கட்டியிருந்த சிறிய 'திண்ணை'யின் மீது ஏற்றி நிறுத்திவிட்டு, தண்ணீர்ப் பைப்பின் முனையைத் தேடிக் கொண்டிருந்த சமயம்—

ஓர் ஆள் வந்தான். நாற்பது வயதிருக்கும்... "நீங்கதான் ஜனாவா?" என்றான் என்னை நெருங்கியதும்.

"ஆமாம்." என்றேன்.

"நல்ல காலம், இன்னிக்காச்சும் வூட்டிலே இருந்தீங் களே?" என்றான், சட்டையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்தபடி.

கடிதத்தை அவசரமாகப் பிரித்தேன்.

ஆர்த்தி.

அவள்தான் எழுதியிருந்திருக்கிறாள்!

"அன்புள்ள ஜனா,

நேற்று நான் எழுதிய கடிதத்தை நீங்கள் பார்க்கவில்லை என்று தெரிகிறது. பரவாயில்லை. அதைப்பற்றி மனசை உழப்பிக் கொள்ளாதீர்கள். என்னை இப்போது பார்க்க வர வேண்டாம். நானே உங்களை பார்க்க வருகிறேன்— நல்ல செய்தியுடன்.

என் கஷ்டமெல்லாம் தீரப்போகும் காலம் வந்து கொண்டேயிருக்கிறது. நானும் நீங்களும் ஆனந்தமாக இருக்கும் காலம் இதோ என் கண் முன்னே தெரிகிறது. சினிமாவில் பார்க்கிற மாதிரி நிஜமாகவே நாம் கொடைக்கானலி லும் காஷ்மீர், உதகமண்டலத்திலும் நைனிடாலிலும் ஆனந்தமாகச் சுற்றப் போகிறோம். எப்படி என்று இப்போது கேட்காதீர்கள். ஒரு வாரம் பொறுங்கள். நம்பமுடியாத செய்தி யுடன் உங்களை நேரே சந்திக்கிறேன்.

Optimized using trial version www.balesio.com



ஆர்த்தி."

என்ன இதற்கெல்லாம் அர்த்தம்? எனக்குப் புரியவில்லை. ஆனால் ஆர்த்தி மகா ஆனந்தமாயிருக்கிறாள் என்பது மட்டும் தெரிகிறது.

ஆனந்தத்துக்குக் காரணம்? அது நேற்றைய கடிதத்தில் இருந்திருக்குமோ?

பார்க்க வரவேண்டாம் என்று அவள் எழுதியிருந்த போதிலும் உடனே அவளைப் போய்ப் பார்க்க வேண்டும் போலிருந்தது. 'ஏய்... ஏய்... ஏய்...' என்று அந்த இரண்டு கன்னங் களையும் மாற்றி மாற்றி நிமிண்டினால், விலாவிலே விரல் களை ஓட்டிக் கிச்சுக் கிச்சு மூட்டினால், 'விடுங்கள்.. விடுங்கள்' என்று வெட்கப்பட்டுக்கொண்டு கொட்டிவிட மாட்டாளா எந்த ரகசியத்தையும்!...

கூடவே அவள்மீது கோபமும் வந்தது. 'எதையோ மறைக் கிறாய்' என்று நான் அன்று சொன்னபோது, 'இல்லை இல்லை...' என்றாள். இன்றைக்கும் மேலும் மர்மமாகக் கடிதம் எழுதுகிறாளே தவிர, என்னிடம் நம்பிக்கை வைக்க மறுக் கிறாள்... இவளாக இஷ்டப்பட்டபோது என்னிடம் வரு வாளாம். சொல்லுவாளாம். நான் நாய்க்குட்டி மாதிரி வாலை ஆட்டிக் கொண்டு இவளைச் சுற்றிச் சுற்றி வந்து சந்தோஷப் படுவேனாம்! கிடையாது. எனக்கும் கொஞ்சம் சுரணை உண்டு என்று காட்டுவதற்காகவாவது இவளைப் போய்ப் பார்க் காமலே இருக்க வேண்டும்...

மலரின் மேலும் முள்ளின் மேலும் நான் இப்படி மாறி மாறி உட்கார்ந்து கொண்டிருந்த சமயம்—

சாயந்தரத் தபாலில் அக்காவின் கார்டு வந்தது.

நான் புறப்பட்டுவிட்டேன், அப்போதே. சித்தப்பா வீட்டில் இல்லாததால் வீராசாமியிடம் சொல்லிக் கொண்டேன்...

மழை மதுரையிலும் பெய்திருந்தது. சாலையில் புழுதி அடங்கி மெத்தென்று ஈரமாக இருந்தது. வானம் பளீ ரென்றிருந்தது. ஒரே ஒரு சின்ன மேகம் நந்தி மாதிரியான உருவத்துடன் நகர்ந்து, நான் பார்த்துக் கொண்டிருந்தபோதே குல்லா வைத்த லாலாக் கடைக்காரன் மாதிரி மாறியது.

அக்கா வசித்துக் கொண்டிருந்த வீடு மதுரையின் சந்தடி யிலிருந்து ஒதுங்கிய ஒரு புதுக் காலனியில்.

முன்புறத்தில் வீட்டுச் சொந்தக்காரர்கள் இருந்தார்கள். பின்புறமாகச் சுற்றிக்கொண்டு சென்றேன். வாசற்புறம் சின்ன வெராந்தாவில் உட்கார்ந்துகொண்டு அரிவாள்மணையில் கத்தரிக்காய் நறுக்கிக் கொண்டிருந்த ஓர் ஐம்பது வயதுப் பேர்வழி, என்னை ஏறிட்டுப் பார்த்தவர், உள்பக்கம் திரும்பி, "சீதா! இங்கே வந்து பார், யார் வந்திருக்கிறாங்கன்னு! உன் தம்பி!" என்றார் பரபரப்புடன்.

அக்கா வாயெல்லாம் பல்லாக, முகமெல்லாம் மலர்ச்சி யாக, உடம்பெல்லாம் ஆனந்தமாக, "வாடா ஜனா! வா, வா! யார் தெரியவில்லை இவரை? உன் அத்தாண்டா!" என்றாள்.

அக்காவை நிர்க்கதியாக விட்டுவிட்டு எங்கோ இத்தனை காலமாக ஓடி ஒளிந்திருந்த அவள் கணவன்.

"சௌக்கியமா?" என்றேன். கூடவே நாலு தும்மலும் அடுக்கடுக்காக வந்தது. மழையில் நனைந்ததன் விளைவு.

காப்பி சாப்பிடும்போது அக்கா சொன்னாள்: அவள் கணவன் திடீரென்று நாலு நாள் முன்பு 'வடக்கேயிருந்து வந்து விட்டாராம். எந்தெந்த சாமியார்களுடனோ புத்தி கெட்டு



ஊரைச் சுற்றி அலைந்துவிட்டு, கிட்டத்தட்ட உயிர் போகும் ஆபத்து ஏற்பட்டு தப்பி, கடைசியில் ராஜஸ்தானில் எவரோ ஒரு வியாபாரி இவருக்கு நல்ல புத்தி சொல்லி ஊருக்கு அனுப்பி வைத்தாராம். அவருடைய கடலைப் பருப்பு வியாபாரத்தில் இவருக்கு இங்கே ஏஜென்ஸி கொடுத்திருக்கிறாராம். ஆகவே இனிமேல் கஷ்டமில்லாமல் வாழ்க்கை நடத்த முடியுமாம்.

"இந்தச் சந்தோஷ சமாசாரத்தை உனக்குச் சொல்ல ணும்னு துடியாத் துடிச்சுப் போனேன் ஜனா," என்றாள் அக்கா, கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய.

"அதற்காக அப்படியா அக்கா எழுதுவது? என்னவோ ஏதோவென நான்..."

அன்று இரவு எனக்கு நல்ல குளிர் ஜுரம் வந்துவிட்டது. அடுத்த நாலைந்து நாளும் அக்கா போட்டுக்கொடுத்த கஷாயத் தைக் குடித்துவிட்டு அழுக்கு கம்பளிக்குள் முடங்கிக் கிடந் தேன். பிறகு யாரோ ஒரு டாக்டரிடம் அத்தான் அழைத்துப் போனார். மேலும் இரண்டு நாள் படுத்திருக்கும்படி சொல்லி மாத்திரைகள் தந்தார்.

ஆறாம் நாளிரவு எனக்கு நன்றாய் வேர்த்துவிட்டது. கம்பளி சொட்டச் சொட்ட நனைந்துவிட்ட மாதிரி ஆயிற்று. அதை உதறிவிட்டுப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். அடுத்த அறையில் அக்கா கிசுகிசுவென்று பேசிக் கொண்டி ருப்பது கேட்டது. பிறகு அவர்களும் உறங்கிவிட்டார்கள். தலைமாட்டில் ஒரு பை தெரிந்தது. ஊரிலிருந்து நான் எடுத்து வைத்திருந்த பை.

சுவரில் மாட்டியிருந்த பெட்ரூம் விளக்கைக் கீழே இறக்கி வைத்துப் பெரிது பண்ணிக் கொண்டேன். பிஜு மகராஜின் குறிப்புக்களை முன்பு விட்ட இடத்திலிருந்து மேற்கொண்டு

நகலெடுக்கத் தொடங்கினேன்.

*The sages will tell that two fishes are in our sea without any flesh or bones. Let them be cooked in their own water. Then they also will become a vast sea, the vastness of which no man can describe*

...இந்த இரண்டு மீன்களும் ஒன்றே, இரண்டல்ல. அவைகள் இரண்டாம். ஆயினும் ஒன்றே..."

முன்போலவே, என்ன பொருள் இதற்கெல்லாம் என்பதை யோசியாமலே எழுதிக் கொண்டிருந்தேன். கதவருகே ஓசை கேட்டது.

"என்ன எழுதுகிறாய் ஜனா?" என்றார் அத்தான்.

"ஒன்றுமில்லை...'' என்று மழுப்பிவிட்டு நோட்டுப் புத்தகத்தை மூடி வைத்தேன். "சித்தப்பா காருக்குப் பெட்ரோல் கணக்கு... பில்களைச் சரியாய் எழுதிவைக்காவிட்டால் தொலைத்துவிடுவார்..."

"நேரமாகிறது. படுத்துக்கொள். காய்ச்சல் வந்த உடம்பு..." என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மறுநாள் அக்கா கடைக்குப் போய்விட்டாள். நான் வெந்நீர் அடுப்பில் புகையை ஊதிக் கொண்டிருந்தேன். அன்று இரவு கட்டாயம் மெட்ராஸ் கிளம்பிவிடவேண்டும் என்று என் திட்டம். சதா ஆர்த்தியின் ஞாபகம்.

"நகர்ந்துக்க. நான் விசிறுகிறேன்," என்று அத்தான் என் பக்கத்தில் விசிறியுடன் வந்து உட்கார்ந்தார். நகர்ந்தேன். அடுப்பை விசிறியபடியே, "ஜனா, நான் இந்த வகையில் ரொம்பத் துன்பப்பட்டவன். நான் சொல்கிறேன். கேள். இதெல்லாம் வேண்டாம்," என்றார்.

28633



நூலக ஆணைக்குழு கிளை நூலகம் கோயம்புத்தூர்

"என்ன... எது?"

"ரசவாத சமாசாரம்தான். மோசடிக்காரனும் மூளையில்லாதவனும் விளையாடுவார்கள். உன்னைப் போல் படித்தவன் ஏன் அதிலே நுழைய வேண்டும்?"

"இல்லை... வந்து..."

"மறைக்காதே. உன் அக்கா அன்றைக்கே சொன்னாள். ராத்திரி என்ன எழுதிக் கொண்டிருந்தாய் என்பதை நானும் பார்த்துவிட்டேன். நான் பார்க்காத சாமியாரில்லை. சுற்றாத காடு இல்லை. பறிக்காத மூலிகையில்லை. அதிலே பாதிக்கு மேல் அசிங்கம் வேறே. நூற்றுப் பத்து கிண்ணத்திலே சிறு நீர் பிடித்து, இருபத்தெட்டு நாள் வெய்யிலில் காயவைக்க வேண்டும் என்பான் ஒருத்தன். ஜோதி விருட்சத்தைக் காட்டு கிறேன் என்பான் இன்னொருத்தன். பனிக்குட நீர் வேண்டும் என்பான் வேறொருத்தன். இதுதான் ருது ரத்தம் என்று இன்னொருவன் காட்டுவான். அதெல்லாம் என்னவென்று தெரிந்தால் உனக்குச் சித்தப் பிரமையே பிடித்துவிடும்.."

'நீங்கள் சொல்வதெல்லாம் வேலையற்ற பண்டாரங்கள் பரப்பிய கட்டுக்கதைகள். விஞ்ஞானபூர்வமான சயன்டிஃபிக் வழிமுறை வேறேயொன்று இருக்கிறது,' என்று அவருக்குச் சொல்ல நினைத்தேன். சொல்லவில்லை. "சும்மா தமாஷ்— இனி மேல் விட்டுவிடுகிறேன்," என்றேன்.

அன்று இரவு பாண்டியனில் ஏறி, மறுநாள் காலை எழும்பூரில் இறங்கினேன். ஷெனாய் நகர் பஸ்சுக்காக ஸ்டாண்டில் காத்திருக்கையில் அடையாறு பஸ் வந்து நின்றது.

முதலில் என் ஆர்த்தியைப் பார்த்துவிட்டுப் பிறகு சித்தப்பாவின் வீட்டுக்குப் போனால் என்ன? ஏறிக் கொண்டேன்.

அடையாறு பங்களா வாசலில் ஒரு சிறு கும்பல் தென்பட்டது. ஒரு போலீஸ் ஜீப் நின்றிருந்தது.

"என்ன... என்ன இங்கே?" என்று ஒருவரைக் கேட்டேன்.

"யாரோ ஆர்த்தியாம்..."

"ஆமாம்... என்ன அவளுக்கு?"

"செத்துவிட்டாள்... கொலை..." என்றார் அவர்.

## 12

## என் மச்சான் பார்த்துப் போலீசுக்குச் சொன்னார்

ஷாக்.

என் கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு அரைப் பைத்தியம் மாதிரி திருதிருவென்று விழித்துக் கொண்டு நின்றேன்.

ஆர்த்தி... கொலை...

"யோவ்! நீபாட்டுக்குக் கொலைண்ணுறியே? உன் கையிலே வந்து சொன்னாங்களா?'' என்று யாரோ யாரையோ அதட்டுகிறார்கள்.

"காதிலே விழுந்ததைச் சொன்னேம்பா."

"கடல்லே ஒதுங்கிச்சுண்ணா கொலையாவும் இருக்கும். தற்கொலையாவும் இருக்கும், விபத்தாகவும் இருக்கும். கம்முனு கெடப்பா..."

எனக்குக் கால்கள் தள்ளாடிக் கொண்டிருந்தன. எல்லாம் இரண்டிரண்டாய்த் தெரிகிற அளவுக்குத் தலைக்குள்ளே ஒரு சுழற்சி. கடல்... ஒதுங்கியது... என்னென்னவோ பேசிக் கொள்



கிறார்களே? எனக்கு நெஞ்சே வெடித்துவிடும்போல் ஆகிவிட்டது.

ஸ்கூட்டர்களில் சிலரும், கார்களில் பலரும் நடையாகச் சிலரும் உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள்— பிஜு மகராஜின் சீடர்கள். மகராஜ் சொற்பொழிவின்போது இந்த முகங்களில் சிலவற்றைப் பார்த்திருக்கிறேன். பிஜு ஃபௌண்டேஷனில் நேரிட்டுள்ள விபத்தைக் கேள்விப்பட்டு வந்திருக்கிறார்கள்.

எனக்கும் உள்ளே போக உரிமையுண்டு. மரங்கள் அடர்ந்த பாதையின் வழியே நீள நடந்தேன். இந்த மரங்களின் மறைவில் அந்தரங்கமாக எத்தனை முறை நானும் ஆர்த்தியும் கிசுகிசுத்திருக்கிறோம்...

இறுதிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். அவள் உடம்பை வெள்ளைத் துணி போர்த்தியிருந்தது. எப்போதும் அவள் விரும்பி அணிந்த வெள்ளைத் துணி, ஆனால் அந்த வனப்புமிக்க வளைவுகள் இப்போது காணப்படவில்லை. ஏதோவொரு நீளமான பரப்பாக மூடியிருந்தது. ஒருவேளை... நினைத்துப் பார்க்கவே நெஞ்சில் பந்து மாதிரி அடைத்தது... போஸ்ட்மார்ட்டத்தின் போது அவளைக் கண்டபடி அறுத்திருப்பார்கள்...

"எப்படி வரமுடியும்? பீகாரில் தன்பாத்தாமே... அங்கே இருக்கிறார்களாம்."

தன்பாத்திலே இருக்கிறவர்கள்... அவர்களை நான் பார்த்திருக்கிறேன்— ஆர்த்தியின் வார்த்தைகளில். சுரங்கத்தில் கூலிகளாக வேலை பார்க்கும் அம்மா, அண்ணன்கள், தங்கைகள்... 'தங்க ரகசியத்தைக் கண்டுபிடிக்கப் போகிறேன், அவர்களைக் குபேரபுரியில் கொண்டுபோய் வைக்கப் போகிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தவள் துண்டம் போட்ட சவமாகக்

கிடக்கிறாள். மெட்ராஸ் போயிருக்கிற பெண்ணைப் பற்றி என்னென்ன எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ... 'யாரம்மா வீட்டிலே? தந்தி!' என்று காக்கிச் சட்டைப் பியூன் அந்தக் குடிசைக் கதவைத் தட்டும்போது... வாசகத்தைப் படிக்கும் போது...

குபுக்கென்று என் கண்ணில் நீர் பொங்கிக் கன்னத்தில் வழிந்தது. வேடிக்கை. கண்ணெதிரே ஆர்த்தி இறந்து கிடப்பதைக் கண்டும் வராத கண்ணீர், அவளுடைய அம்மா அழுவாளே என்பதை நினைக்கிறபோது...

அந்தப் போர்த்தியிருந்த உடம்பின் அருகே போனேன். ஆர்த்தி, ஆர்த்தி. 'கையளவு உள்ளம் வைத்து, உடல் போலே ஆசை வைத்து' என்று பாட்டு வருமே... அது மாதிரி, எத்தனை ஆசைகளை இந்த மனசுக்குள் தேக்கி வைத்திருந்தாய்...

ரொம்ப நெருங்கிவிடாமல் என்னைத் தடுக்கிற மாதிரி ஒருவர் என் அருகில் வந்து நின்றார்.

"ஆர்த்தியின் முகத்தைப் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது..." தழுதழுத்தேன். குனிந்து அந்தப் போர்வையை எடுக்கப் போனேன்.

அவர் மெள்ள என்னைத் தடுத்து, ஓரமாக நகர வைத்தார். "வேண்டாம்... ரொம்பப் பரிதாபம்... அதைப் போய்ப் பார்ப்பானேன்..."

"வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய நவானி க்ருஹ்ணாதி நரோபராணி ததா சரீராணி..."— பிஜு மகராஜின் சன்னமான குரலில் கீதை வந்து கொண்டிருந்தது. கைகளைத் தொங்கப் போட்டுக் கோத்துக்கொண்டிருந்தார். கண்கள் பாதி மூடி மார்பைப் பார்க்கிறாற்போல் தலை தாழ்ந்திருந்தது. நடுவகிடெடுத்த நரைத்த கிராப்பில் லேசான கலைசல். வெள்ளை மஸ்லின் ஜிப்பாவும் தும்பைப்பூ வேட்டியும்...



ஆர்த்தியின் ஆன்மா சாந்தியடைவதற்காகப் பிரார்த்தனை பண்ணுவதாகப் பாவனை...

அவளைத் தூக்கிக் கிடத்தினார்கள். மறுபடியும் ஒருமுறை அவள் முகத்தைப் பார்க்க முயன்றேன். மறுபடியும் தடுக்கப்பட்டேன். அவளைச் சுமந்து செல்லும் நால்வரில் ஒருவனாக இடம் பெறத் தாவினேன். பிஜு மகராஜ் கைகாட்டிய நால்வர் முந்திக்கொண்டு விட்டார்கள்.

இருபது முப்பது பேர் கொண்ட சவ ஊர்வலத்தில் நானும் ஒருவன், அடையாறு நெடுஞ்சாலை வழியே அவளுடைய பயணம். ஐயோ பாவம், சிறு வயசுப் பெண்ணாம் என்று பாதையில் அனுதாபப் பேச்சுக்கள் காதில் விழுந்தன. உலகத்துக்கு அவ்வளவுதான் தெரியும். இளம் வயசுப் பெண். அந்த இளம் வயசுக்குள்ளே எவ்வளவு கோட்டைகள், எவ்வளவு ஏக்கங்கள். எவ்வளவு எதிர்பார்ப்புகள். அதைப் பற்றி யெல்லாம் ஒருத்தருக்கும் தெரியாது...

அவளைக் கடைசிப் படுக்கையில் கிடத்தினார்கள். நான் கிட்டே நெருங்கினேன்.

"தகன சமயத்தில் யாரும் பக்கத்தில் இருக்க வேண்டாம்..." வெட்டியான் இருந்தால் போதும்," என்றார் பிஜு மகராஜ்.

"ஆமாம்... அந்தக் கோரத்தைப் பார்ப்பானேன்..." என்றார் ஒருவர். எல்லோரும் சுடுகாட்டுக்கு வெளியே வந்து விட்டார்கள் என்னையும் தள்ளிக்கொண்டு.

ஆர்த்தியின் தேகம் தகனமாகிக் கொண்டிருப்பது தெரிந்தது. முதலில் சின்னச் சுடராகப் புறப்பட்டு, பரவி, வியாபித்து, அடர்த்தியுற்று, பெரிய நெருப்பாகத் தகதகக்க ஆரம்பித்தது.

Optimized using trial version www.balesio.com

வந்திருந்த கூட்டத்தினரில் ஒரு போலீஸ் அதிகாரியும் இருந்தார். "ஆர்த்திக்கு என்ன நேர்ந்தது?" என்றேன். "நீ யார்?" என்று திருப்பிக் கேட்டார்.

என்ன நேர்ந்தது என்ன நேர்ந்தது என்ன நேர்ந்தது என்று கமா இல்லாத கேள்விகளாக நெஞ்சுக்குள் ஆர்த்தியின் தகனப் புகைபோல் மேலெழும்பிக் கொண்டிருக்க...

"ஜனா, நீ செய்யறது நல்லாயில்லேப்பா. ஊகூம், கொஞ்சம் கூட நல்லாயில்லே," என்று உதட்டைப் பிதுக்கித் தலையை அசைத்துச் சித்தப்பா என்னை வரவேற்றபோது எனக்குப் பயத்தைக் காட்டிலும் ஆச்சரியம் அதிகமாயிருந்தது. அக்கா வைப் பார்க்கப் போகிறேன் பேர்வழி என்று மதுரைக்குப் புறப்பட்டதற்கும் சரி, உடம்பு சரியில்லாமல் நான் பாட்டுக்குப் பிரெஞ்சு லீவு எடுத்துக் கொண்டதற்கும் சரி, பிறகு இன்று திரும்பி வந்த தினத்தன்றே மனம் போனபடி சுற்றிவிட்டு வருவதற்கும் சரி, சித்தப்பா வாள்வாளென்று கத்தி என்னைக் குதறியிருக்க வேண்டும். சத்தம் போட ஆரம்பித்துவிட்டால் அப்புறம் அவருக்குச் சொந்தப் பிள்ளையும் தெருக்கூட்டுகிற தொழிலாளியும் ஒன்றுதான். அப்படிப்பட்டவர் ஏன் ரொம்ப நொந்து போனவர் மாதிரி...

"இல்லே சார், வந்து..." என்று சொல்ல வாயெடுத்தேன்.

"போதும்பா, போதும், எக்ஸ்பிளனேஷன் வேறே நான் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கணுமாக்கும்!" சித்தப்பா தன் தோசைக்கல் கடியாரத்தைப் பார்த்தார். "வண்டியை எடுத்துவா. மூடுகிற டயம்."

சுடுகாட்டில் குளித்துவிட்டு ஈரத் தலையுடன் நான் வந்திருப்பதைப் பற்றி அவர் ஒரு கேள்வியும் கேட்கவில்லை. பாவம், அவருடைய கஷ்டங்கள் அவருக்கு.



நான் போய் வண்டியை எடுத்து வந்தேன். மண்ணடியில் பார்க்கிங் ரொம்பக் கஷ்டம். ராவுத்தர் கடைக்குப் பக்கத்தில் ஓர் இடுக்கு உண்டு. சித்தப்பாவுடன் உள்ள சினேகிதத்தை முன்னிட்டு அவர் அந்த இடத்தை ஓசி கொடுப்பார். (பர்த்திக்கு நாகூர் வரை போய்வர வண்டியை ஓசி கேட்பதும் உண்டு. அது வேறு விஷயம்.)

"என்னய்யா, ரொம்ப நாள் அண்டர்கிரவுண்ட் ஆயிட்டே?" என்று ராவுத்தர் கேட்டதற்குப் பதிலேதும் சொல்லாமலே காரைக் கடை வாசலில் கொண்டு வந்து நிறுத்தினேன். கிளட்சை மிதிக்கும்போதும் ஸ்டியரிங்கை வளைக்கும் போதும் உடம்பு என் வசத்தில் இல்லாதிருப்பது தெரிந்தது... ஆர்த்தி... போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டுக் காலோடு தலை மூடப் பட்டுவிட்ட மேனி...

"இத்தனை வருஷமாய் மானேஜராய் இருக்கிறீர், பாங்க் மானேஜரைப் பார்த்து இந்தச் சின்ன விஷயத்தைச் சரி பண்ணாமல் கோட்டை விட்டிருக்கிறீரே?" என்று சித்தப்பா வின் வேதனையான குரல் கேட்டுக் கொண்டிருந்தது. பாவம், சித்தப்பாவின் பணக் கஷ்டம் என்றைக்குத்தான் தீரப் போகிறதோ? "பார்ட்டியிடமிருந்து செக் வரும். ஆனர் பண்ணிடுங்கன்னு ஒரு வார்த்தை முன்னாடியே சொல்லி யிருக்கக் கூடாது? சொல்லியிருந்தீர்னா இவன் திருப்பியனுப்பு வானா, அவன் இப்படி மானம் போகிற மாதிரி லெட்டர் போடுவானா? சே, சே, சே." கர்ச்சீப்பினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு தன் பெரிய சரீரத்தைக் கிளப்பிக் காரில் ஏறிக் கொண்டார்.

அவர் சொல்லாமலே பாங்க்குக்குத்தான் போக வேண்டும் என்று தெரிந்துகொண்டேன். ஒரு மைல் தூரம் தான். அதற்குள் எத்தனை பேர் மேலே இடிக்கப் போய்

விட்டேன்! சித்தப்பாவுக்கும் ஆபத்தைத் தேடி, எனக்கும் ஆபத்தைத் தேடி, வண்டிக்கும் சேதாரத்தை ஏற்படுத்தி... வேறொரு சமயமா யிருந்தால் சித்தப்பா என்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருப்பார்...

பாங்கிலிருந்து பத்து நிமிடத்தில் திரும்பிவிட்டார். மானேஜர் சாதிக்காததை அவர் சாதித்துவிட்டாரென்பது முகத்தின் மலர்ச்சி—இல்லை, மலர்ச்சி என்று சொல்ல மாட்டேன்— ஒருவகை நிம்மதி சொல்லியது..

"பகல் பூரா எங்கே போய் விட்டாய்?" என்றார் காரில் ஏறிக்கொண்டதும், இப்போது அவர் குரலில் தெளிவு தென் பட்டது.

"சார்... ஆர்த்தி இறந்து போய்விட்டாள் சார்..." அடக்கி வைத்திருந்த அழுகை பொத்துக் கொண்டு வெளிப்பட்டு விட்டது.

"ஆர்த்தியா! ...யாரது?"

"பிஜு மகராஜ் ஆசிரமத்தில்... முன்னேகூடத் தங்கச் சாவியாய் மாற்றி..."

"அடடே, அந்தப் பெண்ணா? என்ன ஆச்சு?" என்று திடுக்கிட்டார். "அதிருக்கட்டும், அவளுக்கும் உனக்கும்..."

'காதல்' என்ற வார்த்தையைப் பெரியவர் முன்னே உச்சரிக்கத் தயக்கமாயிருந்தது. "ரொம்ப இது சார்..."

"நான் அந்தப் பெண்ணை அதிகம் பார்த்ததில்லை... சின்ன வயசாச்சே. என்ன நேர்ந்தது? ப்ளட் கான்ஸரா?"

"இல்லை சார்... மர்டர்..."

சித்தப்பா நிமிர்ந்து உட்காருவது கண்ணாடியில்



தெரிந்தது. "என்ன! நிஜமாவா?"

"அப்படித்தான் பேசிக்கிறாங்க. போலீசிலே 'ஒண்ணும் சொல்லமாட்டேன் என்கிறார்கள்."

"த்சு த்சு த்சு..." சித்தப்பா மெய்யாகவே வருத்தப்பட்டார். "முட்டாள் பையா... இந்த மாதிரி காதல் விவகாரம் என்று என்னிடம் சொல்லியிருந்தால் ஏதாவது ஏற்பாடு பண்ணி யிருப்பேனில்லையா? ஸிம்பிளாய் ஐம்பதோ நூறோ செல வழித்து ஒரு கல்யாணத்தை முடித்திருப்பேனே..."

"தோன்றவில்லை சார்."

"பரிதாபம், பரிதாபம்." சித்தப்பா உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு வினாடி பேசாமல் இருந்தார். பிறகு, "வெள்ளை சாரி கட்டிக் கொண்டு... பாப் தலை... உயரமாய் இருப்பாள் இல்லை? இப்ப ஞாபகம் வருகிறது. அழகான பெண்... அடப் பாவமே... அதுதான் நீ என்னவோ போலிருக்கிறாயா? வண்டியை நிறுத்து..."

நிறுத்தினேன். இறங்கிக் கொள்ளச் சொன்னார். பர்சைத் திறந்து ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார். "ஏதாவது சாப்பிட்டு விட்டு, சினிமா கினிமா போய் மனசைத் தேற்றிக் கொண்டு வீட்டுக்கு வா..."

இத்தனை நாளில் ஒரு, பைசா அனாவசியமாக என் கண்ணில் காட்டாதவர்... "பரவாயில்லை. சார்..."

"பரவாயில்லை என்றுதான் நானும் சொல்கிறேன்," என்றார் பிரியமான கண்டிப்புடன்.

அலைகள் என் கால்களைத் தொட்டுத் தொட்டுத் திரும்பிக் கொண்டிருந்தன. திருவான்மியூரைத் தாண்டிய கடற் கரை என்று நினைக்கிறேன். எப்படி அங்கே என்னையும்

அறியாமல் வந்தேன்? தூக்கத்தில் நடக்கிறவன் மாதிரி நடந்து வந்திருக்க வேண்டும். சித்தப்பா கொடுத்த பத்து ரூபாய் அப்படியே இருந்தது பையில். சினிமாவுக்கும் போகவில்லை. ஓட்டலுக்குள்ளும் நுழையவில்லை.

என்னைத் தவிர ஈ காக்காய் கிடையாது அந்தக் கடற் கரையில்.

கைகளைக் கோத்துத் தலையணையாக்கிக் கொண்டு மல்லாந்து படுத்திருந்தேன். இதோ ஒன்று, அதோ ஒன்று என்று நட்சத்திரங்கள் தலைகாட்டத் தொடங்கிய வேளை... முதுகின் கீழே ஈர மணல் சட்டையை நனைத்துக் கொண்டிருந்தது. கண் களைப் பாதி மூடி...

யாரோ ஓர் ஆள் எட்டத்தில் போய்க்கொண்டிருந்தான். என்னைப் பார்த்தான். நின்றான். தயங்கித் தயங்கி அருகில் வந்தான். நான் கொஞ்சம்தான் கண்ணைத் திறந்தேனென்றா லும் அவன் முகத்தில் பயம் சூழ்ந்திருப்பதைக் கண்டேன்.

நான் ஆடாமல் அசையாமல் படுத்திருந்தேன். இப்படியே உயிர் போய்விட்டால்... என்னை நானே சவம் போல் கற்பனை செய்து கொண்டேன்.

அவன் என்னை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியிலும் மிரட்சி இருந்தது. அச்சம் இருந்தது. அவன் ஒரு மீனவன் என்பது தெரிந்தது.

"யாரய்யா அது?" என்றான் பத்தடி எட்டத்தில் நின்றபடி. ஆனால் அதட்டலாக இல்லை— சந்தேகத்துடன்.

நான் பேசாமலே இருந்தேன்.

"உங்களைத்தானே! ஐயா! சார்!"



நான் தலையைத் திருப்பி, கண்களைத் திறந்தேன். எதற்காக இந்த முட்டாள் இப்படி நடுங்கிக் கொண்டிருக் கிறான்? என்னிடம் என்னத்தைக் கண்டுவிட்டான் அப்படி?

"அப்பாடா! உசிரோடதான் இருக்கிறீங்களா?" என்றான்.

"பின்னே?"

"காலையிலே ஒதுங்கிச்சே ஒரு பொம்பளைப் பொணம். அது மாதிரி சாயங்காலத்துக்கு இன்னொண்ணோன்னு பயந்திட்டேன்."

நான் எழுந்து உட்கார்ந்தேன். ஆர்த்தியையா சொல் கிறான்? அவள் இறந்துபோய்க் கிடந்தது இந்த இடத்திலா... அந்த மணலைத் தழுவிக் கொண்டு புரண்டு கதற வேண்டும் போலிருந்தது.

"எந்தப் பெண்?" என்றேன்.

"என் மச்சான் பார்த்துப் போலீசுக்குச் சொன்னான். இடுப் பிலே ஒரு சாவிக்கொத்து வளையம் இருந்திச்சு— அதிலேருந்து தான் கண்டுபிடிச்சாங்க என்னவோ ஒரு மகராஜ்னு... இல்லாட்டி பாவம், என்னத்தைத் தெரிஞ்சுக்க முடியும், தலை யில்லாத முண்டத்தை வச்சுகிணு..."

கடகடவென்று அவன் பேசிக் கொண்டு போனதில் அந்தக் கடைசி வாக்கியம்...

"என்ன சொன்னே? தலையில்லாத முண்டமா?"

"ஆமாம் சார். தெரியாதா? வெறும் முண்டம் மட்டும் தான் கரையிலே ஒதுங்கிக் கிடந்திச்சு. தலை கிடையாது. சுறா தின்னிச்சோ, இல்லே எவனாச்சும் தலையை வெட்டிட்டுக் கடல்லே எறிஞ்சானோ... தலை தனியாய் மிதந்து வருதான்னு

போலீஸ்காரங்க ரோந்து போய்க்கிணே இருக்கிறாங்களே. பார்க்கலை?"

## 13

## நீ கொடுத்த தகவல்கள் உபயோகமாயிருக்கும்

முரட்டுத்தனமில்லாத சுருண்ட மீசையும், சின்னக் கண்களும், சிவப்பு நிறமுமாய், எனக்கு ஒரு மூத்த அண்ணா இருந்தால் எப்படிப் பிரியமும் மரியாதையும் ஏற்படுமோ அப்படி இருந்தார் அந்த ஏ.ஸி.

"அடையாறு பங்களாவில் ஆர்த்தி என்று ஒரு பெண் இறந்து போனாளே, அவளைப் பற்றிப் போஸ்ட் மார்ட்டத்தில் என்ன முடிவு செய்தார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு போகத்தான் நான் வந்தேன் சார்," என்றேன்.

"உனக்கும் அந்தப் பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்?" மிடுக்கான குரலில் திருப்பிக் கேட்டார் அவர்.

"அவளை... அவளைக் கல்யாணம் செய்து கொள்வதாக இருந்தவன் சார் நான்..."

"உட்கார்."

ஆர்த்தியின் கடிதத்தை எடுத்துக் கொடுத்தேன். அவர் படித்துப் பார்த்தார். கடிதத்தை மேஜைமீதிருந்த ஒரு பைலினுக்குள் செருகினார். "இது எப்போது உனக்கு வந்தது?"

"ஏழெட்டு நாள் முன்பு, சார். நான் அன்றைக்கு மதுரை போய்விட்டு இன்று காலையில்தான் வந்தேன். ஏழு நாள் முந்தி இத்தனை சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் இருந்தவள் இன்றைக்கு இப்படிக் கொலை செய்யப்பட்டிருக்கிறாள் என்றால்..."



"கொலை என்று உனக்கு யார் சொன்னார்கள்?"

"யாரும் சொல்லவில்லை" என் ஊகம்..."

"உன் ஊகத்தை உன்னிடமே வைத்துக் கொண்டு, உனக்குத் தெரிந்ததை மட்டுமே வரிசையாகச் சொல்லு. நீ எங்கே தங்கியிருக்கிறாய்?"

"ஷெனாய் நகரில், என் சித்தப்பாவுடன்."

"என்ன வேலை?"

"அவரிடம் டிரைவராக இருக்கிறேன்."

"சித்தப்பாவுக்கு என்ன வேலை?"

"ஸ்டீல் ஷீட் பிசினஸ். மண்ணடியில் கடை."

"எத்தனை நாளாக நீ அவரிடம் வேலை பார்க்கிறாய்?"

"இப்பத்தான் இரண்டு மூன்று மாசமிருக்கும்."

"இறந்துபோன பெண்ணை எத்தனை நாளாய்த் தெரியும்?"

"அவளையும் இந்த இரண்டு மாசமாகத்தான், சார்."

"எப்படி?"

ஒரு ட்யூட்டி கான்ஸ்டபிள் இரண்டு கப் டீ கொண்டு வந்து வைத்தார். "சாப்பிடு," என்றார் ஏ.ஸி.சாப்பிட்டேன். மேலே கிய் கிய்யென்று வினோதமான ராகத்துடன் மின்சார விசிறி சுழல, என் பதில்களைத் தொடர்ந்தேன். "பிஜு" மகராஜின் சொற்பொழிவைக் கேட்பதற்காக ஒரு நாள் போன போது..."

"உனக்கு அந்த மாதிரி விஷயங்களில் இன்ட்ரஸ்ட் உண்டா?"

"எனக்குக் கிடையாது. என் சித்தப்பாவுக்கு உண்டு."

"ஸ்டீல் ஷீட்டுக்கும் ஆன்மீகத்துக்கும் என்ன சம்பந்தம்?"

ஏ.ஸி. புன்னகை செய்தார். "சரி, அங்கே நீ அந்தப் பெண் ஆர்த்தியுடன் பேசுவதற்காக என்ன சந்தர்ப்பம் வந்தது?"

பெட்டிச் சாவியைக் கெட்டுப் போக்கிவிட்டு அவள் தடுமாறியதையும் நான் டூப்ளிகேட் கொடுத்ததையும், வீட்டுக்கு வந்து பார்த்தபோது அந்தச் சாவி தங்கமாக இருந்ததையும், அது ரசவாத வித்தையாக இருக்கலாமென்று சித்தப்பா சொன்னதையும்...

"வாட்?" நிமிர்ந்து உட்கார்ந்து என்னை முறைத்தார் ஏ.ஸி.

"ஆல்கெமி என்று நீங்கள் கேள்விப்பட்டதில்லை? இரும்பைத் தங்கமாக மாற்றுகிற ரசவாதம்? அதுவாக இருக்கும் என்று சித்தப்பா முதலில் நினைத்தார். பிறகு அப்படியில்லை என்று தெரிந்தது... மறுநாளே என் சித்தப்பா அதைத் திருப்பிக் கொண்டு போய் பிஜு மகராஜிடம் கொடுத்து விட்டார். யாரோ பம்பாய் பணக்காரனின் அசல் தங்கச் சாவியாம் அது."

ஏ.ஸி. மோவாயைத் தடவிக்கொண்டார். "அப்புறம்?"

போலீஸ் அலுவலகத்தின் சிவப்புச் சுவர்கள் என்னை முறைக்க, கனத்த பூட்ஸின் டக்டக் நடமாட்டம் வெளியே இடைவிடாமல் ஒலிக்க, காலி செய்த டீக் கோப்பையைச் சுற்றிச் சுற்றி ஓர் ஈ வட்டமடிப்பதைப் பார்த்தபடியே, நான் எனக்கும் ஆர்த்திக்கும் இடையே நடந்ததையெல்லாம் சொன்னேன். சென்ற நூற்றாண்டில் ஒரு ஜெர்மன்காரரும் இரண்டு தமிழர்களுமாய்க் கண்டுபிடித்த ரசவாத ரகசியத்தைப் பற்றியும் அது மூன்று பகுதிகளாகப் பங்கு பிரிக்கப் பட்டதையும் சொன்னேன். பிஜு மகராஜும் ஆர்த்தியுமாகச் சேர்ந்து அந்த



மூன்றாவது பகுதியைத் தேடிக் கொண்டிருந்ததையும் சொன்னேன். முதல் இரண்டு பகுதி கொண்ட நோட்டை நான் ஆர்த்தியின் உதவியுடன் எடுத்து வந்து காப்பி செய்து கொண்டிருப்பது வரை சொல்லி முடித்தேன்.

மறுபடி ஏ.ஸி. நின்றார். என் அருகே வந்தார். என் நாற்காலியின் முனையில் ஒரு காலைத் தூக்கி வைத்துக் கொண்டு, அதில் முழங்கையை ஊன்றிக்கொண்டார். என் முகத்தையே உற்றுப் பார்த்த வண்ணம் நான் சொன்ன ஒவ்வொரு வாக்கியத்தையும் தட்டிலிருந்து எடுத்து விழுங்குகிற மாதிரி வாங்கிக்கொண்டார்.

"அந்த நோட்டுப் புத்தகத்தைக் காப்பி பண்ணி முடித்துவிட்டாயா? இன்னும் இருக்கிறதா?"

"இன்னும் நிறைய இருக்கிறது. ஆனால் அத்தனையும் சுத்தக் குப்பை."

"அதைக் கொண்டு வா. என்ன விஷயமென்று நாங்களும் பார்க்கிறோம்." அவர் தொனியில் ஸீரியஸ்னஸ் நிறைய ஏறியிருந்தது. ஃபைலுக்குள் செருகிய ஆர்த்தியின் கடிதத்தை மறுபடியும் வெளியே எடுத்தார்.

"முந்தின நாள் ஒரு கடிதம் எழுதினதாகச் சொல்லியிருக்கிறாளே, அது எங்கே?"

"அது எங்கே என்பதும் தெரியவில்லை. அதில் என்ன எழுதியிருந்தாள் என்பதும் தெரியவில்லை."

"ரைட், நீ போகலாம்." நறுக்கென்று விடை கொடுத்தார்.

"சார். ஆர்த்தியைக் கண்டு பிடிக்காமல் விடக் கூடாது. கொலை செய்தவர்களைக் கண்டுபிடித்துத் தூக்கில் போட வேண்டும். அப்போதுதான் எனக்கு மனசு ஆறும்."

ஏ.ஸி. புன்னகை செய்தார். "நீ சொல்லாவிட்டால் கூடப் போலீஸ் தன் கடமையைச் செய்யும். கவலைப்படாதே நீ கொடுத்த தகவல்கள் உபயோகமாயிருக்கும். அவசியப்படும் போது உன்னைக் கூப்பிடுகிறோம்."

அன்றிரவு பூரா நான் தூங்கவில்லை. ஆர்த்தி திரும்பத் திரும்ப என் கண்முன் வந்து நின்று கொண்டிருந்தாள்.

அடுத்த நாள் சாயந்திரம்—

பிஜு மகராஜின் அடையாறு மாளிகையின் எதிரே ஒரு லாண்டிரியில் அர்ஜெண்ட் துணி எத்தனை நாளில் கொடுப்பார்கள், டிரை வாஷுக்கு எத்தனை சார்ஜ் என்று தேவையில்லாமல் விசாரித்துக் கொண்டிருந்தேன். என் கண் மட்டும் மாளிகையின் வாசலில் பதிந்திருந்தது. லாண்டரிக்காரன் பாட்டுக்கு யாருடனோ சளசளவென்று பேசிக் கொண்டிருந்தான், என்னைக் கவனிக்காமல்.

"அப்படின்னா நீ வேலையிலிருந்து நின்னிக்கப் போறியா?" என்றான் லாண்டரிக்காரன்.

"வேலையே வோணாம்பா. நான் ஊருக்குப் போறேன். ராவிலே தங்கியிருக்கவே பயமாயிருக்குது. அதுவும் அந்தப் பொண்ணு... தங்கக் கட்டிப்பா. 'டீ குடிக்கிறியா ராசு, சாப்பிட்டியா ராசு'ன்னு மினிட்டுக்கு நூறு வாட்டி விசாரிக்கும். அது போனாவிட்டு..."

நான் பிஜு மகராஜின் பங்களாவையே கவனித்துக் கொண்டிருந்தேன்.

"இதுதானேய்யா நீ கொணாந்த அழுக்கு?" என்று கேட்டு விட்டு, "சார், கொஞ்சம் நகர்ந்துக்குங்க," என்றான் லாண்டரிக்காரன். நான் நகர்ந்தேன். அழுக்கு மூட்டை நான் நிற்பதற்கு



இடைஞ்சலாயிருந்தது. மெல்லக் காலால் நகர்த்தினேன்.

அந்தத் துணிகளின் நிறம்... என்னவோ ஒன்று என் மனசை நெருடியது... காவி... காவித் துணிகள்... அந்த ஆளை ஓரக் கண்ணால் அளவெடுத்தபடி அவர்கள் பேச்சிலும் காதைச் செலுத்தினேன்.

"ஏன், பெரிய சாமியாருக்கென்ன? அவரும் நல்ல மனுசன் தான்," என்று லாண்டரிக்காரன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"நீ ஒண்ணு!" அந்த ஆள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் குரலை தாழ்த்திக் கொண்டான். "சாமியார்ணா பொய் சொல்லக் கூடாதய்யா முதல்லே. இப்பப் பாரு. வெளியே எங்கேயோ போகப் போறாராம். கேட்கிறவர்களுக்கு வெளியே போயிருக் காருன்னு சொல்லக் கூடாதாம்..."

அவன் சொல்லிக் கொண்டிருந்தபோதே ஒரு கார் அந்தப் பங்களாவை விட்டு வெளிக் கிளம்பி, கடற்கரையை நோக்கிப் பறந்தது.

"கடையைக் கவனிக்காமல், கேட்கிறவங்களுக்குப் பதில் சொல்லாமல், நல்லா அரட்டை அடிக்கிறீங்கப்பா!" என்று ஒரு நொண்டிச் சாக்கை வீசிவிட்டு நான் சாலையில் இறங்கினேன்.

சர்பத் வண்டியருகே ஓர் ஆட்டோக்காரன் மஞ்சள் நிறமாய் ஒரு கிளாஸ் உறிஞ்சிக் கொண்டிருந்தான். ஆட்டோவில் தாவியமர்ந்தேன்.

"அதோ அந்தக் காரைப் பின்தொடர்ந்து போ. ஆனால் ரொம்பக் கிட்டத்தில் போய் விடாதே!"

பிஜு மகராஜின் படகுக் காரெங்கே, எனக்கு வாய்த்த ஓட்டை ஆட்டோ எங்கே! ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் காரின் கடைசிப் புழுதி கூடப் பார்வையிலிருந்து மறைந்து விட்டது.

ஆனால் ஒன்று தெரிந்தது. திருவான்மியூரைத் தாண்டிய கடற்கரை பக்கம்தான் கார் சென்ற திசை... அங்கே பக்கத்தில் ஒரு சவுக்குத் தோப்பு இருக்கிறது... ஆட்டோவைத் தொடர்ந்து போகச் சொன்னேன்.

சவுக்குத் தோப்புக்கு ஒரு பர்லாங்கு முன்னதாகவே இறங்கிக் கொண்டேன். தோப்பை நோக்கி நடந்தேன்.

காரின் சுவட்டையே காணோம். இருட்டும் அடர்த்தியும் நானாகவே பிரமை செய்து கொண்ட நரியின் ஊளையும் மரங்களின் இடுக்கு வழியே வந்த நட்சத்திர வெளிச்சமும்—

அந்த எதிர்பாராத சம்பவத்தை நான் எதிர்பார்க்கவில்லை. எனக்கு ஏற்பட்ட முதல் எண்ணம், மேலேயிருந்து ஏதோ மரக்கிளை முறிந்து என் மீது விழுந்துவிட்டது என்பது தான். இல்லை... அது ஒரு கை. கழுத்தை முறிக்கிற மாதிரி என்னைப் பின்புறத்திலிருந்து வளைத்து வாயை அழுத்தியது. மூக்கையும் அடைத்தது.

திமிறினேன்; முடியவில்லை.

கையையும் காலையும் உதறினேன். திரும்பி, என்னை தாக்கியவரின் முகத்தைப் பார்க்க முயன்றேன்... என்னைத் திரும்ப விடவில்லை. வினாடிக்கு வினாடி மூச்சுத் திணறியது. மடேலென்று என் மண்டையில் ஓர் அடி விழுந்தது— அதே சமயம் நானும் அந்தக் கையை என் பலம் கொண்ட மட்டும் கடித்தேன்.

வெகு நேரம் கழித்துத்தான் எனக்கு உணர்வு வந்திருக்க வேண்டும். நிஜமாகவே எங்கேயோ நரிகளின் ஊளைகள் கேட்டன. தலை விண்விண்ணென்று தெறித்தது. கையால் துடைத்து, நட்சத்திரத்தின் வெளிச்சத்தில் பார்த்தேன். ரத்தம் கசிந்திருப்பது புரிந்தது.



எப்படி வீட்டை வந்தடைந்தேன்? எனக்கே தெரியாது. மணி விடியற்காலை நாலோ நாலரையோ இருக்கும்...

காலைச் சிற்றுண்டியின்போது சித்தப்பா சற்றுச் சுமுகமாக இருப்பது வழக்கம். முந்தின இரவின் அனுபவங்களை அப்போது சொன்னால் அனுதாபத்துடன் கேட்பாரென நினைது சமையற்காரனுடன் நானும் கூடமாடப் பரிமாறினேன்.

ஆனால் சித்தப்பா எதுவும் பேசாமலே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஜுரம் வந்தவர் மாதிரி உடம்பைப் போர்த்துக் கொண்டு வேறே இருந்தார்.

"என்ன உடம்பு சித்தப்பாவுக்கு?" என்று ரகசியமாகச் சமையற்காரனை கேட்டேன்.

"பாவம். கையிலே சுளுக்காம். இடது கையாலே சாப்பிடறாரே பார்க்கலை?" என்றான்.

சித்தப்பாவைப் பார்க்க பாவமாயிருந்தது. என் கஷ்டங்களைச் சொல்ல இதுவல்ல சமயம். சாயந்தரம் கடையிலிருந்து திரும்பி வரும்போது பார்த்துக் கொள்ளலாம்.

## 14

## உனக்குப் பெங்களூரில் ஒரு வேலை இருக்கிறது

காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு வந்த சித்தப்பா, "வண்டியை எடு," என்றார்.

சட்டை போட்டுக்கொண்ட பின்னரும் ஒரு துண்டு போர்த்திக் கொண்டிருந்தார். பாவம், நல்ல ஜுரம் போலிருக்கிறது. தொண்டைகூடக் கரகரவென்றுதான் இருந்தது.

ஆபீசை அடைந்ததும், "இன்றைக்கு வேண்டுமானால் ரெஸ்ட் எடுத்துக்குங்களேன், சார். உடம்பு என்னவோ போலிருக்கிறதே?" என்றேன்.

அவர் என்னைக் கூர்ந்து கவனித்தார். "எனக்கு ஒன்று மில்லை. நீதான் நாளுக்கு நாள் டவுனாகிக் கொண்டிருக் கிறாய். நான் உனக்குச் சோறே போடவில்லை என்று நாளைக்கு உன் அக்கா என்னைத் திட்டப் போகிறாள்."

"சொன்னால் நாக்கு அழுகிவிடும், சார். மகாராஜா மாதிரி நாலு வேளை சாப்பிட்டுக் கொண்டு மொழு மொழுவென்று இருக்கிறேன்."

"ஊகூம், ஊகூம்" என்று தலையசைத்தார் அவர். "நிச்சய மாய் உன் உடம்பு நன்றாயில்லை. நான் சொல்வதைக் கேள். பேசாமல் ஒரு மாசம் ஊரிலே போய் இருந்துவிட்டு வா."

"இப்பத்தானே சார் போனேன்?"

"லீவ் நான் தருகிறேன்."

"அதற்கில்லை, சார். ஊரிலே ஒரு வேலையுமில்லை. எதற் காகப் போவது அனாவசியமாய்?"

"பெங்களூரில் போய் இரு. ஒரு சினேகிதருக்கு லெட்டர் தருகிறேன். உடம்பு தேறும்."

"உங்க மாதிரி யார் சார் இத்தனை பிரியமாய்ச் சொல்லப் போகிறார்கள்? இருந்தாலும் இப்போது நான் எங்கேயும் போக இஷ்டப்படவில்லை சார். நீங்க தப்பாய் நினைக்கக் கூடாது" என்று சொல்லிவிட்டேன்.

பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

சாந்தோம் சர்ச்சுக்கு அருகில் நின்றிருந்தபோதுதான் என் அருகில் அந்த மனிதர் ஸ்கூட்டரை நிறுத்தினார்.



ஸ்கூட்டர் ஓட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட வயதும் ஒரு குறிப்பிட்ட தோற்றமும் இருக்கவேண்டும் என்று நினைக்கி றவன் நான். ஐம்பதைத் தாண்டிய வயதில், வேட்டியும் சட்டை யும் போட்டுக் கொண்டு, கழுத்தில் அங்கவஸ்திரத்தைச் சுற்றிக் கொண்டு... என்ன வேண்டிக் கிடக்கிறது. அந்த மனிதர் என்னை என்னவோ கேட்க நினைக்கிற மாதிரி தோன்றியது. நான் பேசப் பிடிக்காதவன் மாதிரி வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன்.

அவர் விடவில்லை. "ஏன்பா சோழமண்டல் என்று ஆர்ட்டிஸ்ட் காலனியாமே? எப்படிப் போகிறது?" என்று தரையில் ஒரு காலும் ஸ்கூட்டரில் ஒரு காலுமாய்ச் சாய்ந்து கொண்டு கேட்டார்.

முன்னெப்போதோ ஒரு முறை சித்தப்பாவை அங்கே ஓட்டிச் சென்றிருக்கிறேன். "இப்படியே கடற்கரை ரோட்டில் போனால், திருவான்மியூரைத் தாண்டி..." என்று ஆரம்பித் தேன்.

சட்டென்று ஓர் எண்ணம் தோன்றியது.

"நான் பின்னால் ஏறிக்கலாமா?"

"தாராளமாய், எங்கே போகணும்?"

"திருவான்மியூர் வரை. அங்கிருந்து நீங்க நேராகப் போக வேண்டியதுதான். நான் வழி சொல்கிறேன்," என்றேன்.

பிலியன் சீட்டைத் தட்டிவிட்டு, "ஏறிக்க," என்றார்.

"இப்படித் திரும்புங்க அப்படி நேராய்ப் போங்க," ன்னு அவருக்கு வழிகாட்டுவதே பெரும்பாடாயிருந்தது. அவருடைய அங்கவஸ்திரம்தான் காரணம். படபடவென்று என் முகத்திலடிப்பதை விலக்கிக் கொண்டு பேசினேன்.

முந்திரித் தோப்பு வந்தது. "நிறுத்துங்க," என்று சொல்லி இறங்கிக் கொண்டேன். அதன் பிறகு அவர் எப்படிச் செல்ல வேண்டும் என்று வழியைச் சொல்லித் தந்து விடை கொடுத்து அனுப்பினேன்.

தொலைவில் ஸ்கூட்டர் மறைந்தது. எனக்கு இடது பக்கத்தில் ஓவென்று சமுத்திரம் அலையடித்துக் கொண்டு இரைச்சலிட்டது. வலப்புறம் அந்த முந்திரித் தோப்பு உய்உய்யென்று கிளைகளை ஆட்டிச் சளசளத்தது.

என் கால்கள் அந்தத் திசையில்தான் நகர்ந்தன. எப்போது அங்கே என்னை யாரோ தாக்கினார்களோ, அப்போது அங்கே அன்னியர் வரவை விரும்பாதவர் இருக்க வேண்டும். வந்து எதையோ தெரிந்து கொண்டுவிடக் கூடாது என்று நினைக்கிறார்கள்... என்னவாக இருக்கும் அப்படிப்பட்ட விஷயம் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவாவது மறுபடி அங்கே போக ஆசை ஏற்பட்டது.

மரங்களெல்லாம் குட்டை குட்டையாய் இருந்தன. ஒரு மரத்தின் கீழே போய் நின்றுகொண்டேன். கீழே பொத் பொத்தென்று மணல் காலை உள் வாங்கிக் கொண்டது.

நின்று கொண்டிருக்கும் போதே தூறல் அதிகரித்தது. இனி அந்த மரத்தடி பாதுகாப்பில்லை என்று இன்னொன்றுக்குத் தாவினேன். முதலில் முன்புறம் நனைந்தது போக இப்போது முதுகுப்புறம் நனைந்தது. மை போல என்னைச் சுற்றிலும் இருட்டுக் கப்பிக் கொண்டது. ஒரு மரத்தடியிலிருந்து இன்னொரு மரத்தடிக்கு என்று நான் மாறி மாறி ஒண்டிக் கொண்டிருக்கையில்தான்—

பளீரென்று அடித்த ஒரு மின்னலில் அந்தச் சின்னக் கட்டிடம் ஒரு நொடி கண்ணில் பட்டு மறுநொடி மறைந்தது.

Optimized using trial version www.balesio.com



அடுத்த மின்னலுக்காகக் காத்திருந்தேன். மறுபடியும் தெரிந்தது —தோப்புக்கு நடுவே. கட்டிடம் என்று சொல்ல முடியாது. கார் ஷெட்டைக் காட்டிலும் கொஞ்சம் பெரிதாயிருந்தது. ஒரு பாதி தகரக் கூரையும் ஒரு பாதி ஓடும் போட்டிருப்பது தெரிந்தது. பக்க வாட்டில் இரண்டொரு ஜன்னல்கள் தெரிந்தன. அடுத்த மின்னலின்போது, அந்த ஜன்னல்கள் மூடப்பட்டிருக்கின்றன என்பதையும், நுழைவு வாசல் இன்னொரு பக்கத்தில் இருக்க வேண்டும் என்பதையும் கண்டு கொண்டேன்.

இனிமேல் நனைவதற்கு இடமில்லை. ஆகவே அந்தக் கட்டிடத்தில்தான் போய் ஒண்ட வேண்டும்.

ஐம்பது கெஜ தூரத்தில் தெரிந்த அந்தக் கட்டிடத்தை நோக்கி மழையை லட்சியம் செய்யாமல் ஓடினேன்.

குட்டையான இரண்டு படிகள் தெரிந்தன. ஏறிக் கதவைத் தட்டினேன். அது தானாகவே திறந்து கொண்டது.

நுழைந்தேன். நிலைப்படியின் இரு பக்கத்திலும் சுவரைத் தடவிப் பார்த்தேன். வலப்பக்கம் விளக்கு ஸ்விட்ச் இல்லை. இடப்பக்கம் இருந்தது. நாலு ஸ்விட்சுகள் தட்டுப்பட்டன. நாலையும் தட்டியதுதான் மிச்சம்; எரியவில்லை.

கதவுகள் அடைத்துக் கிடக்கும் அறைகளுக்கே உரிய ஒரு வெப்பம் என்னைச் சூழ்ந்து கொண்டது. காலில் கீழே தரை நறநறவென்று குப்பையா யிருந்தது. ஒரு விகாரமான நாற்றமும் அடித்துக் கொண்டிருந்தது. மூக்கை உறிஞ்சி என்ன நாற்றமாயிருக்கும் என்று ஊகித்துப் பார்த்தேன். மிஞ்சிப் போன பழைய ஜூர மிக்ஸர்களைக் கீழே கொட்டினால் ஒரு நெடி வருமே அந்த மாதிரி இருந்தது.

என்னவோ ஒரு சத்தம்.

நின்றேன்.

எனக்கு அருகே யாரோ மூச்சு விடுகிற மாதிரி ஓசை கேட்டது. அல்லது பிரமையாகவும் இருக்கலாம். நான் என் மூச்சை நிறுத்திக்கொண்டு கணக்கிட்டபோது அதுவும்— அல்லது அவர்களும்— தன் மூச்சை நிறுத்திக் கொள்கிற மாதிரி இருந்தது. கதவு சும்மாதான் சாத்தியிருந்தது. நாய் ஏதாவது நுழைந்திருக்குமோ?

'சூ!' என்று ஒருமுறை அதட்டிவிட்டுக் காத்திருந்தேன். எதுவும் என்னைத் தாண்டிக்கொண்டு ஓடவில்லை.

சுவரோடு சுவராக நகர்ந்தேன். சுவரில் பள்ளம் தெரிந்தது. ஜன்னல் கொக்கிகளை விலக்கி, கதவைத் திறந்துவிட்டால் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் வெளிச்சம் வரும்... விரல்கள்தான் வலித்தன. கொக்கியை அகற்ற முடியவில்லை. அத்தனை துருப் பிடித்துப் போயிருந்தது. மிகுந்த பிரயத்தனத்துக்குப் பிறகு ஒரு கொக்கி ஒடிந்து என் கையோடு வந்தது.

ஜன்னலைத் திறக்கும் முயற்சியைக் கைவிட்டு விட்டு, அது எந்த மாதிரியான கட்டிடம் என்று ஆராய்வதற்காக மேலும் நகர்ந்தேன்.

மறுபடியும் அந்தப் பிரமை... என்னோடு கூடவே இன்னும் ஏதோ ஒன்றும் நகருகிறது. உயிருள்ள, சுவாசம் விடுகிற பிராணி.

இரண்டடி வைத்திருப்பேன். காலில் எதுவோ தட்டுப்பட்டு உருண்டது. கையிலெடுத்துத் தடவிப் பார்த்தேன். மண் கலயம். ஆனால் சட்டிபோலக் குறுகலாக இல்லாமல் வாயகன்ற கிண்ணம்போல் இருந்தது. முழங்காலில் தவழ்ந்து மேலும் தடவினேன். இன்னும் மூன்று நாலு மண் கலயங்கள் தட்டுப்பட்டன. ஒன்றில் சிறிது தண்ணீர்கூட இருந்தது.



பக்கத்தில் இரண்டொரு கட்டைகள் தெரிந்தன. விறகு மாதிரி தோன்றியது. நுனிகளைத் துழாவினேன். கரிப் பிசுக்குப் போல் இருந்தது.

இப்படி முன்னறையிலேயா அடுப்பு மூட்டியிருப்பார்கள்? இன்னும் சிறிது துழாவினேன். வழவழவென்று கொஞ்சமும் நறநறவென்று கொஞ்சமும் மணல் மாதிரி அகப்பட்டது. கையிலெடுத்து முகர்ந்து பார்த்தேன். பிறகு ஒரு சிட்டிகை நாக்கிலும் வைத்துக் கொண்டேன்.

சாம்பல்.

ஒரு பெரும் காற்றில் வாசல் கதவு மடேலென்று அடித்து மூடிக் கொண்டது. திறந்திருந்த வழியே வந்த கடுகத்தனை வெளிச்சமும் இப்போது அவுட்.

இப்போது மூச்சு ஓசை மட்டும் இல்லை. காலோசையும் சேர்ந்து கேட்டது. யாரோ என்னை நெருங்கி நெருங்கி வருகிறார்கள் என்று என் உள்ளறிவு சொல்லிற்று. திடீரென்று பின்புறத்திலிருந்து என்னைத் தாக்கலாம், அல்லது கழுத்தை நெறித்து விடலாம். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. முன்னெச்சரிக்கையாகப் பின்புறம் நகர்ந்து, சுவரோடு சுவராகச் சாய்ந்து கொண்டு நின்றேன்.

திடீரென என்னை உரசினாற் போல் யாரோ பாய்ந்தார்கள். கைக்கு அகப்பட்டதை இழுக்கப் பார்த்தேன். ஒரு சட்டை டர்ரென்று கிழியும் சத்தம் கேட்டது. அதை வைத்துக் கையை இழுத்தேன். எதுவோ நறுக்கென்று என் கையில் பட்ட மாதிரி இருந்தது.

எல்லாம் கண்ணிமைக்கும் நேரம்தான். வாசல் கதவு தடாலென்று திறந்து மூடிக்கொண்டது. அந்த நொடி வெளிச்சத்தில் ஓர் உருவம் வெளியே பாய்ந்து ஓடி மறைவதைக் கண்டேன்.

வெளியே இன்னும் மழை பெய்து கொண்டிருந்தது. தோப்பு மரங்கள் அத்தனையும் ஊய் ஊய் என்று பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தன.

உள்ளே திரும்பினேன். இன்னும் யாராவது இருக் கிறார்களா என்று நிதானித்தேன். எந்தச் சத்தமும் வரக் காணோம்.

அந்த மண் கலயம்தான் காலில் பட்டது. ஒரு சிறு கிண்ணத்தை மட்டும் எடுத்துக் கொண்டேன். மூலையில் கொஞ்சம் காகித குப்பைகள் இருந்தன. அந்தக் காகிதத்தில் அதைச் சுற்றிக் கொண்டேன்.

சித்தப்பாவின் வீட்டுக்குள் நுழைந்தபோது நான் சொட்டச் சொட்ட நனைந்திருந்தேன். சட்டையைக் கழற்றிப் போட்டேன். வேட்டியைச் சுற்றிக் கொண்டு பாண்ட்டைக் களைந்தேன்.

என்னவோ கீழே டங்கென்று விழுந்து உருண்டு ஓடியது. குப்பையை எடுத்தேன். ஒரு மோதிரம்.

தோப்புக் கட்டிடத்தில் அந்த உருவத்தின் கையைப் பிடிக்க முயன்றபோது என்னவோ நெருடிய மாதிரி இருந்ததே அது இதுதான். அதன் கையிலிருந்து உருவப்பட்டு என் சட்டைக்குள்ளாக விழுந்து பாண்ட் இடுக்கில் இருந் திருக்கிறது...

சிறிய தங்க மோதிரம்...

*'B.M.'* என்று ஆங்கிலத்தில் பொறித்திருந்தது.

# 15

## புருஷோத்தம் என்று இங்கே ஒருவர்...

விடிகாலை நாலு மணிக்கு விழித்துக் கொண்டு விட் டேன்.

உடம்பில் வெடவெடவென்று ஒரு நடுக்கம்; துவைக்கிற கல்லில் என்னை அடித்துப்போட்ட மாதிரி வலி. காய்ச்சல்.

துப்பட்டியைப் போர்த்துக் கொண்டு புறப்பட்டவன், தெருக்கோடியில் திறந்திருந்த பங்கில் இரண்டு மாத்திரை வாங்கி விழுங்கினேன். சில்லறையைக் கொடுத்த போது பையில் அது தட்டுப்பட்டது. *B.M.*

பி.எம். என்று எழுத்துள்ள மோதிரம்... திருவான்மியூர் கட்டிடத்தில் என்னிடமிருந்து நழுவி ஓடிய ஆள் பிஜுதானா? ஆர்த்தியைக் கொலை செய்தவர் அவர்தானா? எதற்காக?

சித்தப்பா அப்போதுதான் குளித்துவிட்டு வந்து கொண்டிருந்தார். பெரிய துவாலை அவருடைய பெரிய உடம்பை மூடியிருந்தது. "நேற்று ராத்திரி எங்கேயோ மழையில் நனைந்துவிட்டு நடுராத்திரி வேளைக்குத் திரும்பினாயாமே? வீராசாமி சொன்னான். நீ ரொம்பக் கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறாய். சீதாவுக்கு நானல்லவா ஜவாப் சொல்ல ணும் நாளைக்கு? என் தம்பியை இப்படிப் பண்ணி வைத்திருக் கிறீர்களே என்று அவள் என் மண்டையை உருட்டுகிறபோது நீயா வந்து பதில் சொல்வாய்?"

இவ்வளவு பரிவுடன் சித்தப்பா என்னிடம் பேசியதே யில்லை. மனம் நெகிழ்ந்தது எனக்கு.

"எனக்கு ஒன்றுமில்லை, சார்; கவலைப்படாதீர்கள்."

"ஊகூம். மெட்ராசிலே இருக்கிற வரையில் இப்படித் தான் சுற்றிக் கொண்டிருப்பாய், கொஞ்ச நாளைக்கு நீ கார் கூட ஓட்ட வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்."

"எனக்கு மனசாகாது, சார்."

"அதற்குத்தான் சொல்கிறேன். மெட்ராசிலேயே நீ இருக்க வேண்டாமென்று," ஸ்டீல் பீரோவைத் திறந்து பர்ஸை எடுத்தார். பத்துப் பதினைந்து பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து நீட்டினார். "பெங்களூரில் ஜெய நகர் எக்ஸ்டென்ஷனில் ஒரு சினேகிதர் இருக்கிறார். நேற்று போனில் பேசினார். குடும்பத்தோடு பத்ரிநாத் டூர் போகிறாராம். பங்களாவில் தங்கியிருந்து பார்த்துக் கொள்ள யாரையாவது அனுப்பச் சொன்னார். ராஜா மாதிரி இருக்கலாம். போய் வா பேசாமல். என்ன?"

அதற்குமேல் மறுத்தால் அவருக்குக் கோபம் வரும். பணத்தை வாங்கிக் கொண்டேன்.

"குட் பாய்! இப்பத்தான் நீ நல்ல பையன்!" அவர் முகத்தில் நிம்மதி பரவியது. அட்ரெஸ், அறிமுகக் கடிதம் எல்லாம் கொடுத்தார். "ராத்திரி புறப்பட்டு விடு. இன்றைக்கு எங்கேயும் சுற்ற வேண்டாம். இங்கேயே இரு. காரை நான் பார்த்துக் கொள்கிறேன்."

வெளியே நான் சுற்றக் கூடாதென்பதில் அவர் அத்தனை கரிசனமாக இருப்பதைக் காண எனக்கு ஆச்சரியமாயிருந்தது. "இன்று ஒருநாள் மட்டும் கொஞ்சம் வேலை இருக்கிறது சார்..."

"என்ன நீ, எப்பப் பார்த்தாலும் வேலை வேலையென்று?



நேற்றைக்கும் அப்படியே சொன்னாய், இன்றைக்கும் சொல்கிறாய்?"

"சார், எனக்கு அதிகமாய் உலகம் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் கொஞ்ச நாளாய்ப் புரிந்துகொண்டிருக்கிறேன். தோற்றத்தைப் பார்த்து யாரையும் நம்பிவிடக் கூடாது. வெளிப் பார்வைக்கு ரொம்ப உத்தமர் மாதிரி இருக்கிறவர்கள், அசலில் கொலைகாரர்களாக இருப்பதுண்டு. சார்."

அவர் முகம் கறுத்தது. "என்ன சொல்கிறாய் நீ?"

"பிஜு மகராஜ் என்கிற பேர்வழி இருக்கிறாரே... பெரிய துறவி, அறிவாளி, வேதாந்தி என்றெல்லாம் நினைக்கிறார்கள் எல்லாரும். உண்மையில், அந்தப் பெண் ஆர்த்தி இறந்து போனதற்கு அவர்தான்... எனக்குப் பலமான சந்தேகம். அவரை..."

சித்தப்பா கண்டித்தார். "பெரியவர்களைப்பற்றிக் கண்டபடி பேசாதே. அதிலும் பிஜு மகராஜ் தங்கமான ஆள். கொலையாவது ஒன்றாவது... உனக்கு அந்தப் பெண்ணிடம் ஒரு இது. யார் தலையிலாவது பழியைப் போட வேண்டுமென்று பார்க்கிறாய்..."

"இல்லை சார். போலீசுக்கு உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் விஷயம் தெரிந்து கொண்டதும்..." என்னை மீறி இருமல் வந்துவிட்டது.

"பார்த்தியா? கம்மென்று வீட்டோடு இரு. ராத்திரி ஊருக்குப் புறப்பட வேண்டும்."

நிஜமாகவே நான் வீட்டோடுதான் கிடந்திருப்பேன். உடம்பு அத்தனை அசதியாயிருந்தது. ஆனால் காரை ஓட்டிக் கொண்டு சித்தப்பா மண்ணடிக்குப் புறப்பட்ட கொஞ்ச நேரத்துக்

கெல்லாம் போலீஸ் கமிஷனர் ஆபீசிலிருந்து என்னைக் கூப்பிட்டார்கள். (சித்தப்பாவின் டெலிபோன் எண்ணை முன்பே கொடுத்திருந்தேன்) அஸிஸ்டென்ட் கமிஷனர் என்னைப் பார்க்க வேண்டுமென்று சொன்னாராம்.

சொன்னாரே தவிர, நான் போனபோது ஏ.ஸி. அங்கில்லை. இரண்டு இன்ஸ்பெக்டர்கள்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். "ஆர்த்தி கொலை விஷயமாக ஏதாவது தெரியுமா சார்?" என்று நான் குறுக்கிட்டதற்கு ஒரு இன்ஸ்பெக்டர் என்னைப் புழுவைப் பார்க்கிற மாதிரி பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். வாயை மூடிக்கொண்டேன்.

மற்ற இன்ஸ்பெக்டர் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

"ராஸ்கல் மூச்சு விடமாட்டேங்கறான். நீ விஷயத்தைக் கக்குகிற வரையிலும் உன்னை விடறதில்லைடா என்று சொல்லிட்டேன். பின்னே என்ன சார்? பிச்சிக்குப்பத்திலே இருக்கிற சாதாரண ஃபிஷர்மேன். ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் கிடைப்பது பெரிய காரியம். இவன் போய்..."

"பிச்சிக்குப்பம்னா சொன்னீர்? எந்தப் பிச்சிக்குப்பம்? ராயபுரம்.."

"நோ, நோ. அது தாண்டவராயன் பிச்சிக்குப்பம்னு முழ நீளம் பெயராச்சே? இது வெறும் பிச்சிக்குப்பம். ஃபிஷர்மென் காலனி."

"விஷயத்தைச் சொல்லுங்க, ஜியாகரபி அப்புறம் பார்த்துக்கலாம்."

நான் வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஏ.ஸி.யை இன்னும் காணோம்.



"அசல் தங்கம். கொஞ்சம் லார்ஜ் சைஸ் கூழாங்கல் மாதிரி இருக்கிறது. நல்ல கனம். மூணு பவுன் இருக்கும். அந்த மார்வாடியும் சந்தேகப்பட்டுத்தான் எனக்குப் போன் பண்ணியிருக்கிறான்..."

சுவரிலிருந்த விக்டோரியா காலத்துக் கடியாரம் இழுத்து இழுத்துப் பன்னிரண்டு அடித்தது. எனக்குப் போரடித்தது. வாசலுக்கு வந்தேன். இருபத்துமூன்று என்னைக் கூப்பிடுகிற மாதிரி வந்து நின்றது. அடையாறு பஸ்.

சித்தப்பா எதைத் தடுத்தாரோ அதைத்தான் அன்று பூரா செய்தேன்— வெட்டி ஊர் சுற்றல்.

கண்ணில் பட்டால் பிடித்து பெங்களூர் மெயிலில் உட்கார்த்தி வைத்து அவுட்டர் தாண்டுகிறவரையில் பார்த்திருந்துவிட்டுத்தான் போவார். ஆகவே அவர் பார்வையில் படாமல் ஒளிந்திருந்துவிட்டுப் பதினொரு மணிக்கு மேல்தான் வீடு திரும்பினேன். ஜுரம், உடம்பு குளிரில் வெடவெடத்தது.

கதவைத் தட்டி வீராசாமியை எழுப்ப விரும்பவில்லை. நல்லவேளை, கார் ஷெட் பூட்டப்படாமல் இருந்தது.

வரும்போது வாங்கிக் கொண்டு வந்திருந்த மாத்திரையைத் தண்ணீர் இல்லாமலே விழுங்கிவிட்டு, காருக்குள் பின்சீட்டில் முடங்கிக் கொண்டேன்.

போர்வை இருந்தால் நன்றாயிருந்திருக்கும். அதை யார் உள்ளே போய் எடுத்து வருவது? கண்ணாடிக் கதவுகளை நன்றாக ஏற்றிவிட்டுக் கண்ணை மூடினேன். தூக்கமா... விழிப்பா... கனவா.... தேகம் ஒரு நிலையில் இல்லை.

திடீரென்று விழிப்புக் கண்டது. யாரோ என்னைக் குலுக்கிக் குலுக்கி ஆட்டுகிற மாதிரி... கண்ணைச் சற்றே திறந்

தேன். காருக்கு வெளியே நட்சத்திரங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன. மரங்களின் கிளைகளும் கட்டிடங்களின் மாடிகளும்... கார் ஓடிக்கொண்டிருக்கிறது. யாரோ ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

தலையை மேலே நிமிர்த்திப் பார்த்தேன். யார் ஓட்டுகிறார்களென்று தெரியவில்லை. காரினுள் இருந்த டாப் லைட் பழுதாயிருந்தது. இல்லாவிட்டால் காரின் கதவைத் திறக்கும் போதே வெளிச்சம் அடித்து உள்ளே தானிருப்பதைக் காட்டிக் கொடுத்திருக்கும்...

கொஞ்ச நேரத்தில் கார் நிற்கிறது. வெகு தொலைவில் அலைகள் இரைச்சலிடுகிற மாதிரி ஒரு சத்தம்.... ஒரு கால் ஜுரத்தினால் என் காதுக்குள்தான் அந்த ஓசையோ... யாரோ இறங்கப் போகிறார்கள்... திரும்பி வருகிறார்கள்... யார் நகருகிறது...?

என் புலன்கள் என் வசத்தில் இல்லை... கார் ஓடுகிறது... இல்லை., காருக்கு வெளியே நான் பறக்கிறேன். என் இடையை அணைத்துக் கொண்டு ஆர்த்தியும் பறந்து கொண்டே வருகிறாள்... எனக்கு வியர்க்கிறது... புடவைத் தலைப்பால் என் நெற்றியில் ஒற்றிவிடுகிறாள்... பிச்சிக்குப்பம் என்று ஒரு போர்டு.. தலைக்குள் ஒரு எரிச்சல்... பிச்சிக்குப்பமாவது? எங்கே வந்தது? 'பிச்சிக்குப்பம் தெரியாது?' என்று ஆர்த்தி சிரிக்கிறாள்...

காலையில் ஜுரம் விட்டு, உடம்பு வியர்த்து சட்டை நனைந்திருந்தது. காருக்குள் எழுந்து உட்கார்ந்தபோது கேட்டருகே பேச்சுக் குரல் கேட்டது.

"புருஷோத்தமன் என்று... ஸ்டீல் ஷீட் பிஸினஸ்... இந்த வீடு தானா?" வீராசாமியை விசாரித்துக் கொண்டிருந்தது ஒரு பெண் குரல்.



வெளியே வந்து பார்த்தேன். ராஜஸ்தான் பெண் மாதிரி ரோஜாச் சிவப்பாய் இருந்தாள். பதினெட்டு, இருபது வயதிருக்கும். காலை வெய்யில் அவள் முகத்தில் ஒரு பாதியில் வீசிக் கொண்டிருந்தது. டீஸன்ட்டான ஆனால் எடுப்பான டிரெஸ். பெரிய கண்கள். அவள் கவலையுடன் இருந்ததால் இமைகளைப் படபடவென்று கொட்டியபோது, கன்னத்தில் அழகான நிழல்கள் விழுந்தன.

நான் முன்னே சென்று, "இந்த வீடுதான்... உள்ளே வந்து உட்காருங்கள்,'' என்று அவளை ஹாலில் உட்கார்த்தி வைத்தேன். பிறகுதான் ஞாபகம் வந்தது— சித்தப்பா என்னைப் பார்த்தால் பிடித்துக் கொள்வாரே... வீராசாமியை அனுப்பினேன், சித்தப்பாவிடம் சொல்லும்படி. பிறகு பக்கத்து அறைக்குள் போய்விட்டேன். அவள் தன் பெயரையும் விலாசத்தையும் ஒரு சீட்டில் எழுதிக் கொடுத்தனுப்பினாள்.

இரண்டு நிமிடம் சென்றிருக்கும். "அவர் இல்லீங்க. வெளியே போயிட்டார்..." என்று வீராசாமி சொல்வது கேட்டது.

வெளியே போய்விட்டாரா? பின்னே... கார்? திகைப்புடன் ஜன்னல் வழியே பார்த்தேன்.

கார் வெளியே போய்க் கொண்டிருந்தது. சித்தப்பாதான்.

## 16

### நீ மடக்க வேண்டிய ஆள் யாரென்றால்...

எனக்கு உலக அறிவு அதிகம் கிடையாது. ஒப்புக் கொள்கிறேன். இருந்தாலும் பொய் சொல்லாமல் பிஸினஸ் பண்ண

முடியும் என்று தெரியும் அளவுக்கு அறிவு இருக்கிறது. ஆகவே சித்தப்பா, உள்ளே இருந்து கொண்டே இல்லையென்று சொல்லி அனுப்பியதைப் பார்த்து நான் ஆச்சரியப்படவில்லை. ஆனால் பின்புறமாகக் கார்ஷெட்டை அடைந்து, சொல்லிக் கொள்ளாமல் வெளியேறுகிற அளவுக்கு என்ன?

வெளியே எட்டிப் பார்த்தேன். தன் சிவந்த விரல்களில் நகங்களைக் கிள்ளிக்கொண்டு அவள் யோசனையில் ஆழ்ந்திருந்தாள். "சொல்லிட்டேன் இல்லை... போறயா இல்லை...?" என்று வீராசாமி கத்திக் கொண்டிருந்தான்.

அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமாய் இருந்தது. சீப்பை எடுத்துத் தலையை வாரிக்கொண்டு பின்னர் வெளியே வந்தேன்.

"ஏதாவது அவசர விஷயமாக இருந்தால் என்னிடம் சொல்லுங்கள். புருஷோத்தம் என் சித்தப்பாதான். சாயந்தரம் பார்க்கிறப்போ சொல்கிறேன்," என்றேன்.

அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். ஒரு குளம் தண்ணீரும் அலைமோதிக் கொண்டிருக்கிற மாதிரி அவள் கண்கள் கலங்கியிருந்தன. வெளியே ஒரு பொட்டு விழுந்து விடுமோ என்று பயந்தவள் போல் சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள். அவளுடைய பார்வையிலும், தலையைத் திருப்பிக் கொண்ட மென்மையிலும் நகங்களைக் கிள்ளிக் கொண்ட சேஷ்டையிலும் ஏதோ ஒன்று எனக்குப் பழக்கமானது மாதிரி தோன்றியது. அதேபோல் அவள் விருட்டென்று எழுந்துகொண்ட விதத்தையும் இதற்கு முன் எங்கேயோ பார்த்திருக்கிறேன்...

"சாயந்தரம் நான் மறுபடி வந்து பார்த்துக் கொள்கிறேன்..." என்று கூறிவிட்டு அவள் எழுந்துகொண்டாள். அவள்



குரலிலும் கண்ணியம் தெரிந்தது.

வாசலை அவள் தாண்டும் வரை பார்த்துக் கொண்டு நின்றேன்.

சித்தப்பா அவசரமாகப் போயிருக்க வேண்டும். மாடிக் கதவைக் கூடச் சாத்த மறந்துவிட்டார். மேஜை மீது பேனா திறந்திருந்தது. மூடி வைத்தேன். குப்பைக் கூடையின் விளிம்பில் இரண்டு மூன்று துண்டுக் காகிதம் தத்தளித்துக் கொண்டிருந்தன, உள்ளேயும் விழாமல் வெளியேயும் விழாமல். இரக்கப்பட்டு எடுத்து—

'—ர்த்தியின்' என்ற வார்த்தை மட்டுமே தெரிந்தது.

ஆர்த்தி... என்னுள் ஒரு சிலிப்பு ஏற்பட்டது.

இது அந்தப் பெண் சித்தப்பாவுக்கு எழுதியனுப்பிய சீட்டு...

சித்தப்பா சுக்கு சுக்காகக் கிழித்துப் போட்டிருக்கிறார்...

குப்பைக் கூடைக்குள்ளிருந்த மற்றத் துண்டுகளையும் எடுத்துப் பொருத்திப் பார்த்தேன்.

'பாலா— ஆர்த்தியின் தங்கை பாட்னாவிலிருந்து வந்திருக்கிறேன்'

என்னை நானே சாட்டையால் அடித்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அந்த அசைவுகளும் பார்வைகளும்... ஆர்த்தியை எப்படி இத்தனை சீக்கிரத்தில் நான் மறக்கப் போயிற்று?

என் ஜுரம், வலி எல்லாம் பறந்துவிட்டன.

வழியில் நின்றிருந்த வீராசாமியைத் தள்ளிக்கொண்டு வாசலுக்கு ஓடினேன். காணோம். தெருக் கோடிவரை

சென்றேன். இல்லை.

ஆர்த்தியின் தங்கை பாட்னாவிலிருந்து வந்திருக்கிறாள். ஆர்த்தியின் வர்ணனைகள் வழியே, மனசின் வழியே, இந்தத் தங்கையை எத்தனை முறை பார்த்திருக்கிறேன்...

"கொஞ்சம் முன்னால்... நீங்கள்தானே... புருஷோத்தம் வீட்டில்..." அவ்வளவு விரைவில் என்னை இரண்டாம் தடவை பார்த்ததில் அவளுக்குத் திகைப்பு.

இடம்: அடையாறு பிஜு மகராஜின் மாளிகை. ஆர்த்தியின் தங்கை என்றால் இங்கேதான் அவள் தங்கியிருக்க வேண்டும் என்று நான் ஊகித்தது சரிதான்.

அவளைப் புதிய கண்ணோட்டத்துடன், புதிய கனிவுடன், புதிய பிரியத்துடன் நோக்கினேன். எனக்கும் அவளுக்கும் இடையே பொதுவான துயரம் இருந்ததால், கண்ணுக்குத் தெரியாத ஒரு நெருக்கம்...

"மிஸ் பாலா... நான் உங்கள் அக்காவுக்கு ரொம்ப..." எப்படி சொல்வது... "வேண்டிவயன். என் பெயர் ஜனா. என்னைப் பற்றிக் கடிதத்தில் எழுதியிருப்பாளே?"

அவள் பதில் சொல்லுமுன், வெராந்தா வழியே அந்த உயரமான உருவம் என்னை நோக்கி வந்துகொண்டிருந்தது.

"மகராஜ் உங்களைக் கூப்பிடுகிறார் அம்மா," என்றான் வந்தவன். அன்று இரவு என்னைத் தோட்டத்தில் மடக்கிய போது பிஜு மகராஜுக்குத் துணையாக நின்றவன். எதிராளியைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கிற மாதிரி அவன் வாயின் ஒரு கோடி சற்று வளைந்தபடியே இருக்கும்.

பாலா தயங்கியபடி போய் விட்டாள்.



"நானும் பிஜு மகராஜைப் பார்க்க வேண்டும்," என்ற போது அவன் வழி மறிந்தாற்போல் நின்று கொண்டான்.

"தியானத்தில் இருக்கிறார்."

"முடியட்டும். எனக்கொன்றும் தலை போகிற வேலையில்லை." வரிசையாகப் போடப்பட்டிருந்த சோபாவில் உட்கார்ந்துகொண்டேன். சில நிமிடம்...

"வாப்பா. என்னைப் பார்க்க வேண்டுமென்று சொன்னாயாமே, நீ தானா?" பிஜு மகராஜின் சன்னமான குரல் ஊசி மாதிரி உள்ளே நுழைந்தது.

"தனியே," என்றேன்.

அவர் அந்த ஆளை நோக்கினார் புன்னகையுடன். அவன் தயங்கினான். அவர் மேலும் அழுத்தமாகப் புன்னகை செய்தார். அவன் கதவைச் சாத்திக் கொண்டு வெளியேறினான்.

"சொல்லு."

""பாட்னாவிலிருந்து வந்திருக்கிறாரே, பாலா, அவரை அழைத்துக் கொண்டு போக வந்திருக்கிறேன்."

"சந்தோஷம். உனக்கு அவள் என்ன உறவு?"

"உங்களுக்கு என்னவோ அதேதான்."

ஆழமான கண்களால் அவர் என்னை நோக்கி மௌனமாயிருந்தார். மேலே மின்சார விசிறி சுழன்று கொண்டிருந்ததால் அவருடைய மெல்லிய வெள்ளை ஜிப்பாவும் துல்லியமான வெள்ளை வேட்டியும் படபடவென்று அசைந்தன. "எனக்கும் அவர்கள் குடும்பத்துக்கும் உள்ள தொடர்பைப் பற்றி உனக்குத் தெரியாது. நான் அவளுக்குக் குடும்ப நண்பன். அவள் மெட்ராஸ் வந்திருப்பதே என்னை நம்பித்தான்."

"ஆர்த்திகூட அப்படித்தான் வந்தாள்."

"அதனால்?"

"அதே முடிவு அவள் தங்கைக்கும் ஏற்பட்டு விடக் கூடா தில்லையா?"

"ஏற்படும்படி நான் விடமாட்டேன். இங்கே இருக்கிற வரையில் அவளுக்கு அபாயமில்லை."

"இங்கே இருக்கிற வரையில் தான் அவளுக்கு அபாய மென்று எனக்குப் படுகிறது."

"ஆதாரமில்லாத பயம்."

"ஆதாரம் இருக்கிறது. விரல் சுற்றளவு சைஸில்." கையி லிருந்த மோதிரத்தை அவர் முன் நீட்டினேன்.

எவ்விதப் பதற்றமுமின்றி அவர் அதை வாங்கிக் கொண்டார். திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

"பி.எம். என்ற எழுத்து இருக்கிறது," என்றேன்.

"என் உதவியாள் இருக்கிறாரே, சற்று முன்னால் நீ பார்த்த வர். அவர் பெயர் கூட பி.எம். தான். பிஷ்ணு மகாதேவ்." நான் ஏதோ சொல்ல வாயெடுத்தேன். அவர் குறுக்கிட்டார். "பொறு. இது பிஷ்ணு மகாதேவின் மோதிரம் என்று நான் சொல்ல வில்லை. என்னுடையதுதான். இது எங்கே உனக்குக் கிடைத்தது என்றும் நான் கேட்கப் போவதில்லை. அதுவும் எனக்குத் தெரியும்."

"எங்கே?" என்றேன்.

"திருவான்மியூர் அருகே, முந்திரித் தோப்பின் நடுவே ஒரு கட்டிடம் இருக்கிறது. அங்கே இருட்டும் மழையுமாயிருந்த நேரத்தில் உன்னை உரசிக்கொண்டு நான் வெளியேறிய போது



இது நழுவி விழுந்தது."

நான் திகைத்தேன். "ஓ! உங்கள் குற்றத்தை உங்கள் வாயா லேயே ஒப்புக் கொள்கிறீர்களா?"

"என்ன குற்றத்தை?"

நான் வார்த்தைகளை அளந்தே சொன்னேன். "ஆர்த்தி யைக் கொலை செய்த குற்றத்தை."

திடுக்கிட்டு எழுந்திருக்கவோ எம்பிப் பாயவோ அவர் முயலவில்லை. அவருடைய அழகிய சுருட்டைக் கிராப்பில் ஒரு ரோமம்கூடப் பதறக் காணோம்.

"அவள் மரணம் எப்படி நேர்ந்திருந்தாலும், அதிலே உனக்குப் பங்கு உண்டு. நீயும் ஒரு காரணம் என்று உனக்குத் தெரியாது. இல்லையா?"

"நானா!" என்னையும் மறந்து கத்தினேன்.

"பொறுமையுடன் கேள். நீ ஆர்த்தியைத் தூண்டி, அந்த ரசவாத நோட்டுப் புத்தகத்தை எடுத்து வரும்படி சொன்னாயே, நினைவிருக்கிறதா? ஒரு நாள் ராத்திரி நீயும் அவளுமாக அதை எடுத்துச் செல்லும் போது நான் மடக்கினேனே, ஞாபகம் வரு கிறதா?"

நான் மறுக்கவும் இல்லை, ஒப்புக் கொள்ளவுமில்லை. "சொல்லுங்கள்," என்றேன்.

"நான் ரொம்பச் சுலபமாக உன்னை அன்று விட்டு விட்டேன். அதற்கு இரண்டு காரணம். ஒன்று, கருணை."

"இன்னொன்று?"

"நீ எடுத்துப் போகிற நோட்டினால் எனக்கொன்றும் நஷ்டம் கிடையாது என்ற நம்பிக்கை."

“ஏன் நஷ்டமில்லை?”

“அந்த நோட்டு வெறும் போலி.”

“பொய்!”

அவர் அலட்டிக் கொள்ளவில்லை. “இப்படியொரு திருட்டு முயற்சி என்றாவது ஒருநாள் நடக்குமென்று எனக்குத் தெரியாதா? அசல் நோட்டு— ரசவாதம் பற்றிய அசல் குறிப்புகளைக் கொண்டது— உள்ளே பத்திரமாக இருந்தது.”

“இருந்தது என்றால்?”

“இப்போது இல்லை.”

“யாரிடம் இருக்கிறது பின்னே?”

“ஆர்த்தியின் கொலைக்கு யார் காரணமோ அவர்களிடம். அது நீயாயிருந்தால் உன்னிடம்.”

அவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனார்: “உன்னிடம் கொடுத்தனுப்பியது போலியான நோட்டு என்று ஆர்த்திக்குத் தெரிந்து விட்டது. அசல் நோட்டை எடுத்து வந்தால் சுலபமாகத் தங்கம் செய்யலாம் என்று ஒருத்தர் அவளைத் தூண்டினார். அவள் எடுத்துப் போய்க் கொடுத்தாள். இரண்டு பேருமாகத் தங்கம் செய்யும் முறையைக் கண்டு பிடித்து விட்டார்கள். அந்தப் பிராஸஸில் அவள் உயிர் போயிருக்கிறது— பலி கொடுத்திருப்பார்களோ என்னவோ.”

பிஜு மகராஜ் எழுந்து அலமாரியைத் திறந்து ஒரு பழைய நியூஸ் பேப்பர் கட்டிங்கை எடுத்து வந்தார். “மீனவரிடம் தங்கம்! பிச்சிக்குப்பத்தில் ஒருவர் கைது” என்ற தலைப்பில்.

அந்த இன்ஸ்பெக்டர்கள் பேசிக்கொண்டது ஞாபகம் வந்தது... பிச்சிக்குப்பத்தை வேறெங்கோ பார்த்ததுகூட...



“ஆள் மூலம் விசாரித்தேன். அந்த மீனவனைப்பற்றி, திருவான்மியூர் முந்திரித் தோப்புக்கருகே அவன் சுற்றுகிறவன் என்று தெரிந்தது... அவனுக்கு யாரோ தங்கம் கொடுத்தார்களாம். யார்? தங்கமென்றால் தண்ணீர் பட்டபாடாக இருக்கும் ஒருத்தர்தான் கொடுத்திருக்க வேண்டும்... எதற்காக? தெரியவில்லை. அதனால்தான் அந்த முந்திரித் தோப்புக் கட்டிடத்தை ஆராய்வதற்காக வந்தேன்... நீயும் வந்தாய்... என் மோதிரத்தை அங்கே நழுவ விட்டு விட்டேன்...”

“மறைக்காதீர்கள். அதற்கு முந்தி ஒரு முறையும் வந்திருக்கிறீர்கள் அதே இடத்துக்கு.”

“வந்து?”

“என்னைப் பின்புறமாகத் தாக்கினீர்களே, நினைவில்லையா! அது இல்லாவிட்டாலும், அப்போது உங்கள் கையில் கடித்தேனே, அதுகூட ஞாபகமில்லையா?”

“என் கையிலா!” அவர் தன் ஜிப்பாவை மடக்கி, கைகளைக் காட்டினார். பளபளவென்று சுத்தமாயும் வழவழப்பாயும் இருந்தன.

நான் திகைப்புடன் அவர் கைகளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

“நீ தப்பான ஆளைத் தேடிக் கொண்டிருக்கிறாய், ஜனார்த்தனம்.”

அவர் குரலில் சலனம் இல்லை. கண்களில் கலக்கம் இல்லை.

“ஒருத்தர் ஒருத்தர் என்கிறீர்களே, யார் அவர்?”

“உன் வீட்டுக்குத் திரும்பிப் போ. தனிமையில் அமைதியாக யோசனை செய். தெரியும்.”

சித்தப்பா தூங்கிக்கொண்டிருந்தார் மாடியில்.

பெங்களூர் போகவில்லை என்பதை இன்றைக்காவது சொல்லிவிட வேண்டுமென்று அங்கே போனேன்.

கட்டிலிலிருந்து போர்வை கீழே விழுந்திருந்தது. எடுத்துப் போர்த்தச் சென்றவன், அதைப் பார்த்தேன்.

அவர் கையில் முழங்கைக்குக் கீழே பிளாஸ்திரி போட்டிருந்தது. கொஞ்சம் வீங்கியும் இருந்தது.

## 17

## அதோ, அந்தக் கார்! பின்னாலேயே போ!

சித்தப்பாவின் அந்தக் கையையே வைத்த கண் எடுக்காமல் பார்த்தபடி நின்றேன் பல நிமிடங்களுக்கு. அந்தக் கையிலிருந்த காயம்— அந்தப் பிளாஸ்திரி—

அன்று முந்திரித் தோப்பில் என்னைப் பின்புறமாக வந்து அடித்தவர் இவர்தானா? நான் வெடுக்கென்று கடித்தேனே, அது இவரைத்தானா?

என்னை யாரோ திடீரெனச் சிலையாகச் செய்துவிட்ட மாதிரி இருந்தது.

எப்படியாவது என்னை வெளியூருக்கு அனுப்பிவிட வேண்டுமென்று முயற்சி செய்தது இதற்காகத்தானா? நான் தொடர்ந்து இங்கே இருந்தால் இடைஞ்சல் என்று நினைத்தாரோ? எதற்கு இடைஞ்சல்?...

ஆர்த்தியை... இவர்... கொலை... ஒரு சம்பந்தமுமில்லையே? எனக்குத் தலை சுற்றியது. சம்பந்தமில்லையென்றால், ஆர்த்தியின் தங்கை பாலா வந்திருப்பதாகச் சொன்னதும் நழுவி ஓடு



வானேன்?

என்னவோ மர்மம் இருக்கிறது சித்தப்பாவிடம். அந்த நடுராத்திரி வேளையில் பிச்சிக்குப்பமோ என்னவோ, அங்கே காரில் போய் வந்தாரே. அது ஏன்?

சிந்திக்கச் சிந்திக்க, எதுவும் புரியாமல் என்னையுமறியாமல் மாடிப்படியிலேயே தூங்கிவிட்டேன்.

"ஏண்டா... பெங்களூருக்குப் போகிறவனாடா நீ?" என்று வாக்கிங் ஸ்டிக்கினால் சித்தப்பா என் விலாவில் குத்தி எழுப்பியபோதுதான் கண் விழித்தேன்.

பழைய சித்தப்பாவாக அவரை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. எனக்கும் அவருக்குமிடையே முன்பு அந்தஸ்து திரையொன்றுதான் இருந்தது. இப்போது இன்னும் பல திரைகள் விழுந்து அவரை எனக்கு முற்றிலும் அன்னியமானவராகச் செய்துவிட்டதை உணர்ந்தேன்.

"பணத்தை வேறே வாங்கிப் பையில் போட்டுக்கொண்டு! ...ஊம்!" என்று சித்தப்பா என் எண்ணங்களை ஊகியாதவராகத் தன் பாட்டுக்குப் பேசிக்கொண்டு போனார்.

"உடம்பு சரியானதும் கிளம்பிவிடுகிறேன் சார். அங்கு கிளைமேட் எப்படி இருக்குமோ?"

என் பார்வை அவருடைய முழங்கையிலேயே குத்திட்டு நின்றது... அந்தப் பிளாஸ்திரி...

"தண்ணீர் எடுத்து வா. மாத்திரை சாப்பிட வேண்டும்," என்றார்.

எடுத்து வந்து கொடுத்தேன். சட்டைப் பையிலிருந்து ஒரு மாத்திரையை வெளியெடுத்து விழுங்கினார். "ராம்சந்த் வீட்டுக்

குப் போயிருக்கிறாயோ?" என்றார்.

"எந்த ராம்சந்த்?"

"ஃபிலிம் ஃபைனான்ஷியர்... விருகம்பாக்கத்தில் பங்களா கட்டிட்டிருக்கிறான். அவன்கிட்டே ஒரு நாய் இருக்கு. ரொம்பப் போக்கிரி. மேலே விழுந்து விளையாடும். அப்படியே கீறி விட்டது பார்!" என்று தன் கையைக் காட்டினார்.

அனாவசியமாக இதை ஏன் சொல்கிறார்?

பிறகு "இரண்டு மூன்று நாளைக்கு எனக்கு அவசர வேலை இருக்கு. கூப்பிடுகிற டயத்தில் நீ பாட்டுக்கு டீ சாப்பிடப் போயிருப்பாய். அதனாலே வண்டியை நானே ஓட்டிக்கிறேன்." என்று கூறியபடி கீழே இறங்கிச் சென்றார்.

அன்று பூரா வீட்டிலேயே தான் அடைந்து கிடந்தேன். பிஜு மகராஜை மறுபடியும் சந்தித்து, 'நீ சொன்னதுக்கெல்லாம் என்னய்யா அர்த்தம்? உடைத்தே சொல்லு' என்று கேட்க வேண்டும் போலிருந்தது. ஆனால் ஓரளவுக்கு மேல் அவர் தகவல் வெளியிடத் தயாராயில்லையே... போன் செய்தேன். "ஹலோ..." என்று ஒரு பெண் குரல் கேட்டது.

ஆர்த்தியின் தங்கை! "நான்தான் ஜனா பேசுகிறேன்."

"நானும் உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்," என்று அவள் பதில் அளித்தபோது என் உற்சாகம் அதிகரித்தது.

"தாங்க் யூ." என்றேன்.

"அன்றைக்கு முதல் தடவையாக உங்களைப் பார்த்த போது உங்களை நம்பி மனம் விட்டுப் பேசத் தைரியம் வரவில்லை. ஆனால் பிறகு யோசிக்க யோசிக்க, நீங்கள்தான்



எனக்குத் துணை செய்வீர்களென்று..." அவள் குரலில் திடீரென ஓர் இறுக்கம் தெரிந்தது— தூரத்தில் யாரோ வருவதைப் பார்த்து விட்டுக் குரலைத் தாழ்த்திக் கொள்வார்களே, அந்த மாதிரி.

நான் அவசரமாக, "நானும் பேச வேண்டும். எப்போது வரட்டும்?" என்றேன்.

"வேண்டாம். நானே வருகிறேன். நாளை அல்லது நாளை மறுநாள் எப்படியாவது சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொண்டு அங்கே வருகிறேன். நீங்கள் எங்கேயும் போய்விடாதீர்கள்," என்று சொல்லிவிட்டுப் போனை வைத்து விட்டாள்.

ராத்திரி பத்து மணிக்கு மேல்தான் சித்தப்பா திரும்பி வந்தார். நான் என் இடத்தில் படுத்திருந்தேன். கார் நின்றதும் வீராசாமி ஏதோ உதவி செய்வதற்காகப் போனான் போலிருக்கிறது. "வேண்டாம், நானே பார்த்துக் கொள்கிறேன்," என்று அவர் சொல்வது கேட்டது.

அரைக் கண்ணை மூடியபடி நான் படுத்திருந்தேன். அவர் என்னைத் தாண்டிக்கொண்டு சென்றார். கையிலே ஒரு பை இருந்தது. அதில் ஏதோ கனமான பொருள் இருந்திருக்க வேண்டும். சிரமத்துடன் இரு கையாலும் தூக்குவதால் அவர் முதுகு வளைந்திருந்தது தெரிந்தது. என்னவாயிருக்கும்...

இரவு வெகு நேரம் தாண்டியிருக்கும். என்னவோ ஒரு வினோதமான சத்தம் என்னை எழுப்பியது. எலியோ பெருச்சாளியோ கதவைப் பிராண்டுகிற மாதிரி... புரண்டு படுத்தேன்...

கொஞ்சம் பொறுத்துப் புரிந்தது. அந்தக் கொர் கொர் சத்தம் மாடியில் சித்தப்பாவின் அறையிலிருந்து வருகிறது.

மூச்சை அடக்கிப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு படியாய்

ஏறினேன். அறையில் எல்லாக் கதவுகளும் சாத்தியிருந்தன. ஜன்னல்களும்தான். எந்த இடத்திலும் துளி இடுக்குக்கூடத் தென்படவில்லை.

ஜன்னலில் காதை வைத்துக் கேட்டேன்.

உள்ளேயிருந்துதான் ஓசை கேட்கிறது. எதுவோ அறுக்கப் படுகிற சத்தம்.

திகைப்புடன் கீழே இறங்கி வந்து விட்டேன்.

மறுநாள் பூரா வாசலில் நின்று சாலையையே பார்த்துக் கொண்டிருந்தேன். பாலா வரவில்லை. நாமே அங்கு போகலாமா என்று நினைத்தேன். அவள் அதைத் தடுத்திருந்தது ஞாபகம் வந்தது.

அடுத்த ராத்திரியும் தூங்காமலே விழித்துக் கொண்டிருந்தேன்.

இன்று சத்தம் வரவில்லை. அறுக்க வேண்டியதை நேற்றே அறுத்து முடித்துவிட்டார் போலும்.

வெகு நேரம் ஓடியபின், மாடியிலிருந்து புகையின் நெடி வந்தது.

இப்போதெல்லாம் பூனைபோல் இருட்டிலே நடக்க எனக்குப் பழக்கமாகிவிட்டது.

இன்றும் கதவுகள் உள்புறம் தாளிடப்பட்டே இருந்தன. இருந்தாலும் இடுக்குகள் வழியே புகைக்கம்பிகள் வந்தன. உள்ளே நெருப்பு மூட்டப்பட்டிருப்பதுபோல ஒரு தகதகப்பும் லேசான சூடும்... மறுபடியும் தன் ரசவாத ஆராய்ச்சியை ஆரம்பித்திருக்கிறாரா என்ன?

பொழுது விடிந்தது. சித்தப்பாவுக்கு வெகு திடகாத்திரமான தேகம். இரண்டு மூன்று நாளாகக் கண் விழித்து மர்ம



மான வேலைகளில் ஒண்டியாக ஈடுபட்ட களைப்பு கடுகத்தனையேனும் தென்பட வேண்டுமே...

"பெட்ரோல் போட்டுக் கொண்டு வா," என்றார்.

தெருக்கோடியில் பங்க் இருக்கிறது. சித்தப்பாவுக்குக் கணக்கு உண்டு. ...பத்து லிட்டர்...

பெட்ரோல் மீட்டர் ஓடிக்கொண்டிருந்தபோது, "நீங்கள் இந்தப் பக்கம் வருவீர்களோ என்றுதான் காத்திருந்தேன்," என்ற குரல் கேட்டது.

"பாலா!"

அவள் தோற்றத்தில் ஓர் அவசரம் தெரிந்தது. "இதைக் கொடுக்கத்தான் வந்தேன்" என்று ஒரு இன்லண்ட் லெட்டரைத் தந்தாள்.

"என்ன இது?"

"வீட்டில் போய்ப் படித்துப் பாருங்கள். ஆர்த்தி எனக்கு எழுதியது. படியுங்கள், தெரியும். எனக்கு நேரமாகிறது. பிஜு மகராஜிடம் சொல்லாமல் வந்திருக்கிறேன்."

அவள் வேகமாகத் திரும்பி விட்டாள்.

ஆர்த்தியின் கடிதம்... அவசரமாக, மேலோட்டமாகப் படித்தேன்.

"...இனிமேல் நம் குடும்பத்தில் எவ்விதக் கஷ்டமும் இல்லை. ஜனா என்று எனக்கு ஒரு சினேகிதர். அவருடைய சித்தப்பா, நாம் வெகு நாளாய்த் தேடிக் கொண்டிருக்கிற ரசவாத வித்தையைக் கண்டுபிடித்து விடுவதாக வாக்களித்திருக்கிறார். காரியம் முடிகிற வரையில் யாரிடமும் சொல்லப் போவதில்லை. நானும் அவருமாகத் தினம் தனிமையில் ஆராய்ச்சி..."

"கையெழுத்துப் போடப்பா!" பங்க் சிப்பந்தி பில்

புத்தகத்தை நீட்டினான். கையெழுத்துப் போட்டு ரசீதை வாங்கிக் கொண்டேன்...

உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. பிஜு மகராஜ் சொன்னது கரெக்ட்...

இன்றைக்காவது என்னைக் கூப்பிடுவாரோ என்று நினைத்தேன். கூப்பிடவில்லை. தானே வண்டியில் ஏறிக் கொண்டு ஸ்டார்ட் செய்தார்.

"பத்து லிட்டர்தானே போட்டே?"

"ஆமாம் சார்."

"ரசீது எங்கே?"

"இதோ சார்," என்று கொடுத்தேன். வாங்கிப் பையில் போட்டுக் கொண்டார். வண்டி புறப்பட்டுவிட்டது.

மறுபடி அதைப் படிக்கலாம். பையிலிருந்து ஆர்த்தியின் கடிதத்தை—

அது வரவில்லை. பெட்ரோல் பங்க் ரசீதுதான் வந்தது.

பதைத்தேன்.

சித்தப்பாவைச் சிக்கச் செய்யும் ஒரே தடையம் அந்தக் கடிதம்... அது அவர் கைக்கே போய்விட்டால்...!

வாசலுக்குப் பாய்ந்தேன். தெரு முனையில் சித்தப்பாவின் கார் மறைந்து கொண்டிருந்தது. ஆனால் மண்ணடிக்குச் செல்வதானால் இடப் பக்கம் திரும்ப வேண்டும். இவர் வலப் பக்கம் திரும்புகிறார்.

ஒரு டாக்ஸி வந்து கொண்டிருந்தது. கையைக் காட்டித் தாவி ஏறிக் கொண்டு, "அதோ அந்த கார்! பின்னாலேயே போ!" என்றேன்.

பூந்தமல்லி ஹைரோடு வழியே சென்று நுங்கம்பாக்கம் ஸ்டேஷனுக்குச் செல்லும் குறுக்குத் தெருவில் புகுந்த போது



லெவல் கிராஸிங் சாத்திக் கொண்டு என் டாக்ஸியையும் அவர் காரையும் பிரித்துவிட்டது. சில நிமிடங்களுக்குப் பிறகு வழி கிடைத்தபோது, சித்தப்பாவின் கார் மறைந்துவிட்டது. ஆனாலும் அவர் சென்ற திசையிலிருந்து ஒன்று தெரிந்தது. அந்த முந்திரித் தோப்புக் கட்டிடத்துக்குத்தான்...

ஹைரோட்டின் முனையிலேயே இறங்கிக்கொண்டு டாக்ஸியை அனுப்பி விட்டேன். தோப்பை நெருங்கிய சமயம் எட்டத்தில் கார் நின்றிருந்தது. சித்தப்பா அந்தக் கட்டிடத்துக் குள்ளிருந்து வெளியே வருவது தெரிந்தது. திரும்பித் திரும்பிப் பார்த்தபடி காரை அடைந்தார். போய்விட்டார்.

ஒரு நிமிடம் யோசித்தேன்.

மீண்டும் மீண்டும். அந்தப் பாழடைந்த கட்டிடத்தில் தான் எனக்குத் தேவையான பதில் இருக்கிறது என்று புரிந்தது.

மெல்ல நுழைந்தேன். கதவு திறந்துதான் கிடந்தது. காலடி யில் குண்டும் குழியுமான அதே தரை...

இப்போது பகலானதால் நன்றாகப் பார்க்க முடிந்தது. வெறும் சுவர்கள்... திறந்து கிடக்கும் அலமாரிகள்...

தரையில்தான் என்னவோ விசித்திரமாக... ஓரிடத்தில் பள்ளம் பறித்து மூடினாற்போல...

பரபரவென்று கல்லையும் மண்ணையும் அகற்றினேன். தோண்டினேன். மண் லூஸாக வெளிப்பட்டது. மேலும் தோண்டினேன்.

எனக்கு மூச்சு நின்றது.

அது ஒரு தலை.

முழுத் தலையல்ல. தலையின் பாதி. மேலிருந்து கீழாக நெடுக்காக அறுக்கப்பட்ட தலை. ஒரு காது, ஒரு கண், மூக்கிலும் வாயிலும் ஒரு பாதி கொண்ட— பாதித் தலை.

ஆனால் சதையாலும் எலும்பாலும் ஆன தலை அல்ல. முழுக்க முழுக்கத் தங்கத்தால் ஆன தலை.

ஆர்த்தியின் தலை.

## 18

## சென்னையில் இனி என்ன வேலை?

“ஆர்த்தி... ஆர்த்தி...” என்று அந்தத் தங்க முகத்தை — பாதி முகத்தை— நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டு புலம்பி னேன். என் கண்ணிலிருந்து நிற்காமல் கண்ணீர் வழிந்து அந்தப் பொற்சிலையை நனைத்தது. திக்திக்கென்று அடித்துக் கொள்ளும் நெஞ்சுடன், திரும்பத் திரும்ப அந்த முகத்தைக் கவனித்தேன். எப்படி... எதற்காக... இந்த முகத்தைச் சித்தப்பா செய்தார்? இமைக்கால்கள்... உதடுகளின் மெல்லிய வெடிப்புகள்... கன்னத்திலோடும் நரம்புகளின் வளைவுகள் ... காதின் ஓரத்தில் சுருண்டு நிற்கும் ஒற்றை மயிரிழைகள்... இவ்வளவு பிரமிக்கத்தக்க வகையில், இவ்வளவு நுண்மையாகச் சிலை வடிக்கக்கூடிய அற்புதச் சிற்பி யார்? எதற்காக வடித்துத் தந்தான்? ஏன் அதைச் சித்தப்பா இப்படிப் பாதியாக அறுத்து...

சித்தப்பா! ...பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டே எழுந்தேன். அவர் மீது எனக்கிருந்த கடுகத்தனை பாசமும் பறந்துவிட்டது... எப்படிப்பட்ட குரூரமான கொலைகாரர்; இனி அவரை நான் துரத்துவது சரியல்ல. போலீஸ்தான் சரி.

ஏ.ஸி. அந்தப் பாதி முகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த் தார். அவரால் வெகு நேரத்துக்குப் பேச முடியவில்லை. பிறகு சொன்னார்: “அந்தப் பிச்சிக்குப்பம் மீனவன் இன்று காலை தான் ஒப்புக்கொண்டிருக்கிறான்— எப்படி அந்தத் தங்கத் துண்டு தன்னிடம் வந்தது என்பதைப் பற்றி அதைக் கொடுத்த ஆளைக் காட்டுவதாகச் சொல்லியிருக்கிறான்... நீ வீட்டுக்குப் போய் இரு...”



கிளை நூலகம்
28633

மாடியிலிருந்து புகை மிதந்து வந்து கொண்டிருந்தது.

சாதாரணப் புகையல்ல. சிகரெட் புகை.

பார்ட்டி, விருந்து முதலிய சமயங்களில் கம்பெனிக்காகச் சித்துப்பா சிகரெட் பிடிப்பாரோ என்னவோ, ஆனால் வீட்டில் அவர் சிகரெட் பிடித்து நான் பார்த்தது கிடையாது.

இப்போது பிடித்துக் கொண்டிருந்தார்.

மாடிப் படிகளில் ஏறி அவருடைய அறையை அடைந் தேன். உள்ளே நுழைவதற்குத் தயாராகிக் கொண்டிருந்த சமயம், “வா ஜனா, உள்ளே வா,” என்று சாதாரணமான குரலில் அவர் அழைத்தார்.

நுழைந்தேன். மேஜை மீது இரண்டு கால்களையும் தூக்கிப் போட்டுக் கொண்டு நாற்காலியில் சரிந்தாற்போல் உட்கார்ந் திருந்தார் அவர். வளையம் வளையம் வளையமாக சிகரெட் புகை அவர் தலையைச் சுற்றிக் கொண்டிருந்தது. அவரைப் பார்த்தவுடனே, ‘பாவி! கொலைகாரா!’ என்றெல்லாம் கத்தப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அம்மாதிரி எதுவும் கத்தத் தோன்றவில்லை. என்னவோ ஒரு மந்திர சக்தி யினால் அவர் என் கால்களைக் கட்டிப் போட்டுவிட்ட மாதிரி இருந்தது.

“உட்கார் ஜனா,” என்றார்.

நான் நின்று கொண்டே யிருந்தேன்.

“எங்கிருந்து ஆரம்பிப்பது எனக்குத் தெரியவில்லை. விவரமாகச் சொல்வதென்றால் நேரமும் கிடையாது,” என்று அமைதியாகச் சொல்லத் தொடங்கியவர் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டார். “இன்னும் பத்துப் பதினைந்து நிமிடத் தில் போலீஸ்காரர்கள் வந்து விடுவார்கள். ஆர்த்தியைக் கொலை செய்தது நான்தான் என்று— கரெக்டாகச் சொல்லுவ

தென்றால், ஆர்த்தியின் மரணத்துக்குக் காரணம் நான்தா னென்று— அவர்களிடம் ஒப்புக் கொள்ளப் போகிறேன்."

நான் அவரை வியப்புடன் பார்த்தேன்.

சித்தப்பா சொன்னார்:

"சாஸ்திரி என்கிற பெயரில் எனக்கு ஒரு தனி மதிப்பும் பிரியமும் உண்டு என்று உனக்குத் தெரிந்திருக்கும். சாஸ்திரி என்று பெயர் போட்ட பொத்தான்களைத்தான் நான் உபயோகப்படுத்துவேன். 'சாஸ்திரி அனாதை விடுதி' என்று செங்கல்பட்டுக்கருகே ஒன்று நடக்கிறது. அங்கே பல ஏழை களைச் சேர்த்து, பண உதவி தந்து கொண்டிருக்கிறேன்.

"ஏன் என்று ஆச்சரியப்படுகிறாயா? சொல்கிறேன். இருபது வருடத்துக்கு முன்பு நான் இதே மெட்ராசில் ஒரு வேளைச் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தேன். கந்தசாமி கோவிலருகே இரும்புக் கடை வைத்திருந்த தேவனாத சாஸ்திரிதான் எனக்கு வேலை போட்டு ஆதரவு கொடுத்தார்.பொதுவாக அவரைச் சாஸ்திரி என்று தான் கூப்பிடுவது வழக்கம்.

"சாஸ்திரி என்னைப் போலத்தான் இருந்தார். பிள்ளை குட்டி கிடையாது. திக்கற்ற குழந்தைகள், ஏழைகள் என்றால் மகா பிரியம். கையிலிருப்பதைக் கொடுத்து விடுவார். அவர் களுக்காகவே செங்கல்பட்டுக்குப் பக்கத்தில் ஒரு அனாதை விடுதியும் நடத்தி வந்தார்.

"கடையில் ஒரு சாதாரண குமாஸ்தா மாதிரி நான் இருந்த போதிலும் என்னிடம் அவருக்கு ரொம்ப நம்பிக்கை. 'புருஷோத்தமா... எனக்குப் பிறகு நீதான் அந்த அனாதை விடுதியைக் கவனித்துக் கொள்ளணும்" என்று சொல்லிக் கொண்டேயிருப்பார்.



"திடீரென்று ஒருநாள் அவர் மஞ்சக் காமாலையில் படுத்தார். எழுந்திருக்கவேயில்லை இப்போதுதான் போல நினைவு இருக்கிறது. ஜி.எச்.சில் படுத்திருக்கிறார். நினைவு தடுமாறிக் கொண்டேயிருக்கிறது. என்னைக் கண்டதும் கையைப் பிடித்துக் கொள்கிறார். தலையணையின் கீழேயிருந்து ஒரு தடித்த கவரை எடுத்துக் கொடுக்கிறார். 'பத்தாயிரம் ரூபாய் இருக்கிறது... அந்த அனாதை விடுதிக்கு...' என்று சொல்கிறார். பிறகு இன்னொரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துத் தருகிறார். 'இது... இது...' என்று திணறுகிறார். முடிப்பதற்குள் உயிர் போய்விடுகிறது.

"நான்தான் அவருக்குக் காரியங்கள் செய்தேன். கடையின் மீது நிறையக் கடன் இருந்ததால் கடன்காரர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். என் கையில் அந்தப் பத்தாயிரம் அப்படியே இருந்தது. செங்கல்பட்டுக்குப் போக வேண்டும் என்று நினைத்திருந்த போதுதான்—

"அந்த மண்ணடிக் கடையை ஒரு சாயபு விற்கப் போகிறார் என்று ஒரு தகவல் கிடைத்தது. நல்ல லாபம் கிடைக்கும் என்று என் சினேகிதன் ஒருத்தன் சொன்னான். எனக்கும் சொந்தத்தில் பிஸினஸ் செய்ய ஆசை... சாஸ்திரி என்னிடம் தந்த பத்தாயிரம்... அதற்குச் சாட்சியுமில்லை சம்மனுமில்லை...

"துணிந்து அந்த மோசடியைச் செய்து விட்டேன். அனாதை விடுதிக்காகத் தரப்பட்ட பணத்தை உபயோகித்தேன். மண்ணடி யில் ஸ்டீல் ஷீட் பிஸினஸ் பிரமாதமாய் நடக்க ஆரம்பித்தது.

"அந்த அனாதை விடுதியைச் சேர்ந்தவர்கள் சிலர் அவ்வப் போது என்னிடம் தர்மத்துக்காக வருவார்கள். எனக்கு மனச் சாட்சி உறுத்த ஆரம்பித்ததால் முடிந்த போதெல்லாம் நிறையவே கொடுத்தேன். ஆனால் அது நொடித்துக் கொண்டே யிருந்தது. ஏராளமான தொகை கொடுத்தால்தான் என் பாவத் தைக் கழுவிக் கொள்ள முடியுமென்று தோன்றியது. அதற்கு வழி பார்த்துக் கொண்டிருந்தேன்.

"சாஸ்திரி கொடுத்த அந்த தடித்த நோட்டில் என்னவோ கன்னா பின்னாவென்று கிறுக்கியிருந்தது. முதல் பார்வையின் போது அலட்சியமாக எறிந்துவிட்டேன். இரண்டு வருஷம் முந்தி இந்தப் புதுப் பங்களாவுக்குக் குடியேறியபோது மறுபடி அதைப் பார்க்க நேரிட்டது. புரட்டினேன். தங்கம் பண்ணுகிற வித்தை என்று ஏதோ போட்டிருந்தது. அதன்பிறகு தான் ஆர்வத்துடன் படித்துப் பார்த்தேன். மூன்று குடும்பங்கள் கூட்டாகப் பிரித்துக் கொண்ட ரசவாத ரகசியம் அது என்று புரிந்தது. அந்த ஒரு பகுதியை வைத்துக் கொண்டு என்ன ஆராயமுடியுமோ அதை யெல்லாம் செய்தேன். மிச்ச இரண்டு பகுதி யாரிடம் இருக்கும் என்று நடுநடுவே விசாரித்துக் கொண்டும் இருந்தேன்.

"பிஜு மகராஜுக்கு அந்த ரகசியம் தெரிந்திருக்கும் என்று சந்தேகம் வந்தது. போய்ப் பார்த்தேன். அன்று அவர் மட்டும் உண்மையை ஒப்புக்கொண்டு தன் ரகசியத்தையும் என் ரகசியத் தோடு பகிர்ந்து கொள்ள முன்வந்திருந்தாரானால் இத்தனை விபரீதம் நடந்திருக்காது..."

சித்தப்பா இன்னொரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார். நான் நின்று கொண்டே யிருந்தேன்.

"பிஜு மகராஜ் என்னிடம் பிடி கொடுத்துப் பேசவில்லை. ஒன்றும் பிரயோசனமில்லை என்று திரும்பி வந்துவிட்டேன். நீ ஆர்த்தியுடன் சேர்ந்து இதே விஷயத்தை துப்புத் துலக்கிக் கொண்டிருக்கிறாய் என்பதும் எனக்குத் தெரியாது.

"ஒரு நாள் ஆர்த்தியிடமிருந்து உனக்கு ஒரு கடிதம் வந்தது. அதை நீ பார்ப்பதற்கு முன்னால் நான் பார்த்து விட்டேன். பிஜு மகராஜிடமிருந்து ரசவாத ரகசியம் பற்றி நீ எடுத்துக் கொண்டு வந்திருந்த நோட்டு போலி என்றும், அசல் நோட்டு வேறொன்று இருக்கிறதென்றும் எழுதியிருந்தாள்.



"உடனே நான் சுறுசுறுப்படைந்தேன். ஒரு மாபெரும் ரகசியம் கையில் சிக்கியிருக்கும்போது அதை நீயும் ஆர்த்தியு மாகச் சேர்ந்து சிறு பிள்ளைத்தனமாகக் கெடுத்து விடக் கூடாதே என்று கவலைப்பட்டேன். ஆர்த்தியைத் தனியே சந்தித்தேன். என்னிடம் மூன்றாவது பகுதி இருக்கிறதென்றும் இரண்டு பேருமாய்ச் சேர்ந்து அந்த ரகசியத்தைக் கண்டு பிடிக்கலா மென்றும் யோசனை சொன்னேன். அவள் தயங்கினாள். உன்னிடம் சொல்ல வேண்டும் என்றாள். எல்லாம் வெற்றிகர மாக முடிந்த பிறகு உன்னிடம் சொல்லலாம் என்று நான் தான் தடுத்து விட்டேன்.

"அவள் எப்படியோ பாடுபட்டு பிஜு மகராஜ் வைத்திருந்த நோட்டை எடுத்து வந்தாள். நாங்கள் இரண்டு பேருமாய்த் தினம் அந்த முந்திரித் தோப்புக் கட்டிடத்துக்குப் போய், மூன்று நோட்டிலும் உள்ளதைச் சேர்த்து அதன்படி பரிசோதனைகள் செய்யத் தொடங்கினோம். அந்தக் கட்டிடம் என் சினேகிதர் ஒருவருடையது. விற்பனை செய்யும்படி என்னிடம் ஒப்படைத்திருந்தார்.

"பரிசோதனை விஷயத்தில் ஆர்த்திக்கு எதுவும் தெரிய வில்லை. நான் தான் முழுக்க முழுக்கச் செய்தேன். அப்போ தெல்லாம் நீ ஊரில் இல்லை.

"மூன்று பகுதிகளையும் இணைத்துப் படித்ததிலிருந்து, 'சொருபக் குளிகை' என்பதைத் தயாரித்தால், எந்தப் பொருளை யும் தங்கமாக்கலாம் என்று கண்டுகொண்டேன். நவசாரம், பூநீர், வெங்காரம், சீனம், பாறையுப்பு, வளையலுப்பு முதலியன சேர்த்துக் கரைத்து, பானையில் ஊற்றி, மனோசிலை, மிருதார் சிங்கி, கெந்தி முதலியவற்றைத் துணியில் முடிந்து அதற்குள் தொங்கவிட்டு, பானையை அடுப்பிலேற்றி, கமலாக்கினியாய் எரிக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டேன். அளவு,

நேரம், எப்போது காடாக்கினி யாய் எரிக்க வேண்டும் என்ற கணக்கு— இவ்வளவும் பரிசோதனை மூலம் அறிந்து, என் குறிப்புக்களையும் சேர்த்து எழுதி வைத்தேன்.

"ஆறு ஏழு நாட்கள் ஒரு பயனுமில்லாமல் ஓடிவிட்டது. எட்டாம் நாள் சாயந்தரம். கலவை கொதித்துக் கொண்டிருந்தது. ஆர்த்தி வாசற்புறம் சென்று யாரும் வராதிருக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தாள். நான் அடுப்பின் அருகே உட்கார்ந்து ஏதோ ஒரு சிறிய கல்லைக் கையில் வைத்து உருட்டிக் கொண்டிருந்தேன். திடீரென்று அது நழுவிக் கலவையில் விழுந்தது. அதை அகப்பையால் எடுத்து வெளியே எறியப் போன சமயம்—

"அதன் பளபளப்பைப் பார்த்துப் பிரமித்துப் போய்ச் சிலையாகி விட்டேன். ஆமாம் ஜனா! அந்தக் கல் தங்கமாயிருந்தது. 'ஆர்த்தி! ஆர்த்தி!' என்று வெறி பிடித்த மாதிரி கூச்சலிட்டேன். ஆர்த்தி ஓடி வந்தாள். இருட்டிலே என்ன தடுக்கியதோ, இடறி விழுந்தாள் தலை குப்புற. கொதிக்கும் பானையில்...

"அவள் தலை கலவையில் விழுந்த மறுவினாடி—

"சொன்னால் நம்ப மாட்டாய். இந்த உலகத்தில் யாரும் நம்ப மாட்டார்கள்.

"அது தங்கமாகிவிட்டது.

"ஒரு நிமிடத்தில் தலைவேறு உடம்பு வேறாகப் பிரிந்தும் விட்டது. அது உலோகம். இது சதை. எப்படிச் சேரும்?

"வெகு நேரம் வரை நான் பைத்தியம் போல் உட்கார்ந்திருந்தேன். எப்படிப்பட்ட விபரீதம் நடந்து விட்டது! எனக்குக் கை கால் நடுங்கியது."

கேட்டுக் கொண்டிருந்த எனக்கும் உடம்பு நடுங்கியது. நான் பார்த்தது ஆர்த்தியின் சிலையல்ல, ஆர்த்தியே! ஆர்த்தியே!



"தங்கமாகிவிட்ட தலையைப் புதைத்தேன். உடம்பைக் கடலில் கொண்டு போய்ப் போடுவது ஒருவனால் முடியக் கூடிய காரியமாயில்லை. பக்கத்திலிருந்த பிச்சிக்குப்பத்தில் ஒரு மீனவனைப் பிடித்தேன். பொன்னாகிவிட்ட அந்தக் கல்துண்டை அவனுக்கு லஞ்சமாகக் கொடுத்து, சரிக்கட்டினேன். இரண்டு பேருமாய் ஆர்த்தியின் தலையில்லா உடலைக் கடலில் எறிந்து விட்டுத் திரும்பினோம். அந்த மீனவர் முட்டாள்தனமாக அந்தப் பொன்துண்டை விற்கப் போய் மாட்டிக் கொண்டான் என்று தெரிந்ததும், அவன் வாயே திறக்காமலிருந்தால் இன்னும் நிறையப் பணம் தருவதாக பிச்சிக்குப்பத்திலிருக்கும் அவன் மனைவியிடம் ஆசைகாட்டிவிட்டு வந்தேன்.

"என் ரகசியத்தை யாரும் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்று நினைத்திருக்கையில் நீ மூக்கை நுழைத்தாய். உன்னை மண்டையில் அடித்து வீழ்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

"கொஞ்ச நாள் பேசாமலிருந்த பிறகு, இரண்டு நாள் முந்தி, புதைத்திருந்த தலையை எடுத்து வந்தேன். சாஸ்திரி அனாதை விடுதிக்கு உதவுவதற்கு மட்டும்தான் பணம் தேவைப்பட்டது. அதற்கு ஒரு பாதித் தலை தங்கம் போதும். அந்த அளவு அறுத்தெடுத்து, உருக்கி, துண்டுகளாக்கி, அனாதை விடுதி உண்டியில் போட்டுவிட்டேன். இன்னொரு பாதியை திரும்பக் கொண்டுபோய் புதைத்திருக்கிறேன்..."

சித்தப்பா பேச்சை நிறுத்திக்கொண்டு இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்தார். எரியும் நெருப்புக் குச்சியை அருகிலிருந்த குப்பைக் கூடையில் எறிந்தார். குபுக்கென்று தீ பிடித்தது.

அதை அணைப்பதற்காக ஓரடி முன்னே பாய்ந்தேன். "நகராதே!" என்று உறுமினார் அவர். கையில் ஒரு ரிவால்வர்

பளபளத்தது.

"எரிவது வெறும் காகிதமல்ல. ரசவாத ரகசியம்.அது என்னோடு அழியட்டும். இயற்கையின் தத்துவத்துக்கு விரோதமான எந்த விஷயமும் தீமையாகத்தான் முடியும்... அந்த ரகசியம் உலகுக்குத் தெரியாமலே போக வேண்டியதுதான். கிட்டே வராதே!..." துப்பாக்கி முனை என்னை நோக்கியது.

எரிந்து முடிந்தது. சித்தப்பா ரிவால்வரை மேஜைக்கடியில் போட்டார்.

கீழே போலீஸ் பூட்ஸின் டக் டக் கேட்டது.

காலங்குல உயரத்துக்குப் புல் வளர்ந்திருந்த தரை. ரொம்ப லேசாக ஈரம் படிந்திருந்ததால் கைக்குட்டையை விரித்து உட்கார்ந்திருந்தேன். முழங்கையை அகட்டினால் யார் மீதும் இடிக்காத அளவுக்குப் பரவலாக எல்லாரும் உட்கார்ந்திருந்தார்கள்.

அதே ஆலமரத்தின் கீழ் அதே மண்டியிட்ட போஸில் பிஜு மகராஜ் லெக்சர் கொடுத்துக் கொண்டிருக்கிறார். சன்னமாக, பிசிறில்லாத குரலில் அழகிய ஆங்கில நடையில் அவர் பேசுவது வார்த்தை வார்த்தையாகக் காதில் விழுகிறது. எல்லாம் முடிந்த பிற்பாடு இப்போது பார்க்கையில் எனக்கு அவர் கண்களில் கபடம் தெரியவில்லை. ஆனால் ஒரு வகையான சோகம் மட்டும் கலந் திருப்பதுபோல் தோன்றுகிறது.

"...எனக்கும், என்னுடன் நெருங்கிப் பழகிய இரண்டொருவருக்கும் மட்டுமே தெரியும் நான் எதற்காகச் சென்னை வந்தேன் என்று. என் மிஷனுக்கு உதவக்கூடும் என்று சில ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தேன். கடவுள் சித்தம் வேறு விதமாக இருந்ததால் அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அது மட்டுமல்ல, என் அன்புக்குரிய ஒருவரை இங்கே இழக்கவும்



நேரிட்டது..."

ஆர்த்தியின் மறைவைப் பற்றியும், இரும்பைத் தங்கமாக்கும் வித்தையில் அவள் பலியானதைப் பற்றியும் அவர் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். அதெல்லாம் நாளை முதல் பேப்பர்களில் பத்தி பத்தியாக வரத்தான் போகிறது.

அவர் தொடர்ந்தார். "நாளை மறுநாள் நான் வட இந்திய யாத்திரைக்குப் புறப்படுகிறேன். என்னுடன் சேர்ந்து கொள்ள விரும்புகிறவர்கள் காரியதரிசியிடம் பெயர் கொடுக்கலாம். 45 நாள் பயணம்..."

அப்பொழுதே, அக்கணமே எழுந்து சென்று என் பெயரை முதன் முதல் கொடுக்க என் மனம் துடித்தது. இனி இங்கே சென்னையில், தமிழ்நாட்டில், எனக்கு என்ன பிடிப்பு இருக்கிறது? ஆர்த்தியா இருக்கிறாள்— என் துயரத்தைப் பாதியாக்கவும் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கவும்?

சித்தப்பா... அன்று காலை சிறையில் அவரைச் சந்தித்தபோது, கம்பி வலைகளுக்கு அந்தண்டையில் இருந்தபடி அவர் கண்ணீர் மல்கச் சொன்னது காதில் ஒலித்தது. "ஜனா... எனக்கு மரண தண்டனையோ ஆயுள் தண்டனையோ கிடைக்கப் போவது நிச்சயம். எனக்குள்ள ஒரே வருத்தம் மண்டி கடையைக் கவனிக்காமல் விட்டுவிட்டோமே என்பதுதான். அதை நீ ஏற்று நடத்து. அதை நம்பிப் பல குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் நடுத் தெருவில் நிற்கும்படி விட்டு விடாதே. மானேஜர் நல்லவர். உனக்கு பிஸினஸ் வழிகளைச் சொல்லித் தருவார்..."

நான் ஆகட்டுமென்றும் சொல்லவில்லை, முடியாது என்றும் சொல்லவில்லை. ஆர்த்தியின் அந்தப் பயங்கரமான, நம்ப முடியாத முடிவையே நினைத்து நினைத்து என் மனம் பிரமையால் சுழன்று கொண்டிருந்தது. இதோ இப்போது

பிஜு மகராஜ் வட இந்திய யாத்திரைக்கு அழைக்கிறார். போனாலென்ன? இங்கே இன்னும் என்ன வாழுகிறது...

என் அருகில் மிக இனிமையான மணமொன்று வீசியது. ஒரு வழவழப்பான புடவையின் நுனிகள் காற்றில் மெல்லப் படபடத்து என்னை ஸ்பரிசித்தன. கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு வந்து கண்களைப் பக்கத்தில் ஓட்டி நோக்கினேன்.

ஏக்கத்துடன் என்னை நோக்கியபடி உட்கார்ந்திருந்த ஆர்த்தி— இல்லையில்லை— ஆர்த்தியின் தங்கை பாலா.

"நாளை மறுநாள் நீ பிஜு மகராஜுடன் போய்விடுவாய்? இல்லையா?" என்றேன்.

28633

"ஆமாம் நீங்கள் போனால்."

"நான் போகாவிட்டால்?"

"நானும் போகமாட்டேன்" —அவள் குரலில் உறுதி இருந்தது. பூப்போன்ற ஆர்த்தியல்ல. அவளைக் காட்டிலும் கடினமான உலோகத்தில் செய்யப்பட்டவள். இவள் கையைப் பற்றிக் கொண்டு பதினாலு லோகங்களைக் பார்க்கலாம்...

"நான் போகப் போவதில்லை," என்றேன்.

"நானும்தான்," என்றாள்.

—நிறைந்தது—